594

# பைந்தமிழ்ச் சோலை

[ நான்காம் படிவம் — சிறப்புப் பகுதி ]

574

22 AUG 1957
MADRAS

தொகுப்பாசிரியர்கள் :
புலவர் சா. மருதவாணன்
(தமிழாசிரியர், தூய மைக்கேல் உயர்நிலைப் பள்ளி, கோவை)

புலவர் சி. இளங்கோவன்
(தலைமைத் தமிழாசிரியர்,
காணிக்கையன்னைப் பெண்கள் உயர்நிலைப் பள்ளி, கோவை)

LOTUS PUBLISHERS
MADRAS.

ாட்டஸ் பப்ளிஷர்ஸ்
ண்டி செட்டித் தெரு, சென்னை-1.

TB
031(9)
N57
146494.

# பைந்தமிழ்ச் சோலை

[ நான்காம் படிவம் — சிறப்புப் பகுதி ]

தொகுப்பாசிரியர்கள் :

புலவர் சா. மருதவாணன்

(தமிழாசிரியர், தூய மைக்கேல் உயர்நிலைப் பள்ளி, கோவை)

புலவர் சி. இளங்கோவன்

(தலைமைத் தமிழாசிரியர்,

காணிக்கையன்னைப் பெண்கள் உயர்நிலைப் பள்ளி, கோவை)

லோட்டஸ் பப்ளிஷர்ஸ்

2, கொண்டி செட்டித் தெரு, சென்னை-1.

உரிமைப் பதிவு]

[விலை ந. பை. 75

முதற் பதிப்பு, அக்டோபர்—1956
இரண்டாம் பதிப்பு, மே—1957
மூன்றும் பதிப்பு, ஜூலை—1957

TB
031(9)
N57

(Approved by the T.B.C. vide Page No. 20 dated 10-4-'57)

*(Printed from 16 lbs. Demy Indian White Printing)*

தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகம்
146494.
சென்னை-600 008.

ஞானோதயா பிரஸ், 11, ஆண்டர்சன் தெரு, சென்னை—1.

# முகவுரை

இச்செய்யுள்-உரைநடை நூல் நான்காம் படிவம் சிறப்புப் பகுதிக்கு உரியது; கல்வித் துறையினர் வெளியிட்டுள்ள பாட இயலை உளங்கொண்டு கோவை செய்யப்பட்டது.

சிறப்புப் பகுதியில் 200 வரிகளைக் கொண்ட செய்யுட் பகுதி வேண்டுமென்பது பாட இயலின் விதி. இந்நூலில் ஏறத்தாழ 260 வரிகள் தரப்பட்டுள்ளன.

ஒவ்வொரு செய்யுட் பகுதியின் முதலில் ஆசிரியர் குறிப்பும், நூலின் விளக்கமும், ஈற்றில் அருஞ்சொற்பொருள், கேள்விகள், பயிற்சி என்பனவும் தரப்பட்டுள்ளன. அவற்றுடன் தேவையான இலக்கணக் குறிப்புகளும் தரப்பட்டுள்ளன.

பாட இயலின் விதிப்படி உரைநடைப் பகுதி இராயல் 20–30 பக்க அளவில் இருத்தல் வேண்டும். இதனை உளங் கொண்டே இந்நூலில் 7 பாடங்கள் தரப்பட்டுள்ளன. ஒவ் வொரு பாடத்தின் முதலில் ஆசிரியர் குறிப்பும், ஈற்றில் அருஞ் சொற்பொருள், கேள்விகள், பயிற்சி என்பனவும் தரப் பட்டுள்ளன.

மாணவர் பிறர் துணையின்றித் தாமே முயன்று செய்யுட் களையும் உரைநடைப் பாடங்களையும் படித்து உணரக்கூடிய முறையில் இந்நூல் அமைக்கப்பட்டிருக்கிறது. வருங்கால உலகின் சிறந்த அறிஞர்களாக மாணவர்கள் திகழ்தல் வேண்டு மென்ற நோக்கத்துடனேயே இப்புத்தகம் தொகுக்கப் பட்டுள்ளது.

செய்யுட் பகுதியிலும் உரைநடைப் பகுதியிலும் உள்ள பகுதிகளைச் சேர்க்க இசைவு தந்த பெரியார்களுக்கும், செய்யுள் உரைநடைப் பகுதிகளை நன்கு பார்வையிட்டுச் செவ்வையாகப் பதிப்பித்து உதவிய C. A. H. இந்து முஸ்லிம் உயர்நிலைப் பள்ளித் தலைமைத் தமிழாசிரியர் புலவர் பு. செல்வராசனார் அவர் கட்கும் எங்களது உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

இந்நூலை மாணவர்கட்குப் பயன்படச் செய்யும் அறிஞர் அனைவர்க்கும் என்றும் நன்றி பாராட்டும் கடப்பாடுடையோம்.

**ஆசிரியர்கள்**

# உ ள் ளு றை

## செய்யுட்பகுதி


| எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| I. | வாழ்த்து | |
| 1. | கடவுள் வாழ்த்து | |
| (1) | திருவாசகம் | 1 |
| (2) | திருவருட்பா | 2 |
| (3) | மனோன்மணீயம் | 3 |
| II. | அறவுரை | |
| 1. | திருக்குறள் | 5 |
| 2. | புறநானூறு | 9 |
| 3. | நாலடியார் | 12 |
| III. | கதை | |
| 1. | சிலப்பதிகாரம் | 14 |
| 2. | கம்பராமாயணம் | 18 |
| IV. | புனைந்துரை | |
| 1. | முகில் | 24 |
| 2. | தென்றல் | 26 |
| 3. | மலர்கள் | 27 |
| V. | சிறு நூல்கள் | |
| 1. | மீனாட்சியம்மை குறம் | 29 |
| 2. | பாரதியார் பாடல்கள் | 30 |
| 3. | மாரி வாயில் | 31 |
| VI. | பல்சுவைப் பகுதி | |
| 1. | கலிங்கத்துப் பரணி | 33 |
| 2. | புறநானூறு | 33 |
| 3. | முத்தொள்ளாயிரம் | 34 |
| 4. | சிலேடை | 35 |

## உரைநடைப் பகுதி

1. சுவைப் பொருள் 37

—தொல்காப்பிய மெய்ப்பாட்டியல் பேராசிரியருரை

2. முத்தமிழ் 40

—திரு. வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார் அவர்கள், B.A.

3. பட்டினப்பாலை 45

—டாக்டர் மா. இராசமாணிக்கனார் அவர்கள் M.A., L.T., M.O.L., (Ph.D.)

4. பண்டை ஆட்சி முறை 53

—வித்வான் பு. செல்வராசனார் அவர்கள்

5. நமது நல்வாழ்வு 62

—புலவர் சா. மருதவாணன் அவர்கள்

6. உடலோம்பல் 69

—திரு. வி. கலியாணசுந்தரனார் அவர்கள்

7. திருவிழா 75

—திரு. பண்டித நாவல ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள்

## இசைவு தந்த அறிஞர் பெருமக்களுக்கு
## எங்கள் வணக்கமும் நன்றியும்

| | |
|---|---|
| முத்தமிழ் | —திரு. வி. சூ. சுவாமிநாதன் அவர்கள் |
| பட்டினப்பாலை | —பழனியப்பா பிரதர்ஸ், திருச்சிராப்பள்ளி |
| திருவிழா | —திரு. நாவலர் ந. மு. வே. நடராசன் அவர்கள், B.SC. |
| முகில் | —திரு. வி. சூ. சுவாமிநாதன் அவர்கள் |
| மாரிவாயில் | —திரு. ச. சோமசுந்தர பாரதியார் அவர்கள், M.A., B.L. |
| தென்றல் | —புரட்சிக் கவிஞர் பாரதிதாசனார் அவர்கள், M.L.A. |

# நாட்டு வணக்கம்

ஜன கண மன அதிநாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
த்ராவிட உத்கல வங்கா
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா
தவசுப நாமே ஜாகே
தவசுப ஆசிஷ மாங்கே
காயே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
ஜயஹே ஜயஹே ஜயஹே
ஜய ஜய ஜய ஜயஹே

—மகாகவி இரவீந்திரநாத தாகூர்.

## தேசீய கீதம்

இந்தியாவின் சுகதுக்கங்களை நிர்ணயிக்கிற நீதான்
மக்கள் எல்லாருடைய மனத்திலும் ஆட்சி
செலுத்துகிருய்.

நின் திருநாமம், பஞ்சாப்பையும் சிந்துவையும்
குஜராத்தையும் மஹாராஷ்டிரத்தையும்
திராவிடத்தையும் ஒரிஸாவையும் வங்காளத்
தையும்

உள்ளக் கிளர்ச்சி யடையச் செய்கிறது.
அது விந்திய ஹிமாலய மலைகளில் எதிரொலிக்கிறது;
யமுனை கங்கை நதிகளின் இன்ப நாதத்தில்
கலக்கிறது;

இந்தியக் கடல் அலைகளால் ஜபிக்கப்படுகிறது.
அவை நின் ஆசியை வேண்டுகின்றன;
நின் புகழைப் பாடுகின்றன;
இந்தியாவின் சுகதுக்கங்களை நிர்ணயிக்கிற உனக்கு
வெற்றி, வெற்றி, வெற்றி.

# நான்காம் படிவம்

## சிறப்புப் பகுதி

## I. கடவுள் வாழ்த்து

### 1. *திருவாசகம்*

திருவாசகம்–இத்தொடருக்கு அழகிய மொழிகளைக் கொண்ட நூல் என்பது பொருளாகும். இது திரு என்னும் அடையடுத்த கருவியாகு பெயர். கீழ்வரும் பாடல் 'பிடித்த பத்து' என்னும் பதிகத்தின் ஒன்பதாவது செய்யுளாகும்.

**நூலாசிரியர்:** மாணிக்கவாசகர். ஊர்: திருவாதவூர். குலம்: மறையவர்: காலம்: கி. பி. 3-ஆம் நூற்றாண்டு. சிலர் கி. பி. 9-ஆம் நூற்றாண்டென்பர். இவர் திருப்பெருந்துறையில் இறையருள் பெற்றார். தொழில்: அரிமர்த்தன பாண்டியனிடம் அமைச்சர் பணியாற்றுதல்.

பால்நினைந் தூட்டும் தாயினும் சாலப்
    பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
    உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
    செல்வமே! சிவபெருமானே!
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
    எங்கெழுந் தருளுவ தினியே

—மாணிக்கவாசகர்

### அருஞ்சொற்பொருள்

நினைந்து - பசிக்கும் காலம் அறிந்து; பரிந்து - அன்பு கொண்டு இரங்கி; உள்ளொளி - உள்ளத்தில் தோன்றும் அறிவொளி; உலப்பு இலா - கெடுதல் இல்லாத; சிக்கென - விரைந்து.

சால - உரிச்சொல். இலா - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்,

## 2. திருவருட்பா

திருவருட்பா - திரு + அருள் + பா என்னும் மூன்று சொற்களால் ஆகிய ஒரு தொடர். இறைவனது திருவருளினால் தோன்றிய பாடல் என விரியும். இது மூன்றன் உருபும் பயனும் உடன்தொக்க தொகை. இந்நூல் ஏறத்தாழ ஆயிரம் பாக்கள் உடையது; ஆறு திருமுறைகளாகப் பகுக்கப்பெற்றது.

நூலாசிரியர்: இராமலிங்க அடிகளார். தாய்: சின்னம்மை; தந்தை: இராமையாபிள்ளை. குலம்: கருணீகர். சமயம்: சமரச சுத்த சன்மார்க்கம். ஊர்: சிதம்பரத்திற்கு அண்மையிலுள்ள மருதூர். காலம்: கி. பி. 1823 – 1873. தொழுவூர் வேலாயுத முதலியார், நா. கதிரைவேற்பிள்ளை முதலியோர் இவர் காலப் புலவர்களாவர்.

கல்லார்க்கும் கற்றவர்க்கும் களிப்பருளும் களிப்பே!
காணார்க்கும் கண்டவர்க்கும் கண்ணளிக்கும்
கண்ணே!
வல்லார்க்கும் மாட்டார்க்கும் வரமளிக்கும் வரமே!
மதியார்க்கும் மதிப்பவர்க்கும் மதிகொடுக்கும் மதியே!
நல்லார்க்கும் பொல்லார்க்கும் நடுநின்ற நடுவே!
நரர்களுக்கும் சுரர்களுக்கும் நலங்கொடுக்கும் நலமே!
எல்லார்க்கும் பொதுவில் நடமிடுகின்ற சிவமே!
என்னரசே! யான்புகலும் இசையும் அணிந்தருளே!

—இராமலிங்க அடிகள்

### அருஞ்சொற்பொருள்

களிப்பு - மகிழ்ச்சி; கண்டவர் - தன்னை வணங்கியவர்: கண் அளிக்கும் - அறிவுக் கண்ணைக் கொடுத்தருளுகின்ற; நரர் - மனிதர்; சுரர் - தேவர்; புகலும் - சொல்லுகின்ற; இசையும் - உன் புகழ் அமைந்த பாமாலையும்.

இசையும் - இழிவு சிறப்பும்மை; கல்லார், கற்றவர், வல்லார், மாட்டார் - வினையாலணையும் பெயர்கள்; களிப்பே, கண்ணே, வரமே, மதியே, நடுவே, நலமே - உருவகங்கள்; அரசே - விளிவேற்றுமை, ஈறு கெட்டு ஈற்றயல் நீண்டது. இச்செய்யுளில் முதல் 6 வரிகளிலும் முரண் தொடை அமைந்திருத்தல் காண்க.

# 3. மனோன்மணீயம்

## தமிழ்த்தாய் வாழ்த்து

**மனோன்மணீயம்** - மனோன்மணியின் கதையினைக் கூறும் நூல் எனப் பொருள்படும். வடமொழி இலக்கணப்படி தத்திதாந்த நாமம். இப்போதுள்ள நாடக நூல்களிலெல்லாம் இது தலைசிறந்ததாகும். இது ஐந்து அங்க நாடகமாகச் செய்யுள் நடையில் இயற்றப்பட்டுள்ளது.

**நூலாசிரியர்:** பேராசிரியர் பெ. சுந்தரம் பிள்ளை, M. A. தாய்: மாடத்தியம்மை. தந்தை: பெருமாள் பிள்ளை. குலம்: வேளாளர். ஊர்: திருவிதாங்கூரைச் சேர்ந்த ஆலப்புழை. சமயம்: சைவம். காலம் கி. பி. 1855—1897. இவர் நூற்றொகை விளக்கம், ஞானசம்பந்தர் கால ஆராய்ச்சி முதலிய நூல்களையும் எழுதியுள்ளார்.

பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துத் துடைக்கினுமோர்
எல்லையறு பரம்பொருள்முன் இருந்தபடி இருப்பதுபோல்
கன்னடமுங் களிதெலுங்குங் கவின்மலையாளமுந் துளுவும்
உன்னுதரத் துதித்தெழுந்தே ஒன்றுபல ஆயிடினும்
ஆரியம்போ லுலகவழக் கழிந்தொழிந்து சிதையாவுன்
சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே!

—பேராசிரியர் பெ. சுந்தரம் பிள்ளை

## அருஞ்சொற்பொருள்

எல்லையறு - எல்லையற்ற, எல்லைகூறமுடியாத; பரம்பொருள் - மேலான இயல்புடைய கடவுள்; அளித்து - காப்பாற்றி; கவின் - அழகு; உதரம் - வயிறு; ஆரியம் - வடமொழி; போல் - உவமை உருபு; வாழ்த்துதுமே - தன்மைப் பன்மை வினைமுற்று.

### பயிற்சி

**I. விடை எழுதுக:**

1. இறைவன் அளித்த பேறாக மாணிக்கவாசகர் எதனைக் குறிப்பிடுகின்றார்?

2. சிவபெருமான் அடியவர்களை என்னென்ன செய்கின்றார்?

3. 'பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப்பரிந்து'—எனும் தொடரின் கருத்தை நன்கு விளக்கி வரைக.

4. இறுதி இரு வரிகளில் மாணிக்கவாசகர் கூறுவதன் கருத்து யாது?

5. இராமலிங்க அடிகள் கூறியுள்ள இறைவனின் சமரசத் தன்மைகள் யாவை?

6. 'எல்லார்க்கும் பொதுவில்' - எனும் தொடர் எவரெவரைக் குறிக்கின்றது?

7. நரர்களுக்கும் சுரர்களுக்கும் நலங்கொடுக்கும் நலம்-விளக்குக.

8. தமிழை இறைவனோடு ஆசிரியர் எவ்வாறு ஒப்பிடுகின்றார்?

9. தமிழின் வயிற்றில் பிறந்த மொழிகள் யாவை?

10. சீரிளமைத்திறம் - இதனை நன்கு விளக்கி வரைக.

11. இச்செய்யுளின் நயத்தினை விளக்குக.

II. குறிப்பு வரைக:

1. புறம், புறந்திரிந்த செல்வம், ஊனினை உருக்கி, சிக்கெனப் பிடித்தேன்.

2. மாணிக்கவாசகரின் செய்யுளை உரைநடையாக வரைக.

III. ஒரே வரியில் கல்லார் × கற்றவர் என்பதுபோல், எதிர்ச்சொற்களை அமைத்துப் பாடுதல் முரண் தொடை எனப்படும். முரண்சொற்கள் வைத்துத் தொடுத்தல் முரண்தொடையாம். இராமலிங்க அடிகளின் செய்யுளில் உள்ள முரண் தொடைகளை எடுத்து எழுதுக.

VI. 1. பல்+உயிர் - பல்லுயிர் - இவ்வாறே பலவுலகும், படைத்தளித்து, உன்னுதரத்துதித்தெழுந்து, சீரிளமை - இவைகளைப் பிரித்து எழுதுக.

2. தமிழ்த்தாய் வாழ்த்தினை உரைநடைப்படுத்துக.

3. இச்செய்யுளில் காணப்படும் உவமையை உவமேயத்துடன் பொருத்தி விளக்குக.

4. இச்செய்யுட் கருத்தை யடக்கி ஒரு கட்டுரை வரைக.

# II அறவுரை

## 1. திருக்குறள்

**திருக்குறள்** - பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்று. கடைச் சங்க நூல்களை மேற்கணக்கு என்றும் கீழ்க் கணக்கு என்றும் பிரிப்பர். மேற்கணக்கு, கீழ்க்கணக்கு என்பவை செய்யுட்களின் அடியளவைக் கொண்டு பிரிக்கப்பட்டவை. மேற் கணக்கில் பதினெட்டு நூல்களும், கீழ்க்கணக்கில் பதினெட்டு நூல்களும் உள. கீழ்க்கணக்கு நூல்களை,

நாலடி நான்மணி நானாற்ப தைந்திணைமுப்
பால்கடுகம் கோவை பழமொழி மாமூலம்
இன்னிலைய காஞ்சியோ டேலாதி யென்பவே
கைந்நிலைய ஆங்கீழ்க் கணக்கு.

என்னும் செய்யுளால் அறியலாம்.

திருக்குறள் உலகமக்கள் அனைவர்க்கும் ஏற்ற நல்லுரைகளைக் கூறுவது. அதனால் இது மேனாட்டு மொழிகளிலும் பெயர்க்கப்பட்டுள்ளது. இஃது அறத்துப்பால், பொருட்பால், காமத்துப் பால் என்னும் மூன்று பிரிவுகளைக் கொண்டது. இதனால் இந்நூல் முப்பால் எனும் பெயர் பெற்றது. இதில், அறத்துப்பால் 38 அதிகாரங்களையும், பொருட்பால் 70 அதிகாரங்களையும், காமத்துப்பால் 25 அதிகாரங்களையும் கொண்டுள்ளன. ஆகமொத்தம் இந்நூல் 133 அதிகாரங்களையும் 1330 குறட்பாக்களையும் உடையது.

**நூலாசிரியர்:** திருவள்ளுவர். காலம்: கி. பி. முதல் நூற்றாண்டென்பர். அரசருக்கு அந்தரங்க ஆலோசனை கூறும் ஓர் அரசியல் அதிகாரியை வள்ளுவர் என்பர். அத்தகைய பணியை ஏற்றிருந்தமையின் இவர்தம் இயற்பெயர் மறைந்து சிறப்புப் பெயராகிய வள்ளுவர் என்பதே வழங்குவதாயிற்று. பிற வரலாறுகளுக்குத் தக்க ஆதாரங்கள் இல்லை.

### ஒழுக்கமுடைமை

1. ஒழுக்கம் விழுப்பந் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்.

2. பரிந்தோம்பிக் காக்க ஒழுக்கந் தெரிந்தோம்பித்
தேரினும் அஃதே துணை.

3. ஒழுக்க முடைமை குடிமை இழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும்.

4. மறப்பினும் ஒத்துக் கொளலாகும் பார்ப்பான்
பிறப்பொழுக்கங் குன்றக் கெடும்.

5. அழுக்கா றுடையான்கண் ஆக்கம்போன் றில்லை
ஒழுக்க மிலான்கண் உயர்வு.

6. ஒழுக்கத்தி னொல்கார் உரவோர் இழுக்கத்தின்
ஏதம் படுபாக் கறிந்து.

7. ஒழுக்கத்தி னெய்துவர் மேன்மை இழுக்கத்தின்
எய்துவ ரெய்தாப் பழி.

8. நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கந் தீயொழுக்கம்
என்றும் இடும்பை தரும்.

9. ஒழுக்க முடையவர்க் கொல்லாவே தீய
வழுக்கியும் வாயாற் சொலல்.

10. உலகத்தோ டொட்ட ஒழுகல் பலகற்றுங்
கல்லா ரறிவிலா தார்.

## கேள்வி

1. செல்வத்துட் செல்வஞ் செவிச்செல்வம் அச்செல்வஞ்
செல்வத்து ளெல்லாந் தலை.

2. செவிக்குண வில்லாத போழ்து சிறிது
வயிற்றுக்கும் ஈயப் படும்.

3. செவியுணவிற் கேள்வி யுடையார் அவியுணவின்
ஆன்றாரோ டொப்பர் நிலத்து.

4. கற்றில னாயினுங் கேட்க அஃதொருவற்
கொற்கத்தின் ஊற்றாந் துணை.

5. இழுக்க லுடையுழி ஊற்றுக்கோ லற்றே
ஒழுக்க முடையார்வாய்ச் சொல்.

6. எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்.

7. பிழைத்துணர்ந்தும் பேதைமை சொல்லா ரிழைத்
தீண்டிய கேள்வி யவர். [துணர்ந்

8. கேட்பினுங் கேளாத் தகையவே கேள்வியால்
தோட்கப் படாத செவி.

9. நுணங்கிய கேள்விய ரல்லார் வணங்கிய
வாயின ராத லரிது.

10. செவியிற் சுவை யுணரா வாயுணர்வின் மாக்கள்
அவியினும் வாழினு மென்.

—திருவள்ளுவர்

## அருஞ்சொற்பொருள்

**ஒழுக்கமுடைமை :**

1. விழுப்பம் - உயர்வு; ஓம்பப்படும் - பாதுகாக்கப்படும்; உயிரினும் - சிறப்பும்மை ; ஒழுக்கம் - தொழிற் பெயர்.

2. பரிந்து - வருந்தி ; தெரிந்து - அறநூல்களை ஆய்ந்து; தேறினும் - தெளிந்தாலும்; ஓம்பி - வினையெச்சம்; காக்க - வியங்கோள் வினைமுற்று.

3. குடிமை - உயர்குடிப்பிறப்பு ; இழுக்கம் - ஒழுக்கத்தில் தவறுதல்; இழுக்கம் - தொழிற் பெயர்; இழிந்த - பெயரெச்சம்.

4. ஓத்து - நூல்கள்; பார்ப்பான் - ஆராய்ந்து பார்ப்பவன். மறப்பினும் - எதிர்மறை உம்மை; கெடும் - செய்யும் என்னும் வாய்பாட்டு வினைமுற்று.

5. அழுக்காறு - பொறாமை; ஆக்கம் - செல்வம்; அழுக்காறு - முதனிலை திரிந்த தொழிற்பெயர்; ஆக்கம் - தொழிற்பெயர்.

6. ஏதம் - துன்பம்; படுபாக்கு - உண்டாவதை, ஒல்கார் - தளரார்; படுபாக்கு - வினையெச்சம்; ஒல்கார் - எதிர்மறை வினைமுற்று.

7. எய்துவர் - அடைவர்; பழி - பலரும் இழித்துப் பேசுவது; எய்தா - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்; எய்துவர் - பலர்பால் வினைமுற்று.

8. வித்து - விதை; இடும்பை - துன்பம்; நல்லொழுக்கம் - பண்புத் தொகை.

9. வழுக்கியும் - தவறியும்; ஒல்லா - முடியா; ஒல்லா - பலவின் பால் வினைமுற்று. உடையவர் - வினையாலணையும் பெயர்.

10. ஒட்ட - பொருந்த; உலகத்தோடு - உலகில் வாழும் உயர்ந்த அறிஞர்களோடு; உலகம் - இடவாகுபெயர்; ஒட்ட - பெயரெச்சம்.

கேள்வி :

1. செவிச் செல்வம் - காதால் கேட்கப்படுகின்ற கேள்விச் செல்வம்; தலை - உயர்வானது; இப்பாடல் சொற்பொருட்பின்வருநிலை அணி. செவிச் செல்வம் - மூன்றும் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை.

2. போழ்து - சமயம்; ஈயப்படும் - கொடுக்கப்படும்; வயிற்றுக் கும் - இழிவு சிறப்பும்மை.

3. ஆன்றோர் - தேவர்; அவி உணவு - வேள்வி உணவு; (இரு பெயரொட்டுப் பண்புத் தொகை); கேள்வி - தொழிற் பெயர்.

4. ஒற்கத்தின் - தளர்ச்சி வந்தபோது; ஊற்று - ஊன்றுகோல்; கேட்க - வியங்கோள் வினைமுற்று.

5. இழுக்கல் - வழுக்கல்; இழுக்கல் - தொழிற்பெயர். இச்செய் யுள் உவமையணி.

6. ஆன்ற - நிறைந்த; நல்லவை - நன்மை தரும் உறுதிப் பொருள் களை; கேட்க - வியங்கோள் வினைமுற்று.

7. ஈண்டிய - திரண்ட. பேதைமை - அறியாமையை உணர்த்தும் சொற்கள் (ஆகுபெயர்).

8. தோட்கப்படாத - துளைக்கப்படாத; கேளா - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.

9. நுணங்கிய - நுட்பமான; வாயினர் - சொற்களையுடையவர்; நுணங்கிய - பெயரெச்சம்; வாய் - கருவியாகு பெயர்.

10. மாக்கள் - பகுத்தறிவற்றவர்கள்; உணரா - ஈறுகெட்ட எதிர் மறைப் பெயரெச்சம்; அவியினும் வாழினும் - முரண்தொடை.

## பயிற்சி

**1. விடை எழுதுக :**

1. ஒழுக்கம் எதனினும் சிறந்தது-ஏன் ?
2. ஒழுக்கத்தினை ஒருவன் ஏன் சிறப்பாகப் பாதுகாக்கவேண்டும்?
3. நல்லொழுக்கம், தீயொழுக்கம் இவற்றின் விளைவுகள் யாவை?
4. ஒழுக்கம் உடையவர் எத்தகைய சிறப்படைவார் ?
5. எது குடிமை? எது இழிந்த பிறப்பாகும் ?

6. என்றும் இடும்பை தருவது எது?

7. பல கற்றும் அறிவிலாதார் யாவர்?

8. கேள்விச் செல்வத்தின் பெருமையை விளக்குக?

9. அவியுணவின் ஆன்றுரோடு ஒப்பவர் யார்? எவ்வாறு?

10. கேள்வியுடையவர் எய்தும் நன்மைகள் யாவை?

11. கேட்டலின் இன்றியமையாமையை வள்ளுவர் எங்ஙனம் வற்புறுத்துகின்ருர்?

12. கேள்வி அறிவு அற்றவரை வள்ளுவர் எவ்வாறு இழித்துக் கூறியுள்ளார்? ஏன்?

13. "எனைத்தானும் நல்லவை கேட்க"—ஏன்?

14. பிழைத்துணர்ந்தும் பேதைமை சொல்லார்—எவர்?

15. கேட்பினும் கேளாச் செவிகள் எனப்பட்டதேன்?

16. இவ்வதிகாரத்தில் வெகுளிச் சுவையடங்கிய குறள் யாது?

II. பிரித்து எழுதுக:

1. பரிந்தோம்பி. 2. ஒழுக்கமுடைமை. 3. அழுக்காறுடையான். 4. நல்லொழுக்கம். 5. கல்லாரறிவிலார். 6. கற்றிலனுயினும். 7. பிழைத்துணர்ந்தும். 8. வாயுணர்வின். 9. கேள்வியரல்லார்.

III. உறுப்பிலக்கணம் தருக:

1. கற்றிலன்; 2. ஒற்கம்; 3. கேட்க; 4. பொய்யற்க; 5. ஒல்கார்.

## 2. புறநானூறு

புறநானூறு: புறம் + நானூறு = புறநானூறு. புறப்பொருளைப்பற்றிய நானூறு பாடல்களைக் கொண்ட நூல் என விரியும். இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. இந்நூல் தமிழ் நாட்டின் கருவூலம். இது நம் நாட்டை யாண்ட முடியுடை மூவேந்தர்களைப்பற்றியும், குறுநில மன்னர்களைப் பற்றியும், கொடையிற்சிறந்த வள்ளல்களைப் பற்றியும், சிறந்த செந்தமிழ்ப் புலவர்களைப்பற்றியும், பழங்காலத் தமிழகப் பண்பாட்டைப் பற்றியும் அறிந்துகொள்ளுவதற்குப் பயன்படும். இஃது எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று. ஏனைய நூல்கள்: நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு என்பனவாம்.

இந்நூல் தொல்காப்பியத்திற்கு இலக்கியமாய் ஒவ்வொரு பாட்டும் புறப்பொருள் திணை, துறைகளைக் கொண்டுள்ளது. திணை என்பது மக்

கள் ஒழுக்கமாகும். துறை என்பது மக்கள் வாழ்க்கைக்குரிய நெறியாகும்.

1. ஈன்று புறந்தருத லென்றலைக் கடனே
சான்றோ னாக்குதல் தந்தைக்குக் கடனே
வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே
நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே
ஒளிறுவா ளருஞ்சம முருக்கிக்
களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே.

—பொன்முடியார்

திணை : வாகை. துறை : மூதின் முல்லை.

2. நாடா கொன்றோ காடா கொன்றோ
அவலா கொன்றோ மிசையா கொன்றோ
எவ்வழி நல்லவ ராடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே.

—ஔவையார்

திணை : பொதுவியல். துறை : பொருள்மொழிக்காஞ்சி.

## குறிப்புரை

1. பொன்முடியார் - இவர் பெண்பாற் புலவர்; கடைச்சங்க காலத்தின் முற்பகுதியில் வாழ்ந்தார் என்பர் ஆராய்ச்சியாளர். இவர் எழுதியதாகத் தகடூர் யாத்திரை எனும் நூல் ஒன்று இருந்து மறைந்ததாகக் கூறப்படுகிறது. இவர் சிறந்த வீரர் மரபில் பிறந்தவர் என்பதும், புலமை மிக்கவர் என்பதுந் தவிர, மற்றை விவரங்கள் அறியக்கூடவில்லை.

வாகைத்திணை :–பகைவரை வெல்லுதல் வாகைத்திணை எனப்படும். வெற்றியைக்காட்ட வீரர் வாகைப்பூவைச் சூடிக்கொள்வர். ஆதலின் இதற்கு வாகைத்திணை எனப் பெயர் வந்தது; வாகை என்பது பாலை நிலத்துக்குரிய மரவகைகளுள் ஒன்று.

துறை - மூதின் முல்லை - வீரர்க்கு மட்டுமல்லாது, வீரர்குடியில் பிறந்த பெண்மக்களுக்கும் சிறந்த முறையில் வீர உணர்ச்சி உண்டு என்பதை இத்துறை காட்டுகிறது.

2. ஔவையார் - இவர் சங்ககாலத்தில் வாழ்ந்த நல்லிசைப் புலவர்களுள் சிறந்த ஒரு பெண்பாற் புலவர். தன்னை உண்டாரை நீண்டநாள் வாழச் செய்யவல்ல நெல்லிக்கனி ஒன்றை அதியமான் அருமை

யாக முயன்று பெற்று ஔவைக்களிக்க, அதனையுண்டு ஔவை நீண்ட காலம் வாழ்ந்ததாகக் கூறப்படுவதுண்டு. இவர் அதியமானுக்காகத் தொண்டைமானிடம் தூது சென்று பெரும்போர் ஒன்றை நடவாது நிறுத்தினர். இவர் பாடல்கள், அகநானூறு, புறநானூறு, நற்றிணை, குறுந்தொகை முதலியவற்றில் காணப்படுகின்றன.

திணை - பொதுவியல் - புறத்திணைகளுக்கெல்லாம் பொதுவாயுள்ளது. புறத்திணைகளில் கூருமல் விடப்பட்டவற்றைக் கூறுவது.

துறை - பொருள்மொழிக்காஞ்சி - சான்ருேர் தாங்கள் அறிந்து தெளிந்தவற்றை அறிவுரையாக மற்றையோர்க்கு எடுத்துரைப்பது.

## அருஞ்சொற்பொருள்

1. ஈன்று - பெற்று; தலை - முதன்மையான; சான்ருேர் - கல்வி கேள்வி ஒழுக்கம் முதலியவற்ருல் சிறந்தோர்; நன்னடை - நல்ல ஒழுக்கம்; களிறு - ஆண்யானை; திணை - ஒழுக்கம்; வாகை - வெற்றி; நன்னடை - பண்புத்தொகை; பெயருதல் - தொழிற் பெயர்; களிறெறிந்து - இரண்டாம் வேற்றுமைத் தொகை; காளை - உவமை ஆகுபெயர்.

2. அவல் - பள்ளம். மிசை - மேடு; வாழிய - வியங்கோள் வினை முற்று.

## பயிற்சி

**I. விடை எழுதுக :**

1. பொன்முடியார் கூறும் கடமைகள் யாவை?
2. இச்செய்யுள் வாகைத்திணையில் அடக்கப்பட்டது ஏன்?
3. திணை, துறை என்பவை யாவை?
4. மூதின் முல்லை என்ருல் என்ன?
5. ஔவையார் எது நல்ல நாடாகும் என்று சொல்லுகிருர்? ஏன்?
6. அவலாகொன்ருே, மிசையாகொன்ருே - பொருள் வரைக.
7. பொதுவியல், பொருள்மொழிக் காஞ்சி என்பவற்றை விளக்குக.

**II. பிரித்து எழுதுக :**

நன்னடை, புறந்தருதல், களிறெறிந்து, சான்ருேனுக்குதல், நல்லவராடவர், அவலாகொன்ருே; மிசையாகொன்ருே.

**III. எதிர்ச்சொல் தருக :**

நாடு, அவல், நல்லவர், ஆடவர், நல்லை.

## 3. நாலடியார்

நாலடியார்: நான்கு அடிகளை உடைய வெண்பாக்களால் ஆகிய ஒரு நீதி நூல்: சிறந்த அறவுரைகளைக் கொண்டது. திருக்குறளுக்கு அடுத்தபடியாக வைத்தெண்ணப்படுவது. நாலும் இரண்டும் சொல்லுக் குறுதி என்பர். அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்ற மூன்று பிரிவுகளைக் கொண்டது; 400 வெண்பாக்களை உடையது; இந்நூல் கடைச் சங்க காலத்தைச் சார்ந்தது. பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்று.

நூலாசிரியர்: சமண முனிவர்கள் பலரால் எழுதப்பெற்றுப் பதுமனுர் என்பவரால் தொகுக்கப்பட்டதென்பர்.

### குலம்

நல்ல குலமென்றும் தீய குலமென்றுஞ்
சொல்லள வல்லாற் பொருளில்லை;—தொல்சிறப்பின்
ஒண்பொரு ளொன்றோ தவங்கல்வி ஆள்வினை
என்றிவற்ற ளாகும் குலம். 1

### அழகு

குஞ்சி யழகும் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்ச ளழகும் அழகல்ல—நெஞ்சத்து
நல்லம்யா மென்னு நடுவு நிலைமையாற்
கல்வி யழகே அழகு. 2

### விடுதற்கரியார்

இன்னா செயினும் விடுதற் கரியாரைத்
துன்னுத் துறத்தல் தகுவதோ—துன்னருஞ்சீர்
விண்குத்து நீள்வரை வெற்ப களைபவோ
கண்குத்திற் றென்றுதங் கை. 3

### அறப்பயன்

உறக்குந் துணையதோர் ஆலம்வித் தீண்டி
இறப்ப நிழற்பயந் தாஅங்(கு)—அறப்பயனும்
தான்சிறி தாயினுந் தக்கார்கைப் பட்டக்கால்
வான்சிறிதாப் போர்த்து விடும். 4

## அருஞ்சொற்பொருள்

1. நல்ல குலம் - நற்குடி; ஆள்வினை - முயற்சி; தொல் - பழமையான; ஒண்பொருள் - ஒள்ளிய பொருள்; நல்ல குலம், தீய குலம், தொல்சிறப்பு - பண்புத் தொகைகள்; ஆள்வினை - வினைத்தொகை; ஒன்றோ - எண்ணிடைச் சொல்.

2. குஞ்சி - மயிர்முடி; தானை - ஆடை; மஞ்சள் - மணப்பொருள்; நல்லம் - தன்மைப் பன்மை வினைமுற்று; அழகே - ஏகாரம் பிரிநிலை.

3. விண் - வான்; வரை - மூங்கில்; துன்னு - நெருங்காமல்; துறத்தல் - விலகுதல்; களைபவோ - வெட்டி விடுவரோ; வெற்ப - ஆடூஉ முன்னிலை, ஆண்களை விளித்துப் பாடுதல் ஆடூஉ முன்னிலை எனப்படும்; பெண்களை விளித்துப் பாடுவது மகடூஉ முன்னிலை எனப்படும். இப்பாடல் **எடுத்துக்காட்டு உவமையணி**; உவமானத்தையும் உவமேயத்தையும் இடையில் உவம உருபு கொடாமல் தனித்தனி நிறுத்தி விடுவது எடுத்துக்காட்டுவமையணியாகும். களைப - பகர ஈற்றுப் பலர்பால் வினைமுற்று.

4. உறக்கும் துணையது - கையினல் கிள்ளி எடுக்கக்கூடிய அளவு; ஈண்டி - நெருங்கி; தக்கார் - பெரியார்; ஆங்கு - உவமை உருபு; பயந்தாஅங்கு-செய்யுளிசை யளபெடை; சிறிதாயினும்-இழிவு சிறப்பும்மை.

### பயிற்சி

I. விடை எழுதுக :—

1. நல்லம் குலம் யாது?

2. எது உண்மையான அழகாகும்? எவை அழகாகா?

3. விடுதற்கரியார் யார்?

4. களைபவோ கண்குத்திற்றென்று கை?—இவ்வுவமை எதற்கு எடுத்தாளப்பட்டது?

5. ஆலம் வித்தினை உவமை காட்டி ஆசிரியர் விளக்கும் உண்மை யாது?

6. வான் சிறிதாப் போர்த்துவிடும் - விளக்குக.

II. பிரித்து எழுதுக : சொல்லளவல்லால், பொருளொன்றோ, கோட்டழகும்; விடுதற்கரியாரை, சிறிதாயினும், என்றிவற்றானும்.

III. பின்வரும் தொடர்களை விளக்குக : சொல்லளவல்லால், நல்லம்யாமென்னும் நடுவு நிலைமை, துன்னருஞ்சீர், இறப்ப நிழல் பயந்தாஅங்கு.

IV. அறத்தின் பயன்பற்றி நாலடியார் கூறும் கருத்தினை உரை நடையில் வரைக.

# III. கதை

## *1.* சிலப்பதிகாரம்

### *புகார்க் காண்டம்*

### மங்கல வாழ்த்துப் பாடல்

**சிலப்பதிகாரம்** - ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்று. ஏனைய நூல்கள் : சிந்தாமணி, மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி என்பனவாம். சிலம்பு + அதிகாரம்-சிலம்பதிகாரம்; இது சிலப்பதிகாரமானது வலித்தல் விகாரத்தால். சிலம்பினது செய்திகளை முதன்மையாகக் கொண்ட நூல் என்பதே இதன் பொருளாம். ஆறும் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகையாம்.

இந்நூல் மூன்று நீதிகளை உணர்த்தும். அவை : ஊழ்வினை விடாது; அல்லவை செய்தார்க்கு அறம் கூற்றம்; கற்புடை மகளிரை உயர்ந்தோரும் வணங்குவர் என்பவை. முடி மன்னர் மூவர்க்கும் உரியது. மூன்று காண்டங்களை உடையது. அவை: புகார்க் காண்டம், மதுரைக்காண்டம், வஞ்சிக் காண்டம்.

**நூலாசிரியர் :** இளங்கோவடிகள். இவர் சேரன் செங்குட்டுவனுடைய தம்பியார். இவர் தந்தையார் நெடுஞ்சேரலாதன். தாயார் நற்சோணை. சமண நெறியினர்; எனினும் சமநோக்குடையவர்; வஞ்சி மாநகரில் தோன்றியவர். இவரது காலம் கி. பி. இரண்டாம் நூற்றாண்டென்பர்.

**புகார்க் காண்டம் :** புகார்—காவிரிப்பூம்பட்டினம். ஆண்டு நிகழ்ந்ததை அறிவிப்பதே இக்காண்டமாகும்.

**மங்கல வாழ்த்துப் பாடல்:** கோவலன் கண்ணகி ஆகியவர்தம் திருமணத்தை வாழ்த்திப் பாடிய பாடலாம்.

### திங்களைப் போற்றுதல்

திங்களைப் போற்றுதுந் திங்களைப் போற்றுதும்
கொங்கலர்தார்ச் சென்னி குளிர்வெண் குடைபோன்றிவ்
வங்க ணுலகளித்த லான்

## ஞாயிறு போற்றுதல்

ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்
காவிரி நாடன் திகிரிபோற் பொற்கோட்டு
மேரு வலந்திரித லான்.

## மழையைப் போற்றுதல்

மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும்
நாமநீர் வேலி உலகிற்(கு) அவனளிபோல்
மேல்நின்று தான்சுரத்த லான்.

## புகாரைப் போற்றுதல்

பூம்புகார் போற்றுதும் பூம்புகார் போற்றுதும்
வீங்குநீர் வேலிஉலகிற்(கு) அவன்குலத் தோ(டு)
ஓங்கிப் பரந்தொழுக லான்.

## புகார் நகரின் பெருமை

ஆங்கு,

பொதியில் ஆயினும் இமயம் ஆயினும்
பதியெழு(வு) அறியாப் பழங்குடி கெழீஇப
பொதுவறு சிறப்பிற் புகாரே ஆயினும்
நடுக்கின்றி நிலைஇய என்ப(து) அல்லதை
ஒடுக்கங் கூறுார் உயர்ந்தோர் உண்மையின்
முடித்த கேள்வி முழுதுணர்ந் தோரே.

## மாநாய்க்கன் சிறப்பு

அதனால்,

நாகநீள் நகரொடு நாகநா(டு) அதனொடு
போகம்நீள் புகழ்மன்னும் புகார்நக ரதுதன்னின்
மாகவான் நிகர்வண்கை மாநாய்கன் குலக்கொம்பர்
ஈகைவான் கொடியன்னாள் ஈரா(று)ஆண்டு அகவையாள்,

## கண்ணகியின் பெருமை

அவளுந்தான்,

போதிலார் திருவினுள் புகழுடை வடிவென்றும்
தீதிலா வடமீனின் திறமிவள் திறமென்றும்
மாதரார் தொழுதேத்த வயங்கிய பெருங்குணத்துக்
காதலாள் பெயர்மன்னும் கண்ணகியென் பாள்மன்னோ.

## மாசாத்துவான் சிறப்பு

ஆங்கு,

பெருநிலம் முழுதாளும் பெருமகன் தலைவைத்த
ஒருதனிக் குடிகளோ(டு) உயர்ந்தோங்கு செல்வத்தான்
வருநிதி பிறர்க்கார்த்து மாசாத்து வான்என்பான்
இருநிதிக் கிழவன்மகன் ஈரெட்டாண்(டு) அகவையான்.

## கோவலன் பெருமை

அவனுந்தான்,

மண்தேய்த்த புகழினன் மதிமுக மடவார்தம்
பண்டேய்த்த மொழியினர் ஆயத்துப் பாராட்டிக்
கண்டேத்துஞ் செவ்வேளென் (று)இசைபோக்கிக் காதலாற்
கொண்டேத்துங் கிழமையான் கோவலனென்பான்மன்னோ.

## மாநகர்க்கு மணம் அறிவித்தல்

அவரை,

இருபெருங் குரவரும் ஒருபெரு நாளால்
மணவணி காண மகிழ்ந்தனர்; மகிழ்ந்துழி
யானை யெருத்தத் தணியிழையார் மேலிரீஇ
மாநகர்க்(கு) ஈந்தார் மணம்

—இளங்கோவடிகள்

## அருஞ்சொற்பொருள்

கொங்கு - மகரந்தம் (தேன்); தார் - மார்பில் அணியும் மாலை; அளித்தல் - காத்தல்; திங்கள் - மதி ; ஞாயிறு - கதிரவன்; திகிரி - ஆணை ஆழி;

மேரு - மேருமலை ; நாமம் - அச்சம் ; வீங்குநீர் - மிக்கநீர் ; ஒடுக்கம் - அழிவு ; நாகநாடு - நாகர்கள் வாழுகின்ற நாடு. அகவை - வயது ; போது- தாமரை மலர் ; வடமீன் - அருந்ததி என்னும் விண்மீன் ; வருநிதி - பல் வகை வழிகளிலும் வருகின்ற பொருட் செல்வம் ; மண்தேய்த்த - நிலம் சிறிதாகுமாறு வளர்ந்த ; செவ்வேள் - முருகன் ; ஆயம் - தோழியர் கூட் டம் ; எருத்தம் - பிடரி ; ஈந்தார் - அறிவித்தனர்.

பெருங்குரவர், பெருநிலம், இருநிதி, செவ்வேள், பெருங்குணம்- பண்புத் தொகைகள் ; அலர்தார், வீங்குநீர், அறுசிறப்பு, வருநிதி-வினைத் தொகைகள் ; நாமநீர் - உரிச்சொற்றொடர். அறியா, தீதிலா - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சங்கள் ; கெழீஇ. இரீஇ - சொல்லிசை யளபெடைகள்.

## பயிற்சி

### I. விடை எழுதுக :

1. புகார் நகரின் பெருமைகளை விளக்குக.

2. சிலப்பதிகார காலத்திலிருந்த திருமண முறை யாது?

3. கண்ணகியின் சிறப்பியல்புகள் யாவை?

4. கோவலனின் சிறப்பியல்புகள் யாவை?

5. சோழமன்னன் குடிமக்களிடம் அருள் படைத்தவன் என்பதை ஆசிரியர் எவ்வாறு விளக்குகிறார்?

6. சிலம்பு உணர்த்தும் மூன்று நீதிகள் யாவை?

7. 'கொங்கலர்தார்ச் சென்னி குளிர்வெண்குடைபோல்' - உவமேயத்துடன் பொருத்தி உவமையை விளக்குக.

8. காவிரிநாடன் திகிரிக்கு எது உவமை காட்டப்பட்டது.

9. ஏன் மழையை போற்றவேண்டுமென்கிறார்?

10. மாநாய்கன் சிறப்பு எவ்வாறு கூறப்பட்டுளது?

11. மாசாத்துவான் எவ்வண்ணம் சிறப்பிக்கப்பட்டுள்ளான்?

12. கண்ணகியின் மணச்செய்தி நகரத்தார்க்கு எவ்வாறு அறிவிக் கப்பட்டது.

### II. பிரித்து எழுதுக:

கொங்கலர், போன்றிவ்வங்கணுலகளித்தலான்; பொற்கோடு மேனின்று, நீணகர், ஈராறுண்டு, ஈரெட்டாண்டு, பண்டேய்த்த, கொண் டேத்தும், செவ்வேள், கண்டேத்தும், பூம்புகார்.

III. 1. 'பெருநிலம் முழுதாளும் பெருமகன் தலைவைத்த; - இத் தொடரைக் கொண்டு அக்கால ஆட்சி முறையை விளக்கி வரைக.

2. 'மாகவான் நிகர் வண்கை மாநாய்கன்' - இத்தொடருக்கு விளக்கங் கூறுக.

IV. 1. ஞாயிறு, திங்கள்-இவற்றிற் குரிய வேறு பெயர்களை யெல்லாம் கேட்டு வரைக.

2. சோழனுக்கு எவ்வெப் பெயர்கள் கூறப்படுகின்றன?

3. சிலப்பதிகாரத்துடன் தொடர்புடைய மற்றொரு நூலைக் குறிப்பிட்டு, அது எத்தகைய தொடர்புடைய தென்பதை விளக்கி வரைக.

## 2. கம்பராமாயணம்

### சுந்தர காண்டம்

### காட்சிப் படலம்

கம்பராமாயணம்: கம்பரது இராமாயணம். ஆறும் வேற்றுமைத் தொகை. கம்பரால் செய்யப்பெற்ற இராமாயணம் எனின், மூன்றும் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை. இராம+அயனம் - வடமொழித் தீர்க்க சந்தி. இராமன் வாழ்க்கையை விளக்குவது என்று பொருள்படும்.

இந்நூல் வடமொழி வான்மீகி இராமாயணத்தைப் பெரும்பாலும் தழுவியது. இதன்கண் பால காண்டம், அயோத்தியா காண்டம், ஆரணிய காண்டம், கிட்கிந்தா காண்டம், சுந்தர காண்டம், உயுத்த காண்டம் என்னும் ஆறு காண்டங்கள் உள்ளன. அவற்றுள் சுந்தர காண்டத்தில் நம் பாடப்பகுதியாகிய காட்சிப் படலம் உள்ளது. இராவணனால் அசோக வனத்தில் சிறைவைக்கப்பட்ட சீதையை அநுமன் கண்டுகளித்தல் இப்படலத்தில் கூறப்படுகின்றது.

**நூலாசிரியர்:** கம்பர். தந்தை, ஆதித்தன். ஊர், சோழநாட்டிலுள்ள திருவழுந்தூர். குலம்: உவச்சர். காலம்: கி. பி. 12-ஆம் நூற்றாண்டு. சமயம்: வைணவம்; சைவம் என்றும் கூறுவர். சமகாலப் புலவர்: ஒட்டக்கூத்தர், ஔவை, புகழேந்திப்புலவர். இவர் சடையப்ப வள்ளலால் ஆதரிக்கப்பட்டார்.

**இவர் எழுதிய பிற நூல்கள்:** சடகோப ரந்தாதி, சரசுவதி அந்தாதி, ஏரெழுபது முதலியன,

## அநுமனின் மனவுறுதி

மாடு நின்றவம் மணிமலர்ச் சோலையை மருவித்
தேடி யிவ்வழிக் காண்பெனேல் தீருமென் சிறுமை
ஊடு கண்டிலே னெனிற்பின்னர் உரியதொன் றில்லை.
வீடு வேன்மற்றிவ் விலங்கன்மேல் இலங்கையை வீட்டி 1

## அசோகவனத்தில் சீதையின் நிலை

துயிலெனக் கண்கள் இமைத்தலு முகிழ்த்தலுந் துறந்தாள்
வெயிலிடைத் தந்த விளக்கென ஒளியிலா மெய்யாள்
மயிலி யற்குயில் மழலையாள் மானிளம் பேடை
அயிலே யிற்றுவெம் புலிக்குழாத் தகப்பட்ட தன்னாள். 2

விழுதல் விம்முதல் மெய்யுற வெதும்புதல் வெருவல்
எழுதல் ஏங்குதல் இரங்குதல் இராமனை எண்ணித்
தொழுதல் சோருதல் துளங்குதல் துயருழந் துயிர்த்தல்
அழுத லன்றிமற் றயலொன்றுஞ் செய்குவ தறியாள். 3

துப்பி னாற்செய்த கையொடு கால்பெற்ற துளிமஞ்(சு)
ஒப்பி னான்தனை நினைதொறு நெடுங்கண்க ளுகுத்த
அப்பி னனைந் தருந்துய ருயிர்ப்புடை யாக்கை
வெப்பி னாற்புலர்ந் தொருநிலை யுறுதமென் துகிலாள். 4

## சீதை இராமனை நினைந்து வருந்துதல்

அருந்து மெல்லட காரிட அருந்துமென் றழுங்கும்
விருந்து கண்டபோ தென்னுறு மோவென்று விம்மும்
மருந்து முண்டுகொல் யான்கொண்ட நோய்க்கென்று மயங்
[கும்
இருந்த மாநிலஞ் செல்லரித் திடவுமாண் டெழாதாள். 5

மெய்த்தி ருப்பதம் மேவென்ற போதினும்
இத்தி ருத்துறந் தேகென்ற போதினும்
சித்தி ரத்தின லர்ந்தசெந் தாமரை
ஒத்தி ருக்கு முகத்தினை உன்னுவாள். 6

ஆழ நீர்க்கங்கை அம்பி கடாவிய
ஏழை வேடனுக் கெம்பிகின் தம்பி!
தோழன் மங்கை கொழுந்தி எனச்சொன்ன
வாழி நண்பினை உன்னி மயங்குவாள். 7

நள்ளிரவில் சீதை, தனக்கு நிகழ்ந்த நிமித்தத்தினால்
யாது பயன் விளையுமோ என்று திரிசடையிடம் கூறி ஐயுறுதல்

நலந்துடிக் கின்றதோ நான்செய் தீவினைச்
சலந்துடித் தின்னமுந் தருவ துண்மையோ
பொலந்துடி மருங்குலாய் புருவங் கண்முதல்
வலந்துடிக் கின்றில வருவ தோர்கிலேன். 8

முனியொடு மிதிலையின் முதல்வன் முந்துநாள்
துனியறு புருவமும் தோளு நாட்டமும்
இனியன துடித்தன ஈண்டும் ஆண்டென
நனிதுடிக் கின்றன ஆய்ந்து நல்குவாய். 9

மறந்தனென் இதுவுமோர் மாற்றங் கேட்டியால்
அறந்தரு சிந்தையென் ஆவி நாயகன்
பிறந்தபார் முழுவதுந் தம்பி யேபெறத்
துறந்துகான் புகுந்தநாள் வலந்து டித்ததால். 10

நஞ்சனை யான்வனத் திழைத்த நாளிடை
வஞ்சனை யால்வலந் துடித்த வாய்மையால்
எஞ்சல ஈண்டுதாம் இடந்து டித்ததால்
அஞ்சலென் றிரங்குதற் கடுப்பதி யாதென்றாள். 11

திரிசடை நற்பயன் விளையும் என்று கூறித் தான் கண்ட
நன்னிமித்தத்தை எடுத்துக் காட்டுதல்

உன்னிறம் பசப்புற உயிரு யிர்ப்புற
இன்னிறத் தேனிசை இனிய நண்பினால்
மின்னிற மருங்குலாய் செவியின் மெல்லெனப்
பொன்னிறத் தும்பிவந் தூதிப் போயதால். 12

ஆயது தெரினுன் ஆவி நாயகன்
ஏயது தூதுவந் தெதிர்தல் உண்மையால்
தீயது தீயவர்க் கெய்தல் திண்ணமென்
வாயது கேளென மறித்துங் கூறுவாள். 13

### திரிசடை, பின்னும் அசோக வனத்தில் தான் அப்பொழுது கண்ட கனவைச் சொல்லுதல்

என்றனள் இயம்பிவே றிசைப்பக் கேட்டியால்
இன்றிவண் இப்பொழு தியைந்த தோர்கனு
வன்துணைக் கோளரி யிரண்டு மாறிலாக்
குன்றிடை உழுவையங் குழுக்கொண் டீண்டியே. 14

வரம்பிலா மதகரி உறையு மவ்வனம்
நிறம்புற வளைந்தன நெருக்கி நேர்ந்தன
குரம்பறு பிணம்படக் கொன்ற மாறிலாப்
புரம்புக இருந்ததோர் மயிலும் போயதால். 15

ஆயிரந் திருவிளக் கமைய மாட்டிய
சேயொளி விளக்கதொன் றேந்திச் செய்யவன்
நாயகன் திருமனை நின்று நண்ணுதல்
மேயினன் வீடணன் கோயில் மென்சொலாய். 16

பொன்மனை புக்கவப் பொருவில் போதினில்
என்னைநீ உணர்த்தினை முடிந்த தில்லென
அன்னையே அதன்குறை காணென் றுயிழை
இன்னமுந் துயில்கென இருகை கூப்பினள். 17

### அரக்கியர் நடுவில் சீதையைக் கண்ட அநுமான் மகிழ்தல்

தொடற்கரும் அரக்கியர் காவல் சுற்றுளாள்
மடக்கொடி சீதையாம் மாத ரேகொலாம்
கடற்றுணை நெடியதன் கண்ணி னீர்ப்பெருந்
தடத்திடை இருந்ததோ ரன்னத் தன்மையாள். 18

வீடின தன்றறன் யானும் வீகலேன்
தேடினேன் கண்டனேன் தேவி யேஎனு
ஆடினன் பாடினன் ஆண்டும் ஈண்டும்பாய்ந்(து)
ஓடினன் உலாவினன் உவகைத் தேனுண்டான். 19

## அருஞ்சொற்பொருள்

1. மாடு - பக்கம்; மணி - அழகு; இவ்வழி தேடிக் காண்பனேல் என் சிறுமை தீரும் எனக் கூட்டுக; சிறுமை - துன்பம்; ஊடு - சோலையின் உள்; உரியது ஒன்று இல்லை - செய்வதற்குரிய தொழில் வேறொன்றும் இல்லை; இலங்கையை இவ்விலங்கல் மேல் வீட்டி வீடுவேன் எனக் கூட்டுக; விலங்கல் - மலை, திரிகூடமலை; வீட்டி - அழித்து; வீடுவேன் - இறப்பேன்.

2. துயில் - உறக்கம்; கண்கள் முகிழ்த்தலும் இமைத்தலும் எனக் கூட்டுக; முகிழ்த்தல் - மூடுதல்; அயில் எயிறு - கூர்மையான பல்.

3. விம்முதல் - வாய்விட்டுப் புலம்புதல்; ஏங்குதல் - மனங் கலங்குதல்; துளங்குதல் - நடுங்குதல்; உயிர்த்தல் - பெருமூச்சு விடுதல்; இங்கே சீதையினிடத்து விம்முதல் முதலான செயல்கள் ஒரே காலத்தில் நிகழ்ந்தனவாகச் சொன்னது கூட்டணியாம்.

4. துப்பு - பவளம்; துளி மஞ்சு ஒப்பினுன்தனை - மழைத் துளிகளைப் பெய்கின்ற கருமேகத்தைத் தனக்கு ஒப்பாக உடைய இராமனை; அப்பு - நீர்; புலர்ந்து - உலர்ந்து; இச்செய்யுளில் முதலடி இல் பொருளுவமை அணி.

5- மெல் அடகு - மென்மையான இலையுணவு; ஆர்இட - யாவர் படைக்க; அழுங்கும் - வருந்துவாள்; செல் - கறையான்; ஆண்டு - அவ்விடம்.

6. திரு - சிறந்த; பதம் - உலகாளும் பதவி; திரு - அரசாட்சிச் செல்வம்.

7. அம்பிகடாவிய - தோணியைச் செலுத்திய; வேடன் - குகன்; மங்கை - சீதை; வாழி - அசை.

8. சலம் - கொடுமை; தருவது - துன்பத்தைத் தருவது. பொலம்- அழகு; துடி மருங்குலாய் - உடுக்கை போன்ற இடையையுடைய திரிசடையே; வலம் துடிக்கின்றில - வலப்பக்கம் துடிக்கவில்லை (இடப்பக்கம் துடிக்கின்றது).

9. முனி - விசுவாமித்திர முனிவன்; முதல்வன் - இராமன்; துனி - குற்றம்; நாட்டம் - கண்; ஆண்டுஎன - அப்பொழுது துடித்தாற் போல; நனி - மிகுதி; ஆய்ந்து - ஆராய்ந்து.

10. மாற்றம் - சொல்; கேட்டி - கேட்பாய்; ஆல் - அசை; தம்பி - பரதன்; கான் - காடு.

11. நஞ்சு அனையான் - நஞ்சு போலக் கொடிய இராவணன்; வனத்து இழைத்த நாளிடை - தண்டகாரணியத்தில் எனக்குத் தீங்கு செய்த காலத்தில்; இரங்குதற்கு-என்னிடத்தில் இரக்கம் கொள்ளுமாறு.

12. உயிர்ப்புஉற - பிழைக்க; தேன் இசை - தேன் போன்ற பாட்டிசை; தும்பி - வண்டு.

13. தேரின் - ஆராய்ந்தால்; ஏயது தூது - ஏவிய தூது; என் வாயது - என்னிடம் நிகழ்ந்ததை; வாய் - இடம்; மறித்தும் - மீண்டும்.

14. ஓர் கனு இயைந்து எனக் கூட்டுக; துணை - ஒன்றுக் கொன்று துணையான; கோளரி - வலிய சிங்கம்; மாறிலா - ஒப்பிலாத; உழுவை - புலி.

15. மதகரி - மதத்தையுடைய யானை; குரம்பு - எல்லை; கொன்ற - கொன்றன (தெரிநிலை வினைமுற்று); புரம்புக-அச்சிங்கங்களின் நகரத்தை அடைதற்கு.

16. மாட்டிய - கொளுத்திய; நாயகன் - இராவணன்; கோயில் - அரண்மனை.

17. பொருவில் போது - ஒப்பற்ற பொழுது; உணர்த்தினை - துயி லெழுப்பினாய்; முடிந்தது இல் - அக்கனு முடிந்ததில்லை; அதன் குறை - அக்கனுவின் எஞ்சிய பகுதியை; ஆயிழை - சீதை (வினைத்தொகைப்புறத் துப் பிறந்த அன்மொழித்தொகை).

18. மடம் - இளமை; கடல் துணை - கடல் போன்ற; தடம் - குளம்.

19. அறம் வீடினது அன்று - தருமம் அழிந்த தன்று; வீகலேன் - இறக்க மாட்டேன்; தேவியே - ஏகாரம் தேற்றம்.

## பயிற்சி

**I. விடை எழுதுக :**

1. "வீடுவேன் மற்றிவ் விலங்கன் மேல் இலங்கையை வீட்டி"— ஏன் எங்கு எவரால் இவ்வாறு கூறப்பட்டது?

2. அசோக வனத்தில் இருந்த சீதையின் நிலையைக் கம்பர் எவ் வாறு கூறுகின்றார்?

3. சீதை இராமனைப்பற்றி எவ்வெவ்வாறு எண்ணிக் கலங்கினாள்?

4. சீதைக்கு எவ்வெப்பொழுது என்னென்ன நிமித்தங்கள் தோன்றின?

5. 'இருந்த மாநிலம் செல்லரித்திடவும் ஆண்டெழாதாள்' - இத் தொடரிலிருந்து அறியப்படுவது யாது?

6. 'நண்பினை உன்னி மயங்குவாள்'—எந்நண்பினை?

7. திரிசடை கண்ட கனவு யாது?

8. அரக்கியரிடையே சீதையைக் கண்ட அநுமன் எவ்வாறு மகிழ்ந்தான்?

II. 1. கம்பராமாயணம் பாடிய கம்பர் கவிப் பெருமையை நீங்கள் அறிந்தவரை வரைக.

2. இப்பாடப் பகுதியிலிருந்து நீங்கள் அறியும் சீதையின் பண்புகளை எழுதுக.

3. இப்பாடப் பகுதியின் செய்திகளைத் திரிசடை நமக்குக் கூறுவது போலக் கூறுக.

III. பிரித்து எழுதுக:—உரியதொன்றில்லை, அயிலெயிற்றுவெம்புலி, துயருழந்துயிர்த்தல், அப்பினனனைந்தருந்துயருயிர்ப்புடை, செல்லரித் திடவு மாண்டெழாதாள், வருவதோர்கிலேன், கொண்டீண்டியே.

IV. உறுப்பிலக்கணம் எழுதுக:—துறந்தாள், அறியாள், மயங்குவாள், உண்ணுவாள், எழாதாள், ஓர்கிலேன், நல்குவாய்.

V. மாடு, மணி, ஊடு, துப்பு—இச்சொற்களுக்குரிய வெவ்வேறு பொருள்களை அகராதி பார்த்து எடுத்து எழுதுக.

# IV. புனைந்துரை

## *1. முகில்*

இப்பாடலைப் பாடியவர் பரிதிமாற் கலைஞர் எனப்படும் வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியாவர். இவர் கி. பி. 1871 முதல் 1903 வரை தமிழ் நாட்டில் வாழ்ந்தவர். தனித்தமிழ் இயக்கத்திற்கு வித்திட்ட முதல் வித்தகர். பல நாடக நூல்களும், மொழியாராய்ச்சி நூல்களும் எழுதித் தமிழ்த் தாய்க்கு நற்பணியாற்றிய நல்லோர்.

முகிலே ! மைந்நிற முகிலே ! கடல்மகள்
பயந்த மகவே ! நயந்திவ் வுலகினைக்
குளிர்செய் ததனுயிர்க் குழுவினை என்றுங்
களிசெயும் செய்ய கருவியே ! அறத்தினுக்கு
ஆக்கமே ! பொருளிற் கரும்பெறல் துணையே !
போக்கரு வற்கடப் பொல்லா நோய்க்குநன்
மருந்தே ! நீயெழுந் திருந்துவான் பொழிவது
தண்ணீர் என்கோ ? தயைமீக் கூர்ந்திழி
கண்ணீர் என்கோ ? கழைச்சா றென்கோ ?
தீம்பால் என்கோ ? தெள்ளமு தென்கோ ?
ஏம்பலுற் றென்னுளம் இனைத்தென் றுணர்ந்தின்று
அம்ம!நீ ஒப்புர வாற்றுமா றறிந்தேன்
எம்மையும் அஃதே என்கடன்
எனக்குறிக் கொண்டேன் எனக்குறு காட்டே !

—பரிதிமாற் கலைஞன்

### அருஞ்சொற்பொருள்

முகில் - மேகம்; பயந்த - பெற்ற; நயந்து - விரும்பி; குழு - கூட்டம்; அரும்பெறல் - பெறுதற்கரிய; வற்கடம் - பஞ்சம்; என்கோ - என்று சொல்லுவேனோ; கழை - கரும்பு; ஏம்பல் - மகிழ்ச்சி; உணர்ந்தின்று - அறிந்ததில்லை; அம்ம - வியப்பிடைச்சொல்; எம்மை - எப்பிறப்பினும்; எனக்கு உறுகாட்டு - நின்செயல் எனக்கு ஓர் எடுத்துக் காட்டேயாகும்.

## பயிற்சி

I, விடை எழுதுக :—

1. பரிதிமாற் கலைஞர் முகிலை விளித்து யாது கூறுகின்றார்?

2. முகில் எதனுடைய மகள்? எப்படி ?

3. உயிர்க் குழுவினை என்றும் களிசெய்யும் கருவி எது ? எங்ஙனம்?

4. முகிலெழுந்து வான்பொழிவது என்னென்னவெனக் கூறப் படுகிறது ?

II. இயற்கைப் பாட்டுக்கள் படிப்பதற்குப் பேரின்பம் பயப்பன என்பதை ஏதேனும் ஒரு செய்யுள் கொண்டு விளக்குக.

III. பொருள் கூறுக :—நியமம், நெய்தல், தளி, தேம்ப, உறுகாட்டு, மறுகு, கூடல், அரும்பெறல், ஆக்கம், குழு, வற்கடம், ஒப்புரவு.

IV. விளக்குக :—வற்கடப்பொல்லா நோய்க்கு நன்மருந்து, பொருளிற் கரும் பெறல் துணை, அறத்திறனுக்கு ஆக்கம், தயை மீக்கூர்ந்திழி கண்ணீர், எம்மையும் அஃதே என்கடன்.

## 2. *தென்றல்*

இப்பாடலைப் பாடியவர் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன். இவரது இயற்பெயர் கனகசுப்புரத்தினம். தந்தை: கனக சபை முதலியார். ஊர்: புதுச்சேரி. பிறந்த நாள்: 1891-ஆம் ஆண்டு ஏப்ரல் 16-ஆம் நாள். இன்றும் புதுச்சேரியிலேயே வாழ்ந்து வருகின்றார். இவர் பல கவிதை நூல்களையும் நாடக நூல்களையும் உரைநடை நூல்களையும் எழுதியுள்ளார். இவரது பேச்சும் எழுத்தும் புரட்சியை யுண்டாக்கும் புதிய வலிவுடையன.

### தென்னாடு பெற்ற செல்வம்

உன்னிடம் அமைந்தி ருக்கும்
　　உண்மையின் விரிவில், மக்கள்
சின்னதோர் பகுதி யேனும்
　　தெரிந்தார்கள் இல்லை யேனும்
தென்னாடு பெற்ற செல்வத்
　　தென்றலே ! உன்இன் பத்தைத்
தென்னாட்டுக் கல்லால் வேறே
　　எந்நாட்டில் தெரியச் செய்தாய் ?

—**கவிஞர் பாரதிதாசன்**

## அருஞ்சொற்பொருள்

தென்னாடு - தென் பகுதியிலுள்ள தமிழ்நாடு; தெரிந்தார்களில்லை - அறியவில்லை.

செல்வத் தென்றல் - இருபெயரொட்டுப் பண்புத்தொகை. தென்றலே - விளிவேற்றுமை.

## பயிற்சி

I. விடை எழுதுக :

1. தென்றலின் அருள்திறனை விளக்குக.

2. தென்றல் - தென்னாடுபெற்ற செல்வம் எனப்படுவதன் கருத்து யாது?

3. "உன்னிடம் அமைந்திருக்கும் உண்மையின் விரிவு" - யாது?

4. "தென்னாட்டுக் கல்லால் வேறே எந்நாட்டில் தெரியச் செய்தாய்"?-இதன் கருத்து யாது?

II. தென்றல் - தென்திசையிலிருந்து வீசும் காற்று, வடதிசையிலிருந்து வீசும் காற்று வாடை எனக் கூறப்படும். மேல் திசையிலிருந்து வீசும் காற்றும் கீழ்த்திசையிலிருந்து வீசும் காற்றும் என்னவென்று கூறப்படும்?

III. பிரித்தெழுதுக :

தென்னாடு, சின்னதோர், தென்னாட்டுக்கல்லால், எந்நாட்டில்.

## 3. *மலர்கள்*

இப்பகுதி 'மலரும் மாலையும்' என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்டதாகும். இது ஒரு தொகுப்பு நூல்.

**நூலாசிரியர்** :—கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை. தாய் : ஆதிலட்சுமி. தந்தை : சிவதாணுப்பிள்ளை. ஊர் : நாகர்கோவிலுக்கு அண்மையிலுள்ள தேரூர். குலம் : வேளாளர். சமயம் : சைவம். இவர் பல கவிதை நூல்களையும் ஆராய்ச்சி நூல்களையும் எழுதியுள்ளார்.

வண்டின் வரவெதிர் பார்த்து நிற்போம்—நல்ல
வாசனை வீதியில் வீசிநிற்போம்
உண்டு களிக்க மதுவளிப்போம்—சற்றே
உட்காரப் பீடமும் இட்டுவைப்போம்

மங்கைய ரோடு குமரரையும்—மனம்
வாய்த்த மணஞ்செய்து வாழவைப்போம்
தங்கமும் பொன்னும் மணிகளுமே—எம்மைத்
தாழ்ந்து வணங்கமேல் தங்கிடுவோம்
ஈசன்அடியில் பணிந்திருப்போம்—அவர்
ஏந்து முடிமீதும் ஏறிநிற்போம்
பூசனை செய்யும் அடியவரின்—உள்ளம்
பொங்கு களிப்பெலாம் காட்டிநிற்போம்

—கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை

## அருஞ்சொற்பொருள்

வீதி - தெரு; மது - தேன்; பீடம் - இருக்கை; களிப்பு - மகிழ்ச்சி; ஏந்து - பெயரெச்சம். களிப்பெலாம் - உம்மை முற்று.

## பயிற்சி

I. விடை எழுதுக :

1. மலர்கள் தங்கள் சிறப்பினை எவ்வாறு எடுத்துரைக்கின்றன?

2. 'தங்கமும் பொன்னும் மணிகளும் தாழ்ந்து வணங்க மேல் நிற்போம்' என மலர்கள் கூறுவதன் கருத்து யாது?

3. மலர்களின் இயற்கையை எடுத்துக் காட்டும் நயத்தை விளக்குக.

II. இதை வண்டு சொல்வது போல் உரைநடையாக்கி வரைக.

III. இச்செய்யுளில் உள்ள வினை எச்சங்களை எடுத்து எழுதுக.

# V. சிறு நூல்கள்

## *1. மீனாட்சியம்மை குறம்*

இதனைச் செய்தவர் குமர குருபர சுவாமிகள். இவர் நீதிநெறி விளக்கம், கந்தர் கலி வெண்பா, சகல கலாவல்லி மாலை போன்ற பல பிரபந்தங்களைப் பாடியவர். காசியில் சைவ மடத்தைத் தோற்று வித்தவர். 17-ஆம் நூற்றாண்டினர். திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த ஸ்ரீவைகுண்டம் எனும் ஊரில் பிறந்தவர்; வேளாளர்; சைவ சமயத்தைச் சேர்ந்தவர்.

### குறக்குடியின் இயல்பு

கொழுங்கொடியின் விழுந்தவள்ளிக் கிழங்குகல்லி எடுப்போம்;
குறிஞ்சிமலர் தெரிந்துமுல்லைக் கொடியில் வைத்துத்
[தொடுப்போம்.
பழம்பிழிந்த கொழுஞ்சாறும் தேறலும்வாய் மடுப்போம்;
பசுந்தழையும் மரவுரியும் இசைந்திடவே உடுப்போம்;
செழுந்தினையும் நறுந்தேனும் விருந்தயரக் கொடுப்போம்;
சினவேங்கைப் புலித்தோலின் பாயலிற்கண் படுப்போம்;
எழுந்துகயற் கணிகாலில் விழுந்துவினை கெடுப்போம்;
எங்கள்குறக் குடிக்கடுத்த இயல்பிதுகாண் அம்மே !

—குமரகுருபர சுவாமிகள்

### அருஞ்சொற்பொருள்

கொடியின் விழுந்த - கொடியில் தோன்றிய; கல்லி - தோண்டி; வள்ளிக்கிழங்கு - சர்க்கரை வள்ளிக்கிழங்கு; தொடுப்போம் - கட்டு வோம்; தேறல் - தேன்; வாய்மடுப்போம் - குடிப்போம்; பாயல் - படுக்கை; கண்படுப்போம் - உறங்குவோம்; கயற்கணி - கெண்டை மீன் போன்ற கண்ணினையுடைய மீனாட்சியம்மை; கொழுங்கொடி, கொழுஞ்சாறு, செழுந்தினை, பசுந்தழை - பண்புத் தொகைகள்; கயற் கணி - கண்ணி என்பதன் இடைக்குறை; அம்மே - விளி; புலித்தோல் - ஆறன் தொகை.

## 2. பாரதியார் பாடல்கள்

சி. சுப்பிரமணிய பாரதியார் அவர்கள் கி. பி. 1882-ஆம் ஆண்டில் சின்னசாமி ஐயருக்கும் இலக்குமி அம்மையாருக்கும் மகவாகத் தோன்றினார். ஊர்: திருநெல்வேலியைச் சார்ந்த எட்டையபுரம்; நாட்டுப் பற்றும் மொழிப்பற்றும் மிக்கவர். இவை பற்றிய பாடல்களைப் பாடிப் புகழ் பெற்றவர்; காலப்போக்கிற் கேற்றவாறு சமூகம் சீர்திருந்தி வாழ வேண்டும் என்ற எண்ணம் உடையவர். 1921-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 11-ஆம் நாள் இவர் காலமானார். கவிதைகள் பலவற்றையும், உரைநடையிற் சிலவற்றையும் இவர் எழுதியுள்ளார்.

### தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர்

யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்
வள்ளுவர்போல் இளங்கோ வைப்போல்
பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை
உண்மைவெறும் புகழ்ச்சி யில்லை
ஊமையராய்ச் செவிடர்களாய்க் குருடர்களாய்
வாழ்கின்றோம் ஒருசொல் கேளீர்
சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம்
தமிழ்முழக்கம் செழிக்கச் செய்வீர்.

### திறமான புலமை

பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ்மொழியில் பெயர்த்தல் வேண்டும்
இறவாத புகழுடைய புதுநூல்கள்
தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்
மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
சொல்வதிலோர் மகிமை இல்லை
திறமான புலமையெனில் வெளிநாட்டோர்
அதைவணக்கம் செய்தல் வேண்டும்.

### அருஞ்சொற்பொருள்

சேமமுற - நன்மை அடைய; இறவாத - என்றும் மறையாத; மகிமை - பெருமை.

## 3. *மாரி வாயில்*

மாரி வாயில் என்பதற்கு மேகத்தைத் தூது அனுப்புதல் என்பது பொருள். வடமொழியிலுள்ள 'மேக சந்தேசம்' இதே போல் மேகத்தைத் தூது அனுப்புவதாகக் கற்பிக்கப்பட்ட நூலாகும்.

இதன் ஆசிரியர் ச. சோமசுந்தர பாரதியாராவர். வழக்கறிஞராகத் தொழில் தொடங்கிய இவர் அண்ணமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராயிருந்து ஓய்வு பெற்றிருக்கின்றார். இவர் அரிய பல நூல்களை இயற்றியுள்ளார்.

இலங்குமிவ் வளாகம் நிற்க
இயங்குதி வடபால்; ஆங்கே
கலங்குபு கயிறுய் முன்பாற்
கடல்கடைந் தயர்வாற் றூங்கித்
துலங்குவான் கங்கைக் கோட்டம்
தொல்கங்கைப் பொழிலீ னீங்க
விலங்குமா சுணம்போல் நீண்ட
விந்திய மலைவந் தோங்கும். 1

நிலத்தியலும் மொழிவழக்கும் நெறிபலவும்
கலையுணர்வும் நீண்ட நாளாய்க்
குலத்தியலும் தொழிலறமும் கொள்கைகளும்
வெவ்வேறுக் குலவக் கொண்டு
நலத்தியலும் அறத்தொல்லை நாகரிகம்
இரண்டுமிந்த நல்ல நாட்டில்
கலத்தியலும் நீரென்னக் கலவாமற்
காக்குமிடை விந்தம் காண்பை 2

—ச. சோமசுந்தர பாரதியார்

### அருஞ்சொற்பொருள்

1. விந்திய மலை, கோதாவரி பாய்கின்ற தென்னிலப் பகுதியை வடக்கே கங்கை நிலப் பகுதியினின்று பிரித்துக் குறுக்கே கிடக்கும் இயல்பை இப்பாட்டு விளக்குகிறது.

வளாகம் - வரைப்பு; இவ்வளாகம் என்பது இவ்வாசிரியர் 'தென் கங்கை' என்று சிறப்பிக்கும் கோதாவரி ஆறு பாயும் நிலப்பகுதியை; கலங்குபு - கலங்கும்படி; 'செய்பு' என்னும் வாய்பாட்டு எச்சம்;

மாசுணம் - பெரும்பாம்பு; முன் பாற்கடலைக் கடைந்த களைப்பைக் கங்கைக் கோட்டத்தில் கங்கைப் பொழில்களில் நீக்கிக் கொள்ளக் கருதிக் குறுக்கே படுத்துக் கிடப்பது போன்றிருந்தது விந்தியம். இது தற்குறிப்பேற்ற வணி.

2. அறத் தொல்லை நாகரிகம் - மிகப் பழைய நாகரிகம். வடபால் நிலவும் மொழி வழக்கு, தொழிலறம், குலத்தியல் முதலியவை தென்பால் வந்து கலக்காதவாறு விந்தம் காத்துக்கொண்டிருக்கிறது.

## பயிற்சி

I. விடை எழுதுக:

1. குறமகளிரின் இயல்புகள் யாவை?

2. குறிஞ்சிநிலச் சிறப்பை இச்செய்யுள் எவ்வாறு விளக்குகிறது?

3. தமிழ் முழக்கம் தெருவெல்லாம் முழங்கச் செய்யவேண்டும் தேவை என்ன?

4. தமிழ் வளர்ச்சிக்குப் பாரதியார் கூறும் வழிகள் யாவை?

5, விந்தியமலை எவ்வாறு கூறப்பட்டுள்ளது?

6. இச்செய்யுளில் அடங்கியுள்ள கதை யாது?

7. விந்தியமலை எதனை எப்படிக் காத்துக் கொண்டிருக்கிறது?

II. பிரித்து எழுதுக: விருந்தயர, கொழுங்கொடி, மரவுரி, செழுந்தினை, பிறந்ததிலை, சேமமுற, கடைந்தயர்வாற்றூங்கி, நலத்தியலும்.

III. சேர்த்து எழுதுக: கலை + உணர்வு, வந்து + ஓங்கும், தொழில் + அறம், தெரு + எல்லாம், யாம் + அறிந்த.

IV. குறிப்பு வரைக: சி. சுப்பிரமணிய பாரதியார், ச. சோமசுந்தர பாரதியார், மாரிவாயில், மீனாட்சியம்மை குறம்.

V. சோமசுந்தர பாரதியாரின் பாக்களை உரைநடைப்படுத்தி வரைக.

# VI. பல்சுவைப் பகுதி

## 1. *கலிங்கத்துப்பரணி*

முதற் குலோத்துங்கன் என்ற சோழவேந்தன் கலிங்க நாட்டை வென்ற வெற்றியைச் சிறப்பித்துப் பாடப்பட்ட நூலாதலின் இது கலிங்கத்துப்பரணி எனப் பெயர் பெற்றது. பரணி என்பது தொண்ணூற்றாறு வகைத் தமிழ்ப் பிரபந்தங்களுள் ஒன்று; ஆயிரம் யானைகளை அமர்க்களத்திலே கொன்ற மறவனின் வெற்றியைப் புகழ்ந்து பாடுவது.

**நூலாசிரியர்:** சயங்கொண்டார். **ஊர்:** சோழ நாட்டிலுள்ள தீபங்குடி, **சமயம்:** சைவம் என்றும் சமணம் என்றும் கூறுவர் ஆராய்ச்சியாளர். **காலம்:** கி.பி. 12-ஆம் நூற்றாண்டு.

### போரில் கணவனை இழந்த மகளின் நிலை

பொருதடக்கை வாளெங்கே மணிமார் பெங்கே
    போர்முகத்தி லெவர்வரினும் புறங்கொ டாத
பருவயிரத் தோளெங்கே யெங்கே யென்று
    பயிரவியைக் கேட்பாளைக் காண்மின் காண்மின்.

—சயங்கொண்டார்

### அருஞ்சொற்பொருள்

தடக்கை: பெரிய கைகள் (தடம்+கை), உரிச்சொற்றொடர்; மணி மார்பு - அழகிய மார்பு; போர் முகம் - போர்க்களம்; பருவயிரத் தோள் - கடினமான வயிரம் போன்ற உரம் மிகுந்த அகன்ற தோள்; பயிரவி - காளி; காண்மின் - பாருங்கள்; பொருதடக்கை - வினைத் தொகை; காண்மின் - முன்னிலைப் பன்மை வினைமுற்று.

## 2. *புறநானூறு*

தமிழில் உள்ள பொருள் இலக்கணம் அகம், புறம் என இரு வகைப்படும். அகம் எனப்படுவது வெளியில் எடுத்துச் சொல்ல முடியாததாய்த் தலைவன் தலைவியருக்கிடையே நிகழும் இன்ப நிகழ்ச்சிகளைப் பற்றியது. அகம் தவிர்த்த மற்றவை புறம் எனப்படும். புறத்தைப் பற்றிய நானூறு பாக்கள் கொண்டது புறநானூறு எனப்படும். இதில் புலவர் பலர் பாடிய செய்யுட்கள் நானூறு அடங்கியிருக்கின்றன. இது கடைச் சங்க நூல்.

அற்றைத் திங்க ளவ்வெண் ணிலவின்
எந்தையு முடையேமெங் குன்றும் பிறர்கொளார்
இற்றைத் திங்கள் இவ்வெண் ணிலவின்
வென்றெறி முரசின் வேந்தரெங்
குன்றுங் கொண்டார்யா மெந்தையு மிலமே.

திணை : பொதுவியல் துறை : கையறுநிலை

—பாரி மகளிர்

## அருஞ்சொற்பொருள்

அற்றைத் திங்கள் - கடந்த மாதம்; குன்று - பறம்புமலை; வென்று- வெற்றி பெற்று; எறி - அடித்தல்; இற்றைத் திங்கள் - இந்த மாதம்; எந்தை - எம் தந்தை (மரூஉச்சொல்); வெண்ணிலவு - பண்புத்தொகை; எறிமுரசு - வினைத்தொகை; இலம் - தன்மைப்பன்மை வினைமுற்று.

பொதுவியல் - புறத்திணைகளுக்குப் புறம்பாக உள்ள செய்திகளைக் கூறும் பகுதி பொதுவியல் திணை எனப்படும்.

கையறுநிலை - இறந்தாரை எண்ணித் துயருறும் பகுதி இத்துறையில் அடங்கும்.

# 3. முத்தொள்ளாயிரம்

முடியுடை மூவேந்தராகிய சேர சோழ பாண்டிய அரசர்களைப் பற்றித் தொள்ளாயிரம் பாடல்களால் பாடப்பட்ட நூலாதலின், இது முத்தொள்ளாயிரம் எனப் பெயர் பெற்றது. தற்பொழுது இந்நூல் முழுவதும் கிடைக்கவில்லை. இயற்றிய ஆசிரியர் பெயரும் தெரியவில்லை.

## போர்க்களம்

கொடிமதிற் பாய்ந்திற்ற கோடு மரசர்
முடியிடறித் தேய்ந்த நகமும்—பிடிமுன்பு
பொல்லாமை நாணிப் புறங்கடை நின்றதே
கல்லார்தோட் கிள்ளி களிறு.

## அருஞ்சொற்பொருள்

இற்ற - ஒடிந்த; இடறி - உதைத்து; பிடி - பெண் யானை; புறங்கடை - வெளியிடம்; கொடி மதில் - இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை; இற்ற - பெயரெச்சம்; கோடும் நகமும் - எண் உம்மைகள்; புறங்கடை - இலக்கணப் போலி; தோள் + கிள்ளி = தோட்கிள்ளி - இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை; இச்செய்யுள் தற்குறிப்பேற்ற அணியாகும்.

## 4. சிலேடை

கீழ்வரும் பாடலை இயற்றியவர் அழகிய சொக்கநாதப் பிள்ளை. இவர் திருநெல்வேலியில் வேளாளர் மரபில் வந்த வன்னியப்பப் பிள்ளையின் மைந்தர். சுமார் அறுபது ஆண்டுகளுக்கு முன்னர் இருந்தவர். இரு பொருள்படப் பாடும் பாட்டே சிலேடையாகும்.

### சிவனுக்கும் தேங்காய்க்கும்

கல்லா லடியுறலால் கண்மூன்றிருப் பதனால்
எல்லோரும் பூசைக் கெடுத்திடலால்—வல்லோடு
கொள்ளுகையால் கங்கா குலமுத்து சாமிமன்னா
கள்ளிதழி யானிகர் தேங்காய்.

—அழகிய சொக்கநாதப்பிள்ளை

### அருஞ்சொற்பொருள்

சிலேடை - பல பொருள்படப் பாடுவது.

I. சிவனுக்கு: கல்லாலடி - கல்லாலமரத்தின் கீழ்; வல் ஓடு - பிரமனது வலிய தலை ஓடு; கண்மூன்று - நெற்றிக்கண்ணுடன் மூன்று கண்கள்.

தேங்காய்க்கு: கல்லாலடியுறல் - கல்லில் அடித்து உடைக்கப் படுதல்.

கங்காகுலம் - வேளாளர் குலம்; கள் - தேன்; இதழியான் - கொன்றை மாலையையுடைய சிவபெருமான்; நிகர் - ஒப்பாகும்.

## 5. கைம்மா தந்த கலக்கம்

பின்வரும் செய்யுளை இயற்றிய அந்தகக்கவி வீரராகவ முதலியார் நானூறு ஆண்டுகளுக்கு முற்பட்டவர். இவர் பிறவிக்குருடர் எனினும் பல இலக்கியங்களைக் கற்றுப் பெரும்புலமை எய்தியவர். திருக்கழுக் குன்றமாலை போன்ற பல நூல்களை இயற்றியவர். வேளாளர் மரபினர். பிறப்பிடம்: பூதூர். தந்தை: வடுகநாத முதலியார்.

'இம்பர்வான் எல்லைஇ ராமனையே பாடி
என்கொணர்ந்தாய் பாணா நீ?' என்றாள் பாணி;
'வம்பதாம் களப'மென்றேன் 'பூசும்' என்றாள்;
'மாதங்கம்' என்றேன் 'யாம்வாழ்ந்தேம்' என்றாள்;

'பம்புசேர் வேழ'மென்றேன் 'தின்னும்' என்றாள்;
'பகடு'என்றேன் 'உழு'மென்றாள் பழனந் தன்னை;
'கம்பமா' என்றேன் 'நற்களியாம்' என்றாள்;
'கைம்மா' என்றேன் சும்மா கலங்கினாளே.

—அந்தகக்கவி வீரராகவ முதலியார்

## அருஞ்சொற்பொருள்

இச்செய்யுளில் யானைபற்றி வரும் சொற்கள் ஒவ்வொன்றும் இரு பொருள் உடையவை. இம்பர் - இவ்வுலகம்; பாணன் × பாணி - யாழ் கொண்டு இசைபாடியும் கூத்தாடியும் வாழ்பவர்; வம்பு - புதுமை; களபம் - யானை, சந்தனம்; மாதங்கம் - யானை, பெரிய தங்கம்; வேழம் - யானை, கரும்பு; பகடு - யானை, எருது; பழனம் - வயல்; கம்பமா - யானை, கம்புமா; கைம்மா - யானை; ஒரே செய்யுளில் யானையின் பல பெயர்களை இருபொருள்பட அமைத்திருக்கும் நயம் காண்க.

## பயிற்சி

I. விடை எழுதுக :—

1. போர்க்களத்தில் கணவனை இழந்த மனைவி புலம்பிக் கூறுவதை எழுதுக.
2. 'பருவயிரத்தோள்' எனும்தொடர் எதனை விளக்குகிறது?
3. 'அற்றைத்திங்கள்' எனும் செய்யுள் எவரால் எப்பொழுது பாடப்பட்டது?
4. வென்றெறி முரசு - விளக்குக.
5. பொதுவியல், கையறுநிலை, திணை, துறை - குறிப்புகள் வரைக.
6. கிள்ளியினுடைய யானையின் பெருமிதம் எங்ஙனம் கூறப்பட்டுள்ளது?
7. பொல்லாமை நாணிப்புறங்கடை நின்ற நிலையினை விளக்கி வரைக.
8. தேங்காயும் சிவனும் ஒப்பாவது எப்படி?
9. யானையின் வெவ்வேறு பெயர்கள் யாவை?
10. பாணன் கூறியவற்றுக்கெல்லாம் பாணி வேறு வகையில் கருத்துக்கொள்ளக் காரணம் என்ன?

II. **பிரித்து விதி கூறுக:** வெண்ணிலவு, வென்றெறி, தோளெங்கே யெங்கே, பாய்ந்திற்ற, புறங்கடை, எல்லையிராமன்.

III. கல், முடி, கோடு - இச்சொற்களின் வெவ்வேறு பொருள்களை வரைக.

IV. பாரிமகளிர் பாட்டினின்று அவர் வரலாற்றுக் குறிப்பை உணர்ந்து வரைக.

V. முடி + இடறி, கல் + ஆர், வேந்தர் + எம், எம் + குன்று, களபம் + என்றேன்—இவற்றை இலக்கண விதி காட்டிச் சேர்த்தெழுதுக.

# உரை நடைப் பகுதி

## 1. சுவைப் பொருள்

[தொல்காப்பியம் பழைய தமிழ் இலக்கணம், அதன்கண் அமைந் துள்ள பொருளதிகாரம் தமிழ் மக்களின் பண்டைய நிலையை அறிவிக் கும் கருவூலம். தொல்காப்பிய உரையாசிரியர்களில் சிறந்த பேராசிரியர் மெய்ப்பாட்டியலில் சுவை பிறக்கும் வழிபற்றிக் கூறும் பகுதி இங்குத் தரப்படுகிறது:]

சுவைப் பொருளென்பன அறுசுவைக்கு முதலாகிய வேம் பும், கடுவும், உப்பும், புளியும், [பாக்கும்], கரும்பும் போல்வன; அவையாமாறு: நகைச் சுவைக்குப் பொருளாவன: குருடரும் முடவரும் செல்லும் செலவும், பித்தரும் களியரும் சுற்றத்தாரை இகழ்ந்தாரும் குழவி கூறும் மழலையும் போல்வன.

அச்சப் பொருளாவன:

"வள்ளெயிற் றரிமா வாள்வரி வேங்கை
முள்ளெயிற் றரவே முழங்கழற் செந்தீ
ஈற்று மதமா ஏகபாதம்
கூற்றங் கோண்மா குன்றுறை யசுணம்"

என்று சொல்லப்பட்டன போல்வன, இவற்றைச் சுவை கோடலென்பதென்னை யெனின், நகையும் அச்சமு முதலாகிய உணர்வு முற்காலத்து உலகியலான் அறிவானொருவன் அவற் றுக்கு ஏதுவாகிய பொருள்பிற கண்ட வழித்தோன்றிய பொறி யுணர்வுகள் அவ்வச்சுவை யெனப்படும். வேம்பென்னும் பொருளும் நாவென் பொறியும் தலைப்பெய்துழியல்லது கைப்புச் சுவை பிறவாதது போல, அப்பொருள் கண்ட வழியல்லது நகை யும் அச்சமும் தோன்று. ஒழிந்த காம முதலியனவும் அன்ன. இக்கருத்தே பற்றிப் பிற்காலத்து நாடக நூல் செய்த ஆசிரி யரும், "இருவகை நிலத்தி னியல்வது சுவையே" (செயிற்றியம்) என்றாரென்பது.

இனி, இருவகை நிலனென்பன உய்ப்போன் செய்தது காண்போர்க் கெய்துதலன்றே வெனின், சுவையென்பது ஒப் பினாய பெயராகலான் வேம்பு சுவைத்தவன் அறிந்த கைப்பறி வினை நாவுணர்வினாற் பிறனுணரான், இவன் கைப்புச் சுவைத்தா னெனக் கண்ணுணர்வினான் அறிவதன்றி. அதுபோல, அச்சத் துக்கு ஏதுவாகிய ஒரு பொருள் கண்டு அஞ்சி ஓடி வருகின்றா னொருவனை மற்றொருவன் கண்டவழி இவன் வள்ளெயிற்றரிமா முதலாயின கண்டு அஞ்சினானென் றறிவதல்லது வள்ளெயிற் றரிமாவினைத் தான் காண்டல் வேண்டுவதன்று; தான் கண்டானா யின் அதுவும் சுவையெனவே படும். ஆகவே அஞ்சினானைக் கண்டு நகுதலுங் கருணை செய்தலுங் கண்டோர்க்குப் பிறப்ப தன்றி அச்சம் பிறவாதாகலான், உய்ப்போன் செய்தது காண் போனுய்த்த அறிவின் பெற்றியாற் செல்லாதாகலின், இருவகை நிலமெனப்படுவன சுவைப் பொருளுஞ் சுவைத்தோனுமென இரு நிலத்தும் நிகழுமென்பதே பொருளாதல் வேண்டுமென்பது.

## அருஞ்சொற்பொருள்

கருவூலம் - நிதிக்குவியல்; களியர் - கள்ளுண்டோர்; அரிமா - சிங் கம்; ஈற்றா - கன்றையுடைய பசு; மதமா - மத யானை; ஏகபாதம் - ஒற் றைக் காலையுடைய உயிர்; கோண்மா - தாக்கவல்ல விலங்கு; அசுணம் - பறவை என்றும் விலங்கு என்றும் கூறுவர்; ஏது - காரணம்; தலைபெய் துழி - சேர்ந்தவிடத்து; அன்ன - அது போன்றவை; செயிற்றியம் - நாடக இலக்கண நூல், இன்று கிடைக்கவில்லை; நகுதல் - சிரித்தல், ஏளனம் செய்தல்.

## பயிற்சி

I. விடை எழுதுக :—

1. தொல்காப்பியம் என்பது யாது?
2. இப்பாடப்பகுதி எதிலிருந்து எடுக்கப்பெற்றது?
3. வாய்ச்சுவைப் பொருளென்பன யாவை?
4. கைப்புச்சுவை பிறத்தல் எங்ஙனம்?
5. நகையும் அச்சமும் தோன்றுதல் எங்ஙனம்?
6. நகைச்சுவைப் பொருள்கள் யாவை?
7. அச்சத்தை ஊட்டும் பொருள்கள் எவை?

II. சொந்த வாக்கியங்களில் பயன்படுத்துக :—பண்டை நிலை, கரு வூலம், அறுசுவை, நகைச்சுவை, குழவி உறும் மழலை, முற்காலத்து, பொறி உணர்வுகள், நகுதல்.

III. 'இருவகை நிலத்தின் இயல்வது சுவையே' என்ற தலைப்பில் ஒரு கட்டுரை எழுதுக.

IV. செந்தீ - செம்மை + தீ - பண்புத் தொகை. தொல்காப்பியம், செந் தமிழ், மூதூர், பைங்கூழ், தண்ணீர் - இவை பண்புத் தொகைகள் ; இவற்றினைப் பிரித்து விதிகளுடன் எழுதுக.

V. இப்பாட்டம், கடைச்சங்க காலத்தில் வழக்கத்தில் இருந்த தமிழ் நடையினை எடுத்துக் காட்டுவதற்கேயாம். இது பழங்காலத் தமிழ் நடை. தொல்காப்பியம் பொருளதிகாரம் மெய்ப்பாட்டியலுக்கு உரை எழுதிய பேராசிரியரின் உரைநடை இவ்வாறு அமைந்துளது. அக்கால உரைநடைக்கும், இக்கால உரைநடைக்கும் எத்தனை வேறுபாடுள தென்பதை அறிக.

# 2. முத்தமிழ்

திரு. வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார் அவர்கள், B.A.

[இவ்வாசிரியர் சென்னைக் கிறிஸ்துவக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியராயிருந்தவர்; சிறந்த புலவர்; சிறந்த ஆராய்ச்சி நூல்களையும் செய்யுட்களையும் நாடக நூல்களையும் எழுதி அழியாப் புகழ் பெற்றவர். தமிழ் தனித்தியங்க வேண்டுமென்னும் கருத்துக் கொண்டவர்; அதற் கேற்பத் தம் பெயரைப் பரிதிமாற் கலைஞர் என மாற்றிக் கொண்டவர். இவர் இயற்றிய "தமிழ் மொழி வரலாறு" என்னும் நூலிலிருந்து இப் பாடப்பகுதி எடுக்கப்பட்டுள்ளது. இவர் காலம் கி. பி. 1870—1903.]

தொன்று தொட்டுத் தமிழ்மொழி இயல், இசை, நாடகம் என்னும் மூன்று பிரிவுகளுடையதென்று பலருங் கூறுகின்றனர். அம்மூவகைப் பாகுபாடுகளின் இயல்புகளைக் குறித்துச் சிறிது ஆராய்வோம் :

இயற்றமிழ் என்பது தமிழர் யாவர் மாட்டும் பொதுமையின் இருவகை வழக்கினும் இயங்குகின்ற வசனமுஞ் செய்யுளுமாகும் நூல்களின் தொகுதியாம். இதன்கண் இலக்கியங்களும் இலக் கணங்களுமாகிய யாவும் அடங்கு மென்க. முற்காலச் சங்கச் செய்யுட்களும் அவற்றின் உரைகளும், இடைக்காலத்துக் 'கம்பராமாயணம்' முதலிய நூல்களும் அவற்றின் உரைகளும் இக்காலத்து வெளிப்படும் செய்யுள் நூல்களும் ஆகிய யாவையும் இயற்றமிழாம். இவ்வியற்றமிழ், இசைத் தமிழ்க்கும் நாடகத் தமிழ்க்கும் முன்னர்த் தோன்றினமையின், இஃது அவ்விரண் டிற்கும் உயிரென விளங்குவது. இயற்றமிழின்றி அவ்விரண்டும் தனித்தியங்குவனவல்ல.

இசைத்தமிழ் என்பது, பண்ணொடு கலந்தும் தாளத்தோடு கூடியும் இயங்குஞ் செந்தமிழ்ப் பாட்டுக்களானும் கொடுந்தமிழ்ப் பாட்டுக்களானும் இயன்ற இலக்கியங்களும் அவற்றின் இலக் கணங்களுமாகும் நூல்களின் தொகுதியாகும். இதன்கண், கீர்த்தனங்களும், வரிப்பாட்டுக்களும், சிந்து, ஆனந்தக் களிப்பு, கும்மி, தெம்மாங்கு முதலியனவும் அடங்குமென்க. இயற்றமிழின்

கண் வழங்குஞ் சொற்களும் சொற்றொடர்களுமின்றி இசைத் தமிழ் எங்ஙனம் இயங்க முடியும்? அன்றியும் இயற்றமிழ்ச் செய்யுட்கள் இசையெடுத்துத் தாள மறுத்துப் பாடப்படின், அவையும் இசைத் தமிழின்பாற் படும். இராகத்தோடு மட்டில் இயைத்துப் பாடப்படும் பாடல்கள் இயற்றமிழின்பாற் பட்டன வாக மதிக்கப்படுமே யன்றிப் பிறிதில்லை. தாளமும் உடன் கூடிய வழியே அவை இசைத் தமிழின்பாற் படுமென்க......இவ் விசைத் தமிழ், நாடகத்தமிழ்க்கு முன்னர்த் தோன்றினமை பற்றி முன் வைக்கப்படுவதாயிற்று. அன்றியும் இவ்விசைத் தமிழே நாடகத் தமிழிற்குச் சிறப்பும் விளக்கமுந் தந்து நிற்பதாம். இசைத் தமிழ் இல்வழி நாடகத் தமிழிற்கு இயக்கமில்லை. இயற் றமிழும் இசைத் தமிழுங் கூடிய வழியே நாடகத் தமிழ் பிறக்கு மென்று கூறுதலே அமைவுடைத்தாம்.

இனி இடைக்காலத் தொடக்கத்தில் தோன்றிய இசைத் தமிழிலக்கிய நூலாகிய மூவர் 'தேவாரங்'களும் தமிழிற்கே உரிய பண்ணும் திறனும் பயின்றனவாகி ஒளிர்கின்றன. அத் தேவாரங்களுக்குப் பின்னர் ஏற்பட்ட இசைத் தமிழிலக்கிய நூல் களில் வடமொழி இராக அமைப்பும் தாள அமைப்பும் காணப்படு கின்றன. அதன்மேல் இற்றை நாள்களில் உலவுறும் இலக்கிய மும், இலக்கணமாகிய இசைத் தமிழ் நூல்களெல்லாம் 'மேள கர்த்தா' என்னும் வடநூலைத் தழுவியே அமைக்கப்பட்டிருக் கின்றன. சிற்சில நூல்கள் நாட்டியத்திற்குரிய வடமொழிப் பரத தாளங்களினும் ஏற்பட்டிருக்கின்றன. இசைத் தமிழின்கண் ஏற்பட்ட வடமொழிக் கலப்பு இவ்வளவுதான்.

நாடகத்தமிழ் என்பது, கையில் நூலெடுத்துப் படித்தற் குரிய அவகாசமில்லாத வேலைக்காரர்களுக்கும், படிக்கத் தெரியா தவர்களுக்கும் நல்லறிவு புகட்டும் நோக்கத்தோடு வகுக்கப் பட்டது. அது கேட்போருக்கும் காண்போருக்கும் இன்பம் பயவாவிடின், சாமான்ய மக்கள் அதனை விரும்பிச் செல்லாராத லின், அஃது இன்பச் சுவையோடு இயல்வதாயிற்று. உலகத்தின் இயல்பினை உள்ளதை உள்ளவாறே புனைந்து காட்டுவது நாடகத் தமிழேயன்றி வேறில்லை. இயற்றமிழும் இசைத்தமிழும் சேர்ந்த வழியே நாடகத்தமிழ் பிறந்த தெனினும் நாடகத்தமிழிற்கு வேறு

தனிப் பெருஞ்சிறப்பு உள்ளது. முன்னையன இரண்டும் கேள்வி யின்பம் மட்டிலே பயப்பனவாய் நிற்கின்றன. இவ்விரண்ட னடியாகப் பிறந்த நாடகத் தமிழோ, கேள்வியின்பம் பயப்பதே யன்றிக் காட்சியின்பமும் உடன் பயக்கின்றது. இச்சிறப்புப் பற்றியே பிறநாடுகளிலுள்ள பிறமொழிப் புலவர்கள் நாடகங்களை மிக்க மேன்மையுடையனவாக மதிக்கின்றனர்.

இத்துணைப் பெருமை வாய்ந்த நாடகத் தமிழின் தோற்ற மென்ன? "தமிழ் நாடகம் முதலில் உண்டானது மத விடய மாகவே என்பது துணியப்படும். அது கடவுளர் திருவிழாக் காலங்களில் ஆடல் பாடல்கள் இரண்டையும் சேர நிகழ்த்துவதி னின்றும் உண்டாயிற்று. சில காலத்தின் பின்னர்க் கதை நடை யான மனப்பாடங்களும் உடன் கூடின; அதன்மேல் முதலில் பாடலாயுள்ள சம்பாஷணைகளும் அவற்றுடன் சேர்க்கப் பட்டன. பிற்பாடு நாடகத்தமிழ், 'வேத்தியல்,' 'பொதுவியல்' என்ற இரு பிரிவினதாக அரசர்களானும் ஏனையோரானும் ஆத ரித்து வளர்க்கப்பட்டது. கி. மு. மூன்ரும் நூற்ருண்டினுதல் அல்லாக்கால் அதனினுஞ்சற்று முற்காலத்திளுதல் நாடகத்தமிழ் உயர்நிலை உற்றிருத்தல் வேண்டும். நாம் உணர்ந்த பழமையான நாடகத்தமிழ் நூல்கள் அனைத்தும் அக்காலத்தே நின்று நிலவின வாதலினென்க. ஆகவே, அது குற்றங் குறைவு இல்லாது உண் டானதொரு தொழிலென்றே ஆதியின் மதிக்கப்பட்டது," என்று 'நாடக விய'லின் முகவுரைக்கட் கூறிய கூற்றையுங் காண்க.

அக்காலத்துச் சங்கப் புலவர்கள் செய்த 'பரதம்', 'அகத்தி யம்', 'முறுவல்', 'சயந்தம்', குண நூல்', 'செயிற்றியம்', 'மதி வாணர் நாடகத் தமிழ் நூல்', 'கூத்த நூல்', 'நூல்' என்ற நாட கத் தமிழ் நூல்களெல்லாம் யாண்டுப் போயொளித்தன? 'சிலப் பதிகாரம்' என்னும் நாடகக் காப்பிய மட்டிலே தப்பித் தவறி வெளியேறி விட்டது. அதனை வெளிப்படுத்திய பண்டித சிகா மணி சாமிநாத ஐயர்க்குத் தமிழுலகஞ் செய்யக்கடவ கைம்மா றென்னே!

நாடக சாலையை உலகத்தின் பிரதிவிம்பம் என்றெண்ணி ஆங்கு நடித்துக் காட்டப்படுவவற்றுள் தமக்கு வேண்டிய நற்

பகுதிகளை மட்டில் ஏற்றுப் போவதே நன்மக்கள் இயல்பு. உழைத்த உள்ளத்திற்கு இன்பந்தந்து ஊக்கம் விளைப்பன நாடகங்களே. சிற்சிலர் அறிவு திரிந்து வேறுபட்டவராயின், அஃது அவரது இயற்கைத் தன்மைகளுள் ஒன்றுமேயன்றி, நாடகத்தால் விளைந்த செயற்கைத் தன்மையன்றும்.

சிலர் 'நாடகம்' என்ற சொல் வட சொல்லாதல் கண்டு' ஆரியரொடு கலந்த பின்னரே தமிழர்களிடத்தில் நாடகத்தமிழ் ஏற்பட்டிருத்தல் வேண்டும் என்கின்றனர். இக்கூற்று, வடமொழியில் 'வாய்' என்பதற்குத் தக்க சொல் இல்லாமையால் வடமொழியாளருக்கு வாயில்லை என்பது போலும். அஃதன்றியும், 'கூத்து' என்றே சொல்லே ஆதியில் தமிழர்கள் வழங்கியது; கூத்தென்பது கதை தழுவி வரும் கூத்து. எனவே நாடகமென்ற சொல் வழக்கின் முன்னரே, நாடகத் தொழில் வழக்கும், நாடக நூல் வழக்குந் தமிழர் மாட்டு உண்டென்பது பெற்றும்.

## அருஞ்சொற்பொருள்

தொன்று தொட்டு - பழையகால முதலே; இருவகை வழக்கு - உரைநடை, செய்யுள் என்பன; பண் - இராகம்; அறுத்துப் பாடப்படின் - நீக்கிவிட்டு பாடினல்; இயைத்து - பொருத்தி; இல்வழி - இல்லாத பொழுது; அமைவுடைத்தாம் - பொருத்தமுடையதாகும்; உலவுறும் - உலாவுகின்ற; அவகாசம் - ஓய்வு நேரம்; பயவாவிடின் - உண்டாக்காவிட்டால்: சமான்ய மக்கள் - பாமர மக்கள்; புனைந்து - கற்பனை செய்து; கேள்வியின்பம் - செவிகளாற் கேட்பதற்கு இன்பம்: காட்சியின்பம் - கண்களாற் காணுதற்கு இன்பம்; சம்பாஷணை - இருவரிடை நிகழும் பேச்சு; வேத்தியல் - அரசர்க்கென்று தனியே நடத்தும் கூத்து; பொதுவியல் - பொது மக்கள் காண்பதற்கென்று நடத்தும் கூத்து; யாண்டு - எங்கே; செய்யக்கடவ - செய்யக் கூடிய; கைம்மாறு - திருப்பிச் செய்யும் உதவி.

## பயிற்சி

I. விடை எழுதுக :—

1. இயற்றமிழ் என்பது யாது ?
2. இசைத் தமிழ் என்ருல் என்ன ? சில சான்றுகள் தருக.
3. இயல், இசை, நாடகம் என்ற முறைவைப்புக்குக் காரணம் கூறுக.
4. பழைய இசைத் தமிழ் நூல்களில் பெரும்பாலன இறந்துவிட்டதற்குக் காரணம் யாது ?

5. இயல், இசைத் தமிழ்களுக்கு இல்லாத தனிச் சிறப்பு நாடகத்திற்கு என்ன உண்டு?

6. தமிழ் நாடகம் எவ்வாறு தோன்றி வளர்ந்தது?

7. நாடகத் தமிழ் நன்கு வளராது போனதற்குக் காரணம் என்ன?

8. பண்டைக் காலத்திலிருந்து இப்பொழுது இறந்தொழிந்த நாடகத் தமிழ் நூல்கள் சில கூறுக.

9. இயற்றமிழில் புலமை பெற்ற புலவர்கள் இயற்றிய சில கூத்து நூல்களைக் கூறுக.

10. கூத்துக்கும் நாடகத்திற்கும் வேறுபாடு யாது?

II. 1. இயற்றமிழ், இசைத் தமிழ், நாடகத் தமிழ் நூல்கள்—இவற்றைத் தனித்தனியே தொகுத்து எழுது.

2. நாடகத் தமிழின் தோற்றம், வளர்ச்சியைக் குறித்து இருபது வரிகளில் ஒரு கட்டுரை வரைக.

3. இயற்றமிழ் மற்றிரண்டிலும் சிறந்ததென்பதை விளக்கி ஒரு கட்டுரை வரைக.

III. 1. சொந்த வாக்கியங்களில் அமைக்க :—தொன்று தொட்டு, உயிரென, தனித்தியங்குவன. தாள மறுத்து, வடமொழிக் கலப்பு, மதிக்கபடும்.

2. பின்வரும் சொற்களுக்குரிய தமிழ்ச் சொற்கள் கூறுக :—வசனம், இராகம், கீர்த்தனே, அவகாசம், சாமான்ய, மதவிடயம், சம்பாஷணே, பிரதிவிம்பம், நாடகசாலே.

IV. 1. புகழ்×இதழ் - இவை எதிர்சொற்கள். தொன்றுதொட்டு, பலரும், சிறிது, பொதுமை, தொகுதி, முற்காலம், செந்தமிழ், இற்றைநாள், இன்பச்சுவை, மேன்மை, பெருமை, வேத்தியல், சிற்சிலர் - இவற்றுக்கு எதிர்ச்சொற்கள் வரைக.

2. கூறுகின்றனர் - கூறு + கின்று + அன் + அர் - இவ்வாறு பகுதி, காலம் காட்டும் இடைநிலே, சாரியை, விகுதி முதலியவை பெற்று ஒரு வினேச்சொல் முற்றுப் பெறுகிறது.

பகுதி, சந்தி, இடைநிலே, சாரியை, விகுதி, விகாரம் என வினேமுற்று ஆறு உறுப்புக்கள் பெறும்; இவற்றுட் சில குறையப் பெற்றும் வரும். இவ்வாறு உறுப்பு உறுப்பாகப் பிரித்துக் கூறுதல் **உறுப்பிலக்கணம்** கூறுதல் எனப்படும். இதனேப் பகுபத இலக்கணம் கூறுதல் என்றும் கூறுவர். ஆராய்வோம், ஒளிர்கின்றன; மதிக்கின்றனர், வளர்த்தனர், காண்க - இவற்றிற்கு உறுப்பிலக்கணம் கூறுக.

# 3. பட்டினப் பாலை

பேராசிரியர், டாக்டர் மா. இராசமாணிக்கனுர், M.A., L.T., M.O.L., (ph.D.)

[இவ்வாசிரியர் மதுரைத் தியாகராசர் கல்லூரியின் தமிழ்த்துறைத் தலைமைப் பேராசிரியர் ஆவர். தமிழில் பல ஆராய்ச்சி நூல்களையும் பாடநூல்களையும் எழுதி வெளியிட்டிருக்கின்ருர். இவர்தம் "பத்துப் பாட்டுக் காட்சிகள்" என்ற நூலிலிருந்து இப்பகுதி தரப்பட்டிருக் கிறது.]

## முன்னுரை

காவிரிப்பூம்பட்டினத்தைச் சிறப்பித்துக் கூறிப் பாலைத்திணை யில் அமைந்ததாதலின் இப்பாட்டுப் பட்டினப் பாலை எனப் பெயர் பெற்றது. இது வேற்று நாட்டுக்குச் செல்லத் தொடங் கிய தலைவன் தனது நெஞ்சை நோக்கி, 'தலைவியைப் பிரிந்து வாரேன்' என்று தனது செலவை நிறுத்திக் கூறும் கூற்ருகக் கரிகாற் சோழனைக் கடியலூர் உருத்திரங் கண்ணனுர் பாடியது. இப்பாட்டு 301 அடிகளை உடையது. இப்பாடலைக் கேட்டு உவந்த கரிகாற் சோழன் உருத்திரங் கண்ணனுருக்குப் பதினறு இலட்சம் பொன் பரிசாக அளித்தனன் என்று நூல்கள் கூறும்.

## காவிரியாற்று வளம்

காவிரியாறு மேற்குத் தொடர்ச்சி மலையில் தோன்றிக் கட லிற் பாயும். வெள்ளி என்னும் விண் மீன் தான் நிற்பதற்குரிய வடதிசையில் இல்லாது, தென்திசையிற் சேரினும் வானம் பொய்ப்பினும் பொன் கொழிக்கும் காவிரியில் நீர் வற்ருது. இத்தகைய வளமுடைய காவிரி பாயப் பெற்ற நாடு சோழ நாடு.

## மருத நிலவளம்

மருத நிலத்தில் ஊர்கள் நெருக்கமாக இருக்கும். வயல்கள் மிக்க விளைச்சலை நல்கும். கருப்பஞ் சாறு காய்ச்சும் கொட்டில் களில் எழுந்த இனிய புகை படுவதால் வயலில் உள்ள நெய்தற் பூ வாடும். எருமைக் கன்றுகள் செந்நெற் கதிர்களை வயிருர உண்டு நெற்குதிர்களின் நிழலில் உறங்கும். செழித்த வயல்களில்

குலைத் தெங்கும், குலை வாழையும், காய்க் கமுகும், மஞ்சளும், பல்வேறு மரங்களும், குலைகளை யுடைய பனையும் நெருங்கி வளரும். ஊர்களில் உள்ள மனைகளின் முற்றத்தில் நெல் உலர வைக்கப்பட்டிருக்கும். அதனைக் கோழிகள் தின்னுதபடி சிறு பெண்கள் காவலாக விருப்பர்; நெல்லைத் தின்னும் கோழிகளைத் தம்முடைய மகரக் குழைகளால் எறிந்து ஓட்டுவர். கால்களில் தண்டையணிந்த சிறுவர் உருளைகளை யுடைய சிறு தேர்களை முற்றத்தே உருட்டி விளையாடுவர். முன்னர்ப் பெண்கள் எறிந்த மகரக் குழைகள் அத்தேர் உருளைகளின் போக்கைத் தடுக்கும்.

நெய்தல் நிலத்தில்

சோழ நாட்டைச் சேர்ந்த பல ஊர்களிலும் சென்று உமணர் உப்பை விற்ற விலைக்கு நெல்லைப் பெற்றவர்; அதனைப் படகுகளில் ஏற்றிக்கொண்டு தத்தம் நெய்தல் நில ஊர்கட்குச் செல்வர். தோப்புக்களை அடுத்துப் பூஞ்சோலைகள் இருக்கும். அப்பூஞ்சோலைகளில் பொய்கைகள் இருக்கும். அப்பொய்கைகளில் மணம் நிறைந்த பன்னிற மலர்கள் மலர்ந்திருக்கும்.

நகரத்தில்

இத்தகைய வளமிக்க சோழ நாட்டின் தலை நகரம் காவிரிப் பூம்பட்டினமாகும். அப்பெரு நகரின் மதில் திண்ணியது; புலி அடையாளம் தீட்டப் பெற்ற வலிய கதவுகளைக் கொண்டது. நகரத்தில் உணவுச் சாலைகள் பலவுண்டு. அவற்றில் வடிக்கப் படும் கஞ்சி ஆற்று வெள்ளம் போலப் பெருகி ஓடும். அதனைப் பருகச் செல்லும் எருதுகள் தம்முள் போரிடலால், அது மண் கலந்து சேறுகிவிடும். தரை காய்ந்த பிறகு அதன்மீது தேர்கள் ஓடுதலால் புழுதியாகி மேலெழும்; எழுந்து பலவகை ஓவியங்கள் தீட்டப்பெற்ற வெண் சுவருடைய கோவில்கள்மீது படிந்து, அவற்றை மாசு படுத்தும். நகரத்தில் அமணப் பள்ளிகள் உண்டு. அவை ஒவ்வொன்றிலும் குளமுண்டு. சடைமுடியுடைய முனிவர் இள மரக்காவில் தங்கியிருப்பர். அவர்கள் நெருப்பில் நெய் பெய்து ஓமம் செய்வர். அங்குள்ள குயில்கள் ஓமப் புகையைக் கண்டு

மேகம் என மருண்டு காளி கோட்டத்தில் உள்ள புருக்களோடு பழமரப் பொந்துகளில் தங்கும்.

### பரதவர் செயல்கள்

பட்டினப்பாக்கத்தில் உள்ள பரதவர் இருல்மீனின் இறைச்சியையும் வயல் ஆமையின் இறைச்சியையும் சமைத்து உண்பர். வறண்ட அடம்பின் பூவையும் ஆம்பற் பூவையும் பறித்துச் சூடுவர் ; பொது விடத்தே மிகப் பலராகக் கூடுவர் ; ஆட்டுக் கடாக்களையும் கவுதாரிகளையும் போரிடச்செய்து பொழுது போக்குவர் ; பின்னர் மற்போரும், கருவிப்போரும் புரிவர். அதன்பிறகு கவண்கல் வீசி விளையாடுவர். அக்கல்லெறிக்கு அஞ்சிக் குட்டிகளை ஈன்ற பன்றிகளும் கோழிகளும் திசை கெட்டு ஓடும். பரதவர் முழுநிலா இரவில் மீன் பிடிக்கச் செல்லார் ; தழை உடையணிந்த தம் மகளிரோடு மணல் முற்றத்தே கூடுவர் ; அவ்விடத்தில் சினைச்சுருவின் கொம்பை நடுவர் ; அதனிடத்து ஏறிய தெய்வத்தை வழிபடுவர் ; அதன்மீது வெண்டாளிப் பூவால் கட்டிய மாலையை அணிவர் ; தாழம்பூவைச் சூடுவர்; பனையிலிருந்து இறக்கிய கள்ளையும், நெல்லாற் சமைத்த கள்ளையும் குடித்துக் களித்து விளையாடுவர். பிறகு அவர்கள் கடற்கரையில் கூடிக் காவிரி கடலொடு கலக்கும் இடத்தில் நீராடுவர்; நீராடியபின் கடல்நீர் உப்பு நீங்கும் பொருட்டு ஆற்று நீரில் குளிப்பர் ; நண்டுகளைப் பிடித்தாட்டுவர் ; பரவிவருகின்ற அலைகளைக் காலால் மிதிப்பர் ; மணலினுல் பாதைகள் செய்வர் ; உயர்ந்த மாடங்களிலிருந்து செல்வமகளிர் பாடும் பாடல்களைக் கேட்டு மகிழ்வர். இரவில் உயர்ந்த மாடங்களில் விளக்குகள் எரியும். வைகறையில் கட்டுமரங்களிற் செல்லும் பரதவர் அவ் விளக்குகளை அறிவர். காலையில் கடைத்தெருவில் பலரும் வழி படும் தெய்வங்களுக்குப் பாடுமகளிர் பக்திச் சுவையுடைய பாடல்களைப் பாடுவர். அக்கோவில்களில் புல்லாங்குழல், யாழ், முரசு முதலிய இன்னிசைக் கருவிகள் ஒலிக்கும் ; விழாக்கள் சிறப்புற நடைபெறும்.

### பண்டசாலை

பரதவர் வாழும் அகன்ற தெருவில் காவலைக்கொண்ட பண்டசாலை உள்ளது. உள்நாடுகளிலிருந்து கொண்டுவரப்

பட்ட பண்டங்கள் சுங்கம் மதிப்பிடப்பட்டு, புலி முத்திரை இடப்பட்டு, கப்பல்களில் ஏற்றும்பொருட்டுப் பண்டசாலை முற்றத்தே அடுக்கிக் கிடக்கும். கப்பல்களில் இருந்து இறக்கப் பட்ட பண்டங்கள் புலிப்பொறி இடப்பெற்றுச் சுங்கம் மதிப் பிடப் பண்டசாலை முற்றத்தின் ஒரு பக்கத்தே குவிந்துகிடக்கும். சுங்கம் கொள்பவர் சிறுபொழுதும் ஓய்வின்றி நாடோறும் சுங்கம் கொள்வர். நாய்களும் ஆட்டுக்கடாக்களும் பண்டசாலை முற்றத்தில் கிடக்கும் மூட்டைகளின் மீது ஏறிக் குதிக்கும்.

## மகளிர் விழாக் காணல்

உயர்ந்த மாடங்கள் பல ஏணிப்படியை உடையனவாய் இருக்கும். வானளாவிய மாடங்களில் வாழ்ந்த மகளிர் சிவந்த அடியினர்; பவள நிறத்தினர்; மெல்லிய உடையினர்; கிளிமொழி யினர்; மயிலின் சாயலர். அவர்கள் தென்றற் காற்று வீசும் சாள ரங்களின் எதிரே நின்று கடைத்தெருவை நோக்குவர்; அப் பொழுது கடைத்தெருவில் சிலர் பாடுவர்; சிலர் புல்லாங்குழல் ஊதுவர்; சிலர் யாழ் வாசிப்பர்; சிலர் முரசொலிப்பர். அந்த நிலை யில் முருகக் கடவுள் முதலிய தெய்வங்கட்கு விழாக் கொண்டா டப்படும். அப்பொழுது மேற் சொல்லப்பட்ட மாடங்களில் உலாவும் மகளிர் தம் கைகளைக் குவித்து வணங்குவர்.

## கடைத் தெருவில் பலவகைக் கொடிகள்

வீட்டில் உலவும் தெய்வங்கள் மகிழும்படி வாயில்களில் கொடிகள் நாட்டப்பட்டிருக்கும். கடைத்தெருவில் இரண்டு வரிசைகளிலும் எடுத்த கொடிகள் கருபின் பூக்களைப்போல விளங்கும். கூலவகைகளை நிரப்பித் தாழிடப் பெற்ற அறை களில் கொடிகள் கட்டப்பட்டிருக்கும். பல நூல்களை நன்கு கற்ற ஆசிரியர்கள் பிறரை வாதுக்கழைக்கக் கொடிகள் கட்டியிருப்பர். துறைமுகத்தே நிற்கும் பலவகைக் கப்பல்கள் மீது கொடிகள் கட்டப்பட்டிருக்கும். 'இஃது இன்ன கடை' என்பதை மக்களுக்குணர்த்த ஒவ்வொரு கடையிலும் ஒவ்வொரு வகைக் கொடி கட்டப்பட்டிருக்கும். இவ்வாறு தெருக்களில் எண்ணிறந்த கொடிகள் கட்டப்பட்டிருத்தலால் ஞாயிற்றின் ஒளிக்கதிர்கள் தெருவிற் பெரிதும் படுவதில்லை என்னலாம்.

**கடைத்தெருவில் பலநாட்டுப் பண்டங்கள்**

மலைநாட்டு மிளகும் பொன்னும், பொதிய மலையிற் பிறந்த சந்தனமும் அகிலும், தென் கடலில் பிறந்த முத்தும், கீழ்க் கடலில் பிறந்த பவளமும், கங்கையாற்றுப் பாய்ச்சலால் விளைந்த பொருள்களும், காழக (பர்மா, நாட்டுப் பொருள்களும், சீனம் முதலிய இடங்களிலிருந்து வந்த பனிநீர் முதலியனவும், காவிரி யாற்றுப் பாய்ச்சலால் விளைந்த பொருள்களும், இலங்கைப் பொருள்களும், பிறவும் புகார் நகரத்துக் கடைத்தெருவில் மிகுதி யாகக் குவிந்து கிடக்கும். வெளி நாடுகளிலிருந்து வந்த பல் வேறு மொழிகளைப் பேசும் மக்கள் நகரில் குடியிருப்பர்.

**வேளாளர் இயல்பு**

வேளாளர் அருள் ஒழுக்கம் நிறைந்தவர். அவர்கள் அறி வுரையால் வலைஞர் முற்றத்தில் மீன்கள் பாய்ந்து திரியும். ஊன் விற்பவர் குடிசையில் ஆடு முதலியன திரண்டு இருக்கும். வேளாளர் களவு செய்பவரை அத்தொழிலினின்று நீக்குவர்; அந்தணரது புகழை நிலைநிறுத்துவர். பலர்க்குத் தானம் அளித் தல் வேளாளர் இயல்பு.

**வணிகர் இயல்பு**

வணிகர் நுகத்தில் தைத்த பகலாணியைப் போல நடுநிலை பிறழாத நெஞ்சினர்; மிகச் சிறிய அளவு ஆதாயம் வைத்துப் பொருள்களை விற்பவர்; தாம் கொடுக்கும் பொருளுக்கு ஏற் பவே சரக்கையும் கொள்வர்; அவ்வாறே தாம் வாங்கும் பொரு ளுக்குக் குறையாத மதிப்புடைய பொருளையே கொடுக்கும் இயல்பினர்.

**கரிகாலன் வீரம்**

வலிய புலிக்கூட்டில் அடைபட்டு வளர்ந்தாற்போலக் கரி காலன் பகைவரது சிறையிலிருந்து வளர்ந்தான்; சிறையிலிருந்து வெளியேற விரும்பி, காவலரை வாளால் துணித்து, அவ்விடத் தினின்றும் அகன்றான்; தனது அரசுரிமையை முறைப்படி பெற்றான். பின்னர் அவன் தனது நாட்டை உருவாக்க நாற் படைகளுடனும் சென்றான்; பகைவர் நாடுகளைக் கைப்பற்றி

னுன்; அவனுல் கைப்பற்றப்பட்ட ஊர்களில் கூகைகள் இருந்து குழறின; மதில்கள் அழிந்தன. எத்துணை அரசர்கள் எதிர்த்து வரினும் தான் ஒருவனுய் நின்று வெல்ல வல்லவன் என்று பெருமிதம் கொண்டிருந்த பாண்டியனை அவன் வென்ருன். அவன் நினைத்தவற்றை நினைத்தவாறே முடிக்க வல்லவன். அருவா நாட்டார், குட்ட நாட்டார், குட நாட்டார், இருங்கோ வேளிர் முதலியவர்களைத் தனக்குக் கீழ்ப்படுத்தியவன். அவன் காடு கெடுத்து நாடாக்கியவன்; ஆங்காங்குக் குளங்களை அகழ் வித்தவன்; உறையூரில் கோவில்களையும் குடிகளையும் நிலை பெறச் செய்தவன். இங்ஙனம் பல நாடுகளை வளப்படுத்தியதனுல் அவன் கரிகால்வளவன் எனப் பெயர் பெற்ருன்.

### புகாரில் அம்பலம்

புகாரில் அம்பலம் ஒன்று உண்டு. அதனில் அருள் தறி நிறுத்தப் பட்டுள்ளது. சிறை செய்யப்பட்ட பகைவர் நாட்டு மகளிர் துறையில் நீராடி அம்பலத்தை மெழுகுவர்; விளக்கை ஏற்றி வைப்பர். அங்குப் பல நாட்டாரும் சென்று வணங்குவர்.

### தலைவன் செய்த முடிவு

"நெஞ்சமே, என் காதலி இங்கே தனித்து இருப்ப, நான் மேற் சொல்லப்பட்ட பல சிறப்புகளை உடைய காவிரிப்பூம் பட்டினத்தையே பரிசிலாகப் பெறுவேனுயினும், திருமாவளவ னுடைய செங்கோலைப் போல் குளிர்ந்த தோள்களை உடைய தலைவியைப் பிரிந்து, அவ்வரசன் பகைவர்மேல் செலுத்தும் வேலைக்காட்டிலும் மிக்க வெப்பத்தை உடைய கானகத்தைக் கடந்து வாரேன்" என்று கூறித் தலைவன் தலைவியைப் பிரிய மன மில்லாது தங்கினுன்.

## அருஞ்சொற்பொருள்

செலவை - பயணத்தை; பொய்ப்பினும் - தவறினுலும்; கொழிக் கும் - திரட்டும்; மருதநிலம்-விளைநிலம்; (மருதம்-வயலும் வயல்சார்ந்த இடமும்) கமுகு - பாக்கு; குழை - காதணி; உமணர் - உப்பு வணிகர்; பொய்கை - குளம்; கோட்டம் - கோவில்; அமணப்பள்ளி - சமணர் கோவில்; இளமரக்கா - பூந்தோட்டம், சோலை; இறைச்சி - ஊன்; வைகறை - விடியற்காலை; சுங்கம் - வரிப்பொருள்; புலிப்பொறி - புலி

இலச்சினை; கூலம் - தானியம்; முழவு - மத்தளம்; துணித்த - வெட்டி; அகழ்தல் - தோண்டுதல்.

## பயிற்சி

I. விடை வரைக:

1. பட்டினப்பாலை-குறிப்புத் தருக.

2. காவிரியின் வளம் எவ்வாறு கூறப்படுகிறது?

3. சோழநாட்டின் வளத்தினைக் கடியலூர் உருத்திரங்கண்ணனார் எவ்வாறு கூறியுள்ளார்?

4. பட்டினப்பாக்கத்திலுள்ள பரதவர்களின் செயல்கள் யாவை?

5. பண்டசாலையின் காட்சி எவ்வாறு வருணனை செய்யப்படுகிறது?

6. மகளிர் விழாக்காணுதலின் மாண்பு ஆசிரியரால் எவ்வாறு அழகுபெறக் கூறப்பட்டுள்ளது?

7. கடைத்தெருவில் நாட்டப் பெற்றிருந்த கொடிகள் யாவை?

8. பிறநாடுகளிலிருந்து பூம்புகாரில் இறக்குமதியான பொருள்கள் யாவை?

9. வேளாளரின் இயல்பு யாது?

10. கரிகாலனின் வீரத்தைக் கடியலூர் உருத்திரங் கண்ணனார் எவ்வாறு பாராட்டியுள்ளார்?

II. 1. பட்டினப்பாலை வழங்கும் பல்வகைக் காட்சிகள் என்ற தலைப்பில் ஒரு கட்டுரை வரைக.

2. கரிகாலன் ஆட்சியில் மக்கள் நிலை என்ற தலைப்பில் ஆராய்ச்சிக் கட்டுரை ஒன்று வரைக.

3. **பிரித்து எழுதுக:** தென்திசை, வடதிசை, கருப்பஞ்சாறு, தென்றற்காற்று.

4. **குறிப்பு வரைக:** காவிரிப்பூம்பட்டினம், கடியலூர் உருத்திரங் கண்ணனார், பட்டினப்பாலை, காவிரியின் வளம், பரதவர் வாழ்க்கை நிலை, மகளிர் நிலை, வாணிகர் இயல்பு, கரிகாலன் வீரம்.

III. 1. பட்டினத்தை + சிறப்பித்து = பட்டினத்தைச் சிறப்பித்து.

2. நாட்டுக்கு + செல்ல = நாட்டுக்குச்செல்ல

3, பாட்டு + பாடு = பாட்டுப்பாடு.

TB 03(C9) N57
சென்னை-600 006
146494.

இவற்றுள் வல்லெழுத்து ஒற்று மிகுந்திருத்தல் காண்க. இரண்டாம் வேற்றுமை உருபுடனும் நான்காம் வேற்றுமை உருபுடனும் கூடியுள்ள சொற்கள் வல்லெழுத்தைக்கொண்டு துவங்கியுள்ள சொற்களுடன் சேரும்போது, அவ்விரு சொற்களுக்குமிடை ஒற்றுமிகும். மூன்றுவது வரியில் உள்ள பாட்டு என்பது போன்ற வன்தொடர்க் குற்றியலுகரச் சொற்கள் வல்லெழுத்தைக் கொண்டு துவங்கியுள்ள சொற்களுடன் சேரும்போதும் மேற்கண்டபடியே ஒற்று மிகும். இதனை நன்கு நினைவில் பதிக்கவும்.

தலைவியை + பிரிந்து, பாடலை + கேட்டு, ஊர்களுக்கு + செல்வர், அடுத்து + பூஞ்சோலை, தெய்வங்களுக்கு + கொண்டாட்டம், நாட்டு + பொருள் – இவற்றைச் சேர்த்து எழுதி, ஏன் ஒற்று மிகுதல் வேண்டும் என்பதற்குரிய காரணம் கூறுக.

# 4. பண்டை ஆட்சி முறை

(வித்துவான் பு. செல்வராசனுர்)

[இவர், பல ஆண்டுகள் செய்தித்தாள்களின் ஆசிரியராகப் பணியாற்றியவர். மாணவர்க்குரிய நூல்கள், பொது நூல்கள் எனப் பலவற்றை இயற்றியவர்; ஆங்கிலத் தமிழ்ப் பேரகராதி எழுதியவர்; பொது நலத் தொண்டில் பற்றுடையவர். இப்போது சென்னை C.A.H.H.M உயர்நிலைப் பள்ளியில் தலைமைத் தமிழாசிரியராக இருப்பவர். இது இவர் எழுதிய "சங்கநூற் செய்திகள்" என்னும் நூலினின்று எடுக்கப் பெற்றது.]

சங்ககாலத் தமிழகத்தில் நிலவியிருந்த ஆட்சி கோனுட்சியே ஆகும். அரசனுக்கு உதவியாக இரண்டு பேரவைகள் இருந்து பணியாற்றின. ஒன்று ஐம்பெருங்குழு; மற்றென்று எண்பேராயம். அமைச்சர், புரோகிதர், படைத்தலைவர், தூதுவர், சாரணர் என்பவர் ஐம்பெருங் குழுவினர். புரோகிதர் என்பவர் பிற்காலச் சோழர் காலத்தில் இருந்த 'இராசகுரு' என்பவரைப் போன்றவர் ஆவர். தூதுவர் என்பவர் அரசன் பிரதிநிதிகளாகப் பல்வேறு நாடுகளில் இருந்து பணியாற்றுவோர். சாரணர் என்பார் ஒற்றராவார்.

கரணத்தியலவர், கருமவிதிகள், கனகச் சுற்றம், கடை காப்பாளர், நகரமாந்தர், படைத்தலைவர், பரிவீரர், கரிவீரர் என்பவர் எண்பேராயத்தார். இவருள் கரணத்தியலவர் அரசாங்கச் செயல் முறைகளையும் ஆணைகளையும் ஏடுகளில் எழுதும் அதிகாரிகள்; நாடெங்கும் அரசர் ஆணையைப் போக்கும் அதிகாரிகளும் ஆவர். கருமவிதிகள் என்பவர் அரசன் ஆணையைச் செயலில் கொண்டுவரும் உயர்ந்த அலுவலர். கனகச் சுற்றம் என்பவர் அரசாங்கப் பண்டார (பொக்கிஷ) அதிகாரிகள். கடைகாப்பாளர் என்பவர் நாடு காவல் அதிகாரிகள்; நகர மாந்தர் என்பவர் நாட்டிலுள்ள சிறந்த நகரங்களின் பிரதிநிதிகளாவர். இவர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் என்று கருத இடமுண்டு. ஒவ்வொரு தமிழ் வேந்தனும் இவ்விரு பேரவையினரைக் கலந்தே நாட்டை ஆண்டுவந்தான். இப்பேரவையினர்

நாட்டுத் தொடர்பான பெரிய விழாக்களிலும் சிறப்பான செயல்களிலும் பங்கெடுத்துக் கொண்டனர்.

### அறங்கூறவையம்

தமிழ் நாட்டுத் தலைநகரம் ஒவ்வொன்றிலும் அறங்கூறவையம் (உயர்நீதி மன்றம்) இருந்தது. சிற்றூர்களில் குடிமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சி மன்றத்தாரே வழக்குகளைக் கேட்டு நீதி வழங்கினர். பண்டைத் தமிழகத்து நீதி மன்றங்களில் உறையூர் நீதி மன்றம் மிகுந்த சிறப்புடையது. ஒரு முறை கரிகால் சோழனே பெரிய வழக்கு ஒன்றினைக் கேட்டு நீதி வழங்கும் நிலைமை ஏற்பட்டது. 'அவன் இளைஞனாயிற்றே, தக்க முறையில் நீதி வழங்குவானா?' என்று ஐயுற்றனர் வழக்கிற்குரிய இருதரப்பினரும். ஆயின், கரிகாலன் அவ்விருவரையும் மனமகிழ்ச்சி கொள்ளுமாறு செய்ய விரும்பினான்; தானே முதியவனாகத் தோற்றுமாறு வேடம் அணிந்தான். அம்முதியவனை நீதி மன்றத்தில் கண்டவர்கள், சிறந்த சான்றோர் ஒருவர் வழக்கினைக் கேட்பதாக எண்ணி மகிழ்ந்தனர். இருவர் கூற்றுக்களையும் பொறுமையோடு கேட்ட முதிய சான்றோன் நன்கு சிந்தித்து, அங்குக் கூடி இருந்த அறிஞர் அனைவரும் பாராட்டுமாறு தீர்ப்புக் கூறினான். வழக்கிற்குரிய இரு பிரிவினரும் அம்முடிவினைக் கேட்டு முக மலர்ந்தனர். அனைவரும் அச்சான்றோனை வாழ்த்தினர். அவ்வமயம் அவரனைவரும் வியக்குமாறு கரிகாற் சோழன் தன் வேடத்தைக் களைந்து நின்றான். சங்க காலத்துச் சான்றோர் நடுவு நிலையினின்று கடுகளவும் பிறழ்ந்ததில்லை. அவர்கள் துலையின் நடு நாப் போல நடுவு நிலை நின்று வழக்குகளில் தீர்ப்பளித்தனர். திருக்குறளில் 'நடுவு நிலைமை' என்னும் அதிகாரம் அவர் பொருட்டு எழுந்ததே எனக் கூறுதல் பொருந்தும். அவர்கள் ஆழ்ந்த படிப்பும் சிறந்த கேள்வியும் அமைதிக் குணங்களும் கொண்டவர்கள்; அறநிலை திரியாமல் அன்பை அடிப்படையாகக் கொண்டு நீதி வழங்குதலைத் தமது சிறந்த கடமை என்று கருதி நடந்தனர்.

### அரசர் கடமை உணர்ச்சி

தமிழ்வேந்தர் குடிகளைக் காக்கும் காவலராகத் தம்மைக் கருதினரே தவிர, அவரை அடக்கி ஆளக் கருதவில்லை; குடிக

ளுக்குத் தம்மாலும், தம் அரசாங்க அலுவலாளராலும், பகைவ ராலும், கள்வராலும், கொடிய விலங்குகளாலும் உண்டாகும் ஐவகைத் துன்பங்களையும் நேரவொட்டாமல் காத்துவந்தனர். பாண்டியன் ஒருவன் இரவில் மாறுவேடம் அணிந்து நகர்வலம் வந்தான்; ஒரு நாள் இரவு மறையவர் தெருவில் இருந்த ஒரு வீட்டுத் திண்ணைமீது அமர்ந்தான்; உள்ளே இருவர் பேசுவதை உற்றுக் கேட்டான். வீட்டுக்குரிய மறையவன் தன் மனைவியை நோக்கி, "நீ என்னுடன் காசி யாத்திரை வரலாகாது. நீ தனியே இருப்பதைப்பற்றிக் கவலையுருதே. பாண்டியன் செங்கோல் நின்னைக் காக்கும்," என்று கூறினன். அம்மறை யவன் தன் ஆட்சிமீது கொண்டிருந்த அளவற்ற நம்பிக்கையை அறிந்த பாண்டியன் எல்லையற்ற மகிழ்ச்சியடைந்தான்; மறுநாள் முதல் ஒவ்வோர் இரவிலும் மறையவன் மீண்டு வரும்வரை அவ் வீட்டினைக் கண்காணித்துவந்தான். இவனே பொற்கைப் பாண் டியன் என்று பாராட்டப்பெற்றவன். இவ்வாறு தமிழ் வேந்தர் தம் குடிகளைக் காப்பதில் கண்ணுங் கருத்துமாயிருந்தனர். சுருங் கக் கூறின், கண்களை இமைகள் காப்பதுபோலத் தமிழ்வேந்தர் தம் குடிகளைக் காத்து வந்தனர் என்னலாம்.

"பாண்டியன் நெடுஞ்செழியன் ஆராயாது கோவலனைக் கொல்வித்ததைக் கண்ணகியால் அறிந்ததும் "யானே அரசன்! யானே கள்வன்" என்று வருந்தி அரியாசனத்தினின்று விழுந்து இறந்தான். கோவலனைக் கொன்றதால் வளைந்த அவனது செங்கோல் தன் தவறு உணர்ந்து இறந்ததும் நிமிர்ந்தது" என்றான் சேரமன்னன் செங்குட்டுவன். "கோவலன் கொல்லப் பட்டதையும், பாண்டியனும் அவன் கோப்பெருந்தேவியும் உயிர் நீத்ததையும், கண்ணகி சோகமிகுதியால் செய்வது அறியாது தன் நாடு நோக்கிவந்து விண்ணகம் புகுந்த விவரத்தையும் சேரன் செங்குட்டுவன் அறிந்து வருந்தினன்; "நாட்டில் மழையில்லை யாயினும், பஞ்சமுண்டாயினும், வேறு எவ்வகைத் துன்பம் நேரினும் குடிகள் அரசனையே குறை கூறுவர். இதனை நோக்க அரசர் மரபில் பிறத்தல் துன்பத்தைத் தருவதேயன்றி இன்பத் தைத் தருவதாகாது," என்று கூறினன்.

## அரசரும் பயிர்த்தொழிலும்

நமது நாடு பயிர்த்தொழிலேயே பெரும் தொழிலாக உடையது. சிற்றூர் மக்களுள் பெரும்பாலோர் உழவரேயாவர். பயிர்த்தொழில் நன்கு நடைபெறவேண்டுமாயின், நாட்டில் நீர் வளம் வேண்டும். இதனை நன்கு உணர்ந்த தமிழ்வேந்தர், காவிரிபோன்ற பெரிய ஆறுகளை நன்கு பயன்படுத்தினர் ; அவற்றின் வெள்ளம் ஊர்களை அழிக்காவண்ணம் உயர்ந்த கரைகளை இடுவித்தனர் ; அப்பேராறுகளிலிருந்து பல கால்வாய்களை வெட்டி, ஆற்றுப்பாய்ச்சல் இல்லாத இடங்களுக்கு நீரை உதவினர் ; ஆறுகளின் குறுக்கே அணைகளைக் கட்டி, நீரைத் தேக்கி, வானம் பார்த்த நிலங்களுக்கு வாய்க்கால் வழியே பாய்ச்சினர். கரிகால்சோழன் இலங்கையை வென்று, அங்கிருந்து அழைத்து வந்த போர்வீரர்களைக் கொண்டு காவிரிக்கு உயர்ந்த கரைகளை இடுவித்தான் ; குளங்களையும் ஏரிகளையும் வெட்டுவித்தான் ; பெரிய கால்வாய்களை எடுப்பித்தான். அவன் இங்ஙனம் நீர் வளத்தைக் கொண்டு நிலவளம் உண்டாக்கினன். இச்செயலால் நெல் விளைச்சல் உண்டாயிற்று ; நாடு வளம் பெற்றது. இவ்வரியசெயலால் கரிகாலன், பெருவளத்தான் என்று குடிகளால் புகழ்ந்து பாராட்டப்பெற்றான்.

ஆற்றுப் பாய்ச்சல் இல்லாத இடங்களில் பெரிய ஏரிகளையும், குளங்களையும் வெட்டுவித்து அவற்றில் மழைநீரைத் தேக்கி வைத்தல் நம் முன்னோர் முறையாகும். மழைக்குக் கார், கொண்டல் என்னும் பெயர்கள் உண்டு. மேற்சொல்லப்பட்ட ஏரிகளிலும், குளங்களிலும் நீரைத்தேக்கி, அந்நீரைக் கொண்டு பயிர்த்தொழில் செய்த வேளாண் மாந்தர், 'தார் காத்த வேளாளர்' என்றும், 'கொண்டல் கட்டி வேளாளர்' என்றும் அக்காலத்தில் பெயர் பெற்றனர்.

பள்ளமாக இருக்கும் இடங்களைத் தண்ணீர் தேங்கி இருக்கத் தக்கவாறு மேலும் பள்ளமாக்கி, அப்பள்ளங்களைக் கரை கோலித் தளை செய்தல் வேண்டும். இங்ஙனம் தளைக் செய்த வேந்தரே இவ்வுலகில் தம் புகழை நிலைபெறச் செய்தவராவர்," என்று குடபுலவியனார் என்ற புலவர் பாண்டியனுக்குக்

கூறிய அறவுரை இங்கு எண்ணத்தக்கது. இங்ஙனம் காவல னும், கற்ருேரும், மற்ருேரும் நீர் வளம் பெருக்க முனைந்தனர் என்பதைச் சங்கநூல்களால் அறியலாம்.

## தொழில்கள்

எந்த நாட்டிலும் அரசாங்கத்தின் ஆதரவு இல்லாமல் எத் தொழிலும் வளர்ச்சி பெற முடியாது. இந்த உண்மையை நன்கு உணர்ந்து, பண்டைத் தமிழ் அரசர்கள் தமிழகத்துத் தொழில் களை வளம்பெற வளர்த்தனர்; வேறு பல நாடுகள் நம் நாட்டுப் பொருள்கள் விற்பனையாகுமாறு தக்க ஏற்பாடுகளைச் செய்தனர். அக்காலத்தில் உள்நாட்டு வாணிகமும், வெளிநாட்டு வாணிக மும் மிகச்சிறந்த நிலையில் இருந்தன. தமிழ் அரசர் பல கப்பல் களை வைத்துக் கடல் வாணிகத்தை நடத்தினர்; போர்க் கப்பல் களைக் கொண்டு கடற் கொள்ளைக்கூட்டத்தாரை ஒழித்தனர்; நெசவு முதலிய தொழில்கள் நன்னிலைக்கு வர அரசாங்க ஆதரவு நல்கினர்.

## அரசரும் போரும்

தமிழரசர் ஒவ்வொருவரும் யானைப்படை குதிரைப்படை, தேர்ப்படை, காலாட்படை, கப்பல்படை ஆகியவற்றை வைத் திருந்தனர். அவை நாட்டைப் பகைவரிடமிருந்து காப்பதற்கே யன்றி வேறு நாடுகளை வெல்லக்கருதி அமைந்தவை அல்ல. "என்னைத் தாக்க வந்த பகைவனைப் போரில் வெல்லேனாயின்," என ஒவ்வொரு தமிழ் அரசரும் சூள் உரைத்திருப்பதிலிருந்து இவ்வுண்மையை உணரலாம். தமிழகத்துக்கு வடபால் இருந்த ஆரியர் தமிழகத்தைத் தாக்கியபோது அவர்களை வென்ற கார ணத்தால் பாண்டியன் நெடுஞ்செழியன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் என்னும் பெயர் பெற்ருன். இவ்வாறே தமிழ் அரசரை இகழ்ந்து கூறிய ஆரிய மன்னரைச் சேரன் செங்குட்டு வன் போரில் வென்ருன். கி. மு. இரண்டாம் நூற்ருண்டின் இடைப்பகுதியில் கலிங்க நாட்டை ஆண்ட பேரரசனை காரவேலன் என்பவன் தமிழகத்தைத் தாக்கினன். அப் பொழுது முடியுடை மூவேந்தரும் ஒன்றுசேர்ந்து தமிழகத்தைக்

காத்தனர். இங்ஙனம் தமிழ் அரசர் மூவரும் பெரும்பாலும் தம்முள் மனமொத்தே வாழ்ந்து வந்தனர்; சிற்சில சமயங்களில் அழுக்காறு அவரிடைப் போர்மூளச் செய்தது. அரசன் போருக்குப் புறப்படும்பொழுது தன் படை வீரருக்குப் பெருஞ்சோறு அளிப்பது வழக்கம். போரில் சிறந்த முறையில் பணியாற்றிய வீரருக்கு வேந்தன் பட்டங்களும் பரிசுகளும் வழங்குதல் மரபு.

சில சமயங்களில் ஒரு குறிப்பிட்ட அரசன் போர் வெறி கொண்டவனாக இருப்பின், அவனால் போர் நிகழாதபடி செய்யப் புலவர் முனைவர். தகடூரை ஆண்ட அதியமான்மீது காஞ்சியை ஆண்ட தொண்டைமான் படையெடுத்துவர ஏற்ற சமயத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். அதனை அறிந்த ஔவையார் காஞ்சி மாநகரம் சென்று போர் நிகழாதபடி செய்தார். இங்ஙனமே கோவூர் கிழார் பல போர்களைத் தடுத்துள்ளார். "யானைப் படை, குதிரைப்படை, காலாட்படை என்பன அரசனிடம் இருப்பினும் அவற்றால் நிலையான வெற்றி அரசனுக்கு உண்டாவதில்லை. அவற்றைக் கொண்டே ஒரு நாட்டை ஆளுவது இயலாது. அரசனுக்கு அறவழிகளாலேயே நிலையான வெற்றி உண்டாகும்" என்று புலவர்கள் தமிழ் வேந்தர்க்குத் தக்க சமயங்களில் அறிவுறுத்துவது வழக்கம்.

### சங்க காலத் தேர்தல் முறை

சங்க காலச் சிற்றூர்களில் பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினரைக் கொண்ட ஊராட்சி மன்றங்கள் பணியாற்றி வந்தன. மிகச் சிறந்த ஒழுக்கமும், ஆழ்ந்த கல்வியும், விரிந்த சிந்தையும், பரந்த நோக்கமும் உடைய சான்றோரே பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டனர். ஊர் அவையின் நடுவே பொதுமக்கள் முன்னிலையில் குடம் ஒன்று வைக்கப்படும். ஊரில் ஒவ்வொரு பகுதியைச் சேர்ந்த மக்கள் தாம் விரும்பும் ஒருவர் பெயரைத் தமக்குக் கொடுக்கப்பட்ட ஓலையில் எழுதி, முன்சொல்லப்பட்ட குடத்தில் இடுவர். பிறகு அக்குடம் குலுக்கப்படும். அவையிலுள்ள பெரியவர் ஒருவர் சிறுவன் ஒருவனைக் கொண்டு குடத்திலிருந்து ஓர் ஓலையை எடுக்கச் செய்வர். அதில் எழுதப்பட்டுள்ள பெயருடையவரே அவ்வூர்ப் பகுதிக்

குப் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப் பட்டவராவர். இவ்வாறே, ஊரின் ஒவ்வொரு பகுதிக்கும் ஒருவர் தேர்ந்தெடுக்கப் பெறுவர். இங்ஙனம் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் ஊராட்சியைப் பல பிரிவுகளாகப் பிரித்துக் கொள்வர் ; ஒவ்வொரு பிரிவிலும் உறுப்பினர் இருவர் அல்லது மூவர் ஒரு குழுவாக இருப்பர். பயிர்த் தொழிலுக்குரிய நீர் வளத்தைப் பெருக்கும் பொறுப்பு ஒரு குழுவினர்க்குரியது. மற்றொரு குழுவினர் வரி பெறுதலை மேற் கொள்வர். வேறொரு குழுவினர் ஊர் வழக்குகளைக் கேட்டு முடிவு கூறுவர். பிறிதொரு குழுவினர் கோவில் முதலிய பொது நிலையங்களைக் கவனிப்பர். இவ்வாறு அமைந்த ஊராட்சி மன்றங்களால் நடு அரசாங்கம் மிகச் சிறந்த முறையில் நாட்டாட்சியைக் கவனித்து வந்தது.

## பலவகை வரிகள்

அரசாங்கம் நடைபெறுவதற்குப் பொருள் வேண்டுமன்றோ? குடிகள் செலுத்திய நிலவரி, பலவகைத் தொழில் வரிகள் வாணிகப் பொருள்களுக்குரிய சுங்கவரி என்பவை அரசாங்க வருவாய்களுள் சிறந்தவை. இவற்றைப் பெற்றுவர அரசாங்க அலுவலர் பலர் இருந்தனர். காவிரிப்பூம் பட்டினம் முதலிய துறைமுக நகரங்களில் வந்திறங்கிய வெளிநாட்டுப் பொருள்களுக்கெல்லாம் ஆயம் பெறப்பட்டது. அக்காலத்தில் பெரிய அளவில் கடல் வாணிகம் நடைபெற்றதால், கடல் வாணிக வருமானம் அரசாங்கத்திற்குப் பேருதவியாக இருந்தது.

## நில அளவு முதலியன

சங்க காலத் தமிழகத்தில் நிலம் அளக்கப்பட்டது. வேலி, காணி, மா முதலிய நில அளவைப் பெயர்கள் இவ்வுண்மையை நன்கு உணர்த்தும். எண்ணலளவை, எடுத்தலளவை, முகத்தலளவை, நீட்டலளவை என்பன வழக்கில் இருந்தன. தொடி, கஃசு என்னும் நிறைகள் திருக்குறளில் குறிக்கப்பட்டுள்ளன. குன்றி, கழஞ்சு, மஞ்சாடி என்பன பொன் வெள்ளி முதலிய வற்றை நிறுக்கப் பயன்பட்டன என்பதைப் பிற்காலக் கல் வெட்டுகள் கூறினும், அவை சங்க கால வழக்கிலிருந்து வந்தவை

என்று கூறுதல் தவறுகாது. நெய், பால், தயிர், அரிசி முதலிய கூலவகை ஆழாக்கு, உழக்கு, நாழி, குறுணி, பதக்கு, கலம் முதலிய முகத்தலளவைக் கருவிகள் கொண்டு அளக்கப்பட்டன. விரல், முழம் முதலியன நீட்டலளவைகளைக் குறித்தன.

இதுகாறும் கூறப்பட்ட விவரங்களால் அறியப்படுவன யாவை? தமிழகத்தில் கோனாட்சி நிலவியிருந்தாலும் அரசன் ஐம் பெருங் குழுவையும், எண்பேராயத்தையும் துணையாகக்கொண்டு ஆட்சி புரிந்து வந்தான்; பலவகைப் படைகளையும் வைத்துக் குடிகளைக் காத்தான்; பயிர்த்தொழிலுக்கு உயிர் நாடியான நீர் நிலைகளைப் பெருக்கினான்; அறநிலையங்களை அமைத்தான். ஊராட்சி மன்றங்கள் சிறந்த முறையில் பணியாற்றின. உள்நாட்டு வாணிகமும் வெளிநாட்டு வாணிகமும் மன்னன் ஆதரவில் நடைபெற்றன. காவலன் குடிகளின் இன்பத்தையே பெரிதாகக் கருதினான். நாட்டில் பலவகை அளவைகளும், நாணயங்களும் வழக்கில் இருந்தன. பலவகை வரிகளைக் கொண்டு அரசாங்கம் நடைபெற்றது. அரசன் அறிஞர்களுடைய அறிவுரையைக் கேட்டு அவற்றின்படி நடந்து வந்தான். நாடு நாடாக விளங்கி, மக்கள் இன்ப வாழ்வு வாழ்ந்தனர்.

## அருஞ்சொற்பொருள்

கோன் ஆட்சி-முடியாட்சி, அரசன் ஆட்சி; பேரவை-(பெருமை+அவை) - பெரிய சபை; ஐயுற்றனர் - சந்தேகங் கொண்டனர்; சான்றோர் - அறிவு ஒழுக்கத்தாற் சிறந்தவர்; அலுவலாளர் - ஊழியர்; மறையவர் - வேதியர்; அழுக்காறு - பொறாமை; ஆயம் - சுங்கவரி; தொடி - ஒரு பலம்; கஃசு - கால்பலம்.

## பயிற்சி

I. விடை எழுதுக:

1. ஐம்பெருங்குழு என்பது யாது?
2. எண்பேராயத்தார் வேலைகள் என்னென்ன?
3. தமிழ் நாட்டில் அறங்கூறவையங்களின் நிலை யாது?
4. கரிகாலன் வழக்குக் கேட்டுத் தீர்ப்பளித்த நிகழ்ச்சி யாது?
5. தமிழரசர் கடமையுணர்ச்சி மிக்கவர் என்பதற்குச் சான்றுகள் எவை?

6. 'பெருவளத்தான்' எனக் கரிகாலன் புகழப்பட்டதேன்?

7. குடபுலவியனார் பாண்டியருக்குரைத்த அறவுரை யாது?

8. தமிழ் வேந்தர் பிறநாடுகளை வெல்லக்கருதிப் போர் செய்ய வில்லை என்பதற்குச் சான்று யாது?

9. போர்கள் நிகழாதவாறு தடுத்து நிறுத்திய புலவர்கள் யாவர்?

10. ஊராட்சி மன்றம் எவ்வாறு நடைபெற்றது?

11. அக்கால மன்னர்கள் வாங்கிய வரிகள் யாவை?

12. அளவை முறைகள் அக்காலத்தில் எவ்வாறு இருந்தன?

II. 1. சங்ககாலத் தேர்தல் முறையை விளக்கி ஒரு கட்டுரை வரைக.

2. சங்ககாலத்தில் முடியாட்சி இருந்தாலும் மக்கள் வாழ்வு சிறந்திருந்தது என்பது விளங்க ஆராய்ச்சி முறையில் ஒரு கட்டுரை வரைக.

III. 1. தமிழகம், கோனாட்சி, ஐம்பெருங்குழு, எண்பேராயம், பேரவை, மற்றொன்று, அறங்கூறவையம், செங்கோல், பெருஞ்சோறு - இவற்றினைப் பிரித்து விதிகூறிச் சேர்க்க.

2. என்பவரை + போன்றவர், தமிழ்நாட்டு + தலைநகர், வழக்குகளை + கேட்டு, துணை + கொண்டு, ஆணை + போக்கும், எடுத்து + கொண்டான், பந்து + கொண்டுவா, எனக்கு + தெரியும், நன்கு + செய்தான்— இவற்றைச் சேர்த்து ஒற்றுமிகும் இடங்களில் காரணம் காட்டுக.

IV. கரி, கடை, நாடு, இரை, ஈ, ஒடு, கல், துணி, அவை, அடுத்தவர், படி, குடி, ஆறு, பாடு—இச்சொற்கள் ஒவ்வொன்றிற்கும் உரிய வெவ்வேறு பொருள்களைக் கூறுக.

# 5. நமது நல்வாழ்வு

(புலவர் சா. மருதவாணன்)

[இவர், மாணவர்க்குரிய நூல்கள் பொது நூல்கள் எனப் பல வற்றை இயற்றியவர்; பொதுநலத் தொண்டில் ஈடுபாடுடையவர். இப் போது கோயமுத்தூர் தூய மைக்கேல் உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரி யராக இருப்பவர்.]

நமது என்ற நல்ல எண்ணமே நாகரிகத்தின் நன்முதிர்வால் பிறப்பது. யான் எனது என்னும் செருக்கற்ற நிலையிலேதான் நமது என்ற நன்சொல் தோன்றும் என்பது முன்னோர்களாகிய மூதறிஞர்களின் கருத்தாகும். இக்கட்டுரையில் நமது என்ற இச்சொல்லை ஏன் பெய்து எழுதினேம் என்றால், நாட்டிலே ஏற் படும் நல்வாழ்வு தனிமனிதன் தேவைக்கு-ஒரு மனிதனின் உயர் வுக்குப்-படிக்கட்டாக அமையக்கூடாது; எல்லார்க்கும் எல்லா மென்றிருப்பதான இனிய நிலை பிறக்கவேண்டு மென்பதனு லேயாம்.

நல் வாழ்வு என்று கூறும்போதே நாவிலே ஒரு நற்சுவை பிறக்கிறது. ஆதலின் நல் வாழ்வை விழையாத மாந்தர்கள் நானிலத்தில் உண்டோ? நவில்மின்! மாக்கள்முதல் புல்பூண்டு கள் வரை நல் வாழ்வையே நாடி நிற்கின்றன. நல் வாழ்வு அமைந்தால் நாகரிகம் வளரும். நற்பண்பு தோன்றும். நற் றெழில் பெருகும். நல்லோர்கள் நிறைவர். நன்மக்கள் நடமாடு வர். நரையும் திரையும் இராது. அறம் வளரும். மறம் மடியும். அன்பு கொழிக்கும். வன்புகொலைக் கொலைக்களஞ் செல்லும். வறுமை ஒழியும். வண்மை சிறக்கும், வாட்டம் நீங்கும். புதிய தேட்டம் பிறக்கும். இரப்போர் ஒழிவர். புரப்போர்க்கு வேலை யிராது. புன்மை மடியும். நன்மை நிறையும். புரை நீங்கும். பொறை நிலைக்கும். அறமன்றங்களும் ஆவணக்களரியும் தேவை யிரா. தண்டனையளிக்கும் தண்டலர்களும் குற்றத்தடுப்புக் குழு வினர்களும் தேவைப்படார். மக்கள் பணியாற்றும் மனிதனே தேவைப்படுவான். இன்னோரன்ன இன்பம் எதுபோது தோன்றும்? அதன் சூழ்நிலையாது? என்பன குறித்து ஆய்வதே இப்பாடத்தின் நோக்கமாகும்.

நல்வாழ்வு என்று நவின்றவுடன் பஞ்சணை மெத்தையிலே, பத்தடுக்கு மாளிகையிலே, தேனும் பாலும் அருந்தும் தெவிட்டாத நிலையிலே, பார்க்கவும் களிக்கவும் படக்காட்சிகள் பலவற்றுடனே, காற்றைப்போல் கடுகிச் செல்லக் கால் தரையில் படாதிருக்க, கவர்ச்சிமிக்க ஊர்திகளுடனே, மாலைநேரத்தைச் சோலையில் கழித்துச் சோர்வு நீக்கத் துணைவர்கள் பலருடனே வாழும் சால்பிலா வாழ்க்கையை நீங்கள் நினைத்தால் அது சரியில்லை. பின்னர் யாதென வினவின் நரைதிரையில்லாமல், நலிவும் மெலிவும் இல்லாமல், மூப்புப் பிணியில்லாமல், கவற்சியும் பிறழ்ச்சியுமில்லாமல், கடுகடுப்பும் கன்மனமும் இல்லாமல், வெறுப்பும் வெகுளியுமில்லாமல், பகையும் பதட்டமும் இல்லாமல், நெஞ்சில் அச்சமில்லாமல், நேர்மை தவருமல், நன்னெறி வழுவாமல், சிற்றினஞ் சேராமல், சிறுமையில் வீழாமல், அறத்தைமறவாமல், அன்பைக் கடியாமல், மனைவிளக்காம் துணைவியொடும் தூய நன்மக்களொடும் வாழ்வதே யாகும். அது எவ்வாறு இயலுமென்ருல், புறநானூறு என்னும் எட்டுத்தொகை நூலிலே, புதுமையும் பழமையும் கொழிக்கும் தமிழ்க்கடலிலே மூழ்குதல் வேண்டும். மூழ்கின் விலையுயர்ந்த பல நன் முத்துக்கள் கிடைக்கும். அவ்வாறு நான் கண்ட அருவிலை நன்முத்தொன்றை எல்லோரும் பெற்று இன்பம் எய்துமாறு இதோ தருகின்றேன். முத்தின் நலனுணர்ந்த முத்தமிழ் நாட்டு மூதோர்களின் வழிவந்த நற்றமிழ் மக்களும், நல்லோர் பலரும் அதனைப் பெற்று அதன் பெருமையுணர்ந்து நன்னிலை அடைவார்களாக.

வான் பொய்ப்பினும் தான் பொய்யாத பொன்னியென்னும் பொற்புடை ஆற்றின் பாய்ச்சலால் சோற்று வளமும் அறிவு வளமும் மிக்கு விளங்கும் சோழ நாட்டை ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னர்க் கோப்பெருஞ்சோழன் என்றமன்னன் ஆண்டு வந்தான். அதே காலத்தில் மன்பதை காக்கும் தென்புலங் காவலில் சிறிதும் வளையாத, பழந்தமிழ் வளர்த்த பண்புடைப் பாண்டிய நாட்டில் பிசிர் என்ற ஊரிலே வாழும் ஆந்தையார் சோழனின் சிறப்பையும், செங்கோலின் செவ்வியமுறையையும், புலவர்களைப் புரக்கும் புகழ்மிகு செயலையும், தனக்கென வாழாத தகைமையையும் கேள்விப்படுகின்ருர். அஃதே போன்று சோழனும் புலவரின் புலமைத் திறத்தையும், புரையற்ற வாழ்க்கையையும்,

செந்நாவின் சிறப்பையும், செந்தமிழ்ப் புரப்பையும், இன்குண நலனையும், இடித்துரை அறிவையும், கேள்வியுற்று வள்ளுவரின் வாய்மொழிக்கு இலக்கியமாக ஒருவரை யொருவர் நேரிற் காணுதே கண்டு பழகாதே,

"புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதாம்
நட்பாம் கிழமை தரும்"

என்ற முறையில் நட்புக் கொள்கின்றனர். சின்னுட்கள் சென்ற பின்னர் வேந்தன் வடக்கிருக்கின்முன். இதனையறிந்த செந்தமிழ்ப் புலவர் அவ்விடம் நோக்கி விரைந்து வருகின்றூர். அதனைக் கண்ணுற்ற அமைவுடைப் பெரியோர்கள் பிசிராந்தையாரைப் பார்த்து, "ஆண்டுகள் நூறுகியும் நரைதிரையில்லாமல் இந்நல்லுடலைப் பெற்றிருப்பதன் முறையும் நெறியும் என்னே ?" என்று வினவ, அவர் கீழே வருகின்ற ஒளிவீசும் உயர்ந்த பல முத்துக்களை எடுத்துவீசி எல்லோரையும் பயன்கொள்ளச் செய்கின்றூர்.

"யாண்டு பலவாய நரையில வாகுதல்
யாங்கு ஆகியரென வினவுதி ராயின்
மாண்ட என்மனைவியொடு மக்களும் நிரம்பினர்
யான்கண் டனையரென் இளையரும் வேந்தனும்
அல்லவை செய்யான் காக்கும் அதன் தலை
ஆன்றவிந் தடங்கிய கொள்கைச்
சான்றோர் பலர் யான் வாழுமூரே!"

என்று எளிமையும் இனிமையும் கலந்து நயம்பட நவில்கின்றூர்.

அன்பர்களே, நூறுயிரக்கணக்கான உங்களுள் யாருக்காவது இப்புறப்பாட்டின்கண் அவர் அறிவிக்கும் அருங்கருத்துக்கள் நல்வாழ்விற்கான நல்ல முறைகள், வழிகள் தேவையில்லை யென்று எண்ண முடியுமா? மேலும் இவண் காட்டப்பட்டுள்ள பாடலிலுள்ள பாராட்டத்தக்க பயன்தரு கருத்துக்கள் மாணவர் கட்கும், ஆசையையும் மனமாசையும் நீக்கும். ஆசிரியப் பெரியோர்களுக்கும், வருங்கால நாட்டை வளர்க்கும் வாலிபர்களுக்கும், கலையறிவு மிக்க கலைஞர்களுக்கும், அரசியலிலே ஈடுபாடுடைய அன்பர்கள் பலருக்கும், மதிமிக்க மந்திரிகளுக்கும், சமூக நலன் நாடும் சமுதாயத் தொண்டர்களுக்கும், சீர்திருத்த எண்ண

முடைய சிந்தனைச் சிற்பிகளுக்கும் என அனைவருக்கும் பயன் தரக்கூடியவையாகும்.

உரிமைபெற்ற நாட்டிலே வாழும் நாம் நல்வாழ்வு வாழா விட்டால் பிறநாட்டார் நம்மைப் பார்த்து நகைப்பாரன்றோ? நல்வாழ்விலே நாட்டங்கொண்ட நற்றமிழ் மக்களே, அந்த வாழ்வு உண்டாகப் புலவர் மணி கூறுவதை உன்னுங்கள். பிறகு தெரிந்து கொள்ளுங்கள் அதன் செம்பொருளை; அவர் செப்பிடும் முறையை.

மாட்சிமைப்பட்ட குணநலன்களும் கற்பெனும் திண்மையும் தற்கொண்டான்பேணும் தகைமையும் ஒருங்கே அமைந்த மனையாளும், அறிவு நிரம்பிய நன்மக்களும், தாம் கூறாமலே தம் குறிப்பறிந்து பணியாற்றும் பணிமகனும், பொருந்தாத தீயவற்றைச் செய்யாமலும், நேர்மை தவறாமலும், பிறர் தீங்கு செய்யின் அதில் சிக்கிச் சிதைவுறாமலும் நம்மைக் காக்கும் நாடாளும் நல்ல தலைவரும், கல்வி கேள்விகளால் நிறைந்து, ஒழுக்கத்தால் உயர்ந்து, அறிவால் முதிர்ந்து, பணிவும் பண்பும் அமைதியும் மிக்கு நல்ல கொள்கைகளையே நல்ல நண்பர்களாகக் கொண்டொழுகும் ஆன்றோர்கள் பலரும் தாம் வாழுகின்ற ஊரிலே இருப்பதால் தமக்கு ஆண்டு பலவாயினும் நரைதிரையின்றி நல்வாழ்வு பெற்றிருப்பதாக நவில்வதைக் கேட்கும் நாமும், அவர் உரைத்த அச்சூழ்நிலை தோன்ற இன்றுமுதல் தயங்காதுழைத்துத் தமிழகத்தைத் தட்டியெழச் செய்யவேண்டும். இன்றைய அரசியல் பொறுப்பேற்றுள்ள அறிஞர் பெருமக்கள் இதிலே சிந்தனையைச் செலவிட்டுப் பிசிராந்தையார் கூறிய முறையிலே நாடும் ஊரும் அமைய நல்ல பல திட்டங்களை வகுத்து,

> " இதனை யிதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து
> அதனை அவன்கண் விடல் "

என்ற செந்தமிழ்ச் செல்வத் திருக்குறளின் கருத்திற்கேற்ப அலவாற்றும் ஆண்மையுடையோரை, வேண்டியவன் வேண்டாதவன் என்ற விருப்பு வெறுப்பின்றிச் செயலாற்றும் திறன்மிகு அடல் மறவர்களை, அஞ்சாநெஞ்சினரைப் பொறுக்கியெடுத்து நாளும் நற்றொண்டு பல செய்யுமாறு நாடாண்டு வந்தால் நாடு

நாடா வளமுடையதாய் விளங்கும். அறவாழ்வு - அன்புவாழ்வு - இன்பவாழ்வு-இன்னலற்ற வாழ்வு ஏற்படவேண்டின் நாட்டில் நல்லாட்சி முதலில் நிலவவேண்டும். ஆட்சி என்றவுடன் படையும் பட்டாளமும், துப்பாக்கியும் தோட்டாக்களும் அல்ல. பழங் காலத்திலிருந்த அழகிய யானையும், பாய்ந்துசெல்லும் பரிமாவும், நிமிர்ந்து செல்லும் நேரிய தேரும், மறமிகுந்த மான மறவர்களும் நிறைந்த நிலையல்ல. ஆட்சி மாட்சிபெற வேண்டுமாயின் ஆட்சியில் அறம் தவழவேண்டும். இதைத்தான் நமது புறநானூற்றுப் புலவரொருவர்,

"கடுஞ்சினத்த கொல்களிறும் கதழ்பரிய கலிமாவும்
நெடுங்கொடிய நிமிர்தேரும் நெஞ்சுடைய புகன்மறவரும் என
நான்குடன் மாண்டதாயினும் மாண்ட
அறநெறி முதற்ற அரசின் கொற்றம்"

என்று நவின்றுள்ளதை நன்றாக நினைவில் பதித்து அதற்கான அடிப்படையிலே ஆட்சி செய்தாற்றான் நாட்டில் நல்வாழ்வு தோன்றும்.

இவைதாமா தமிழன் கண்டவை? இதுதானா தமிழன் வாழ்வு? என்றெண்ணிய நேரத்தில் செந்தீக்கும் சிறு கரையானுக்கும் சிக்காமற்கிடைத்த சில ஏடுகள் கண்ணிற் பட்டன. எடுத்துப் பார்த்தோம். எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, சிலம்பு என்ன? என்ன? இத்துணையுண்டா இன்பத் தமிழன் எழுதின நூல்கள்? எண்ணச் சுழல்களிடையே எட்டுத் தொகையைப் பத்துப்பாட்டை இளங்கோ இயற்றிய சிலப்பதிகாரத்தை நற்றமிழ் இலக்கணமாம் தொல்காப்பியத்தை எடுத்தோம்; புரட்டினோம்; புரட்டிக்கொண்டே இருந்தோம். பல்லாண்டுகளாகக் கவிஞரும் அறிஞரும் கலைஞரும் எடுத்து இயம்பிச் சென்ற காட்சிகளைக் கற்றோம்; கருத்திருத்தி ஆய்ந்தோம்.

தேடினோம்; தேடினோம். மறைந்து கிடந்த மாணிக்கங்களைத் துருவித் துருவித் தேடினோம். அவை தூசி படிந்திருப்பதைக் கண்டோம். அவை வான நிலவை மறைத்த மேகப்படலங்கள், வண்ணத் தாமரைக்கிருக்கும் சின்னஞ்சிறு முட்கள், கானமிசைக்கத் தடையாயிருக்கும் தொண்டைக்கம்மல் என்றெண்ணி

ளும். மேகம் அகலும், முயற்சியின் முன் முட்கள் தடையாகா. மருந்துண்டால் குரல் நலம்பெறும் என்பதையுணர்ந்தோம். ஆதலால் பிறர்க்கு உணர்த்தும் இந்நிலை பெற்றோம்.

## அருஞ்சொற்பொருள்

செருக்கு - கர்வம்; விழையாத - விரும்பாத; நானிலம் - உலகம்; நவில்மின் - கூறுங்கள்; வண்மை - வள்ளல் தன்மை; புரை - குற்றம்; கடுகுதல் - விரைந்து செல்லுதல்; கிழமை - உரிமை; தகைமை - பெருந் தன்மை; மாண்ட - மாட்சிமைப்பட்ட; இளையர் - பணி மக்கள்; திண்மை - உறுதி; பரிமா - குதிரை; மறவர் - வீரர்.

## பயிற்சி

I. விடை எழுதுக :—

1. நமது என்ற சொல் எப்பொழுது தோன்றும் ? ஏன் ?

2. நல் வாழ்வு அமைந்தால் நாட்டில் ஏற்படும் பல நன்மைகள் யாவை ?

3. எவை உண்மையான நல்வாழ்வு ? எவை போலியான வாழ்வு ? என்று ஆசிரியர் கூறுகிறார் ?

4. பிசிராந்தையாரும் கோப்பெருஞ் சோழனும் கொண்ட நட்பின் பெருமை யாது ?

5. பிசிராந்தையார் பல ஆண்டுகளாயும் தாம் நரை திரை இன்றி இருப்பதற்குரிய காரணங்களாக எதைக் குறிப்பிடுகின்றார் ?

6. பிசிராந்தையார் கூறும் கருத்துக்கள் யார் யாருக்கு அமிழ்த மொழிகள் ஆகும் என்று ஆசிரியர் கூறுகிறார் ?

7. நாடு எப்பொழுது நாடா வளமுடையதாக விளங்கும் ?

8. ஆட்சி ஏன் அறமுறையில் அமைய வேண்டும் ? விளக்கம் தருக.

II. 1. தமிழன் முன்னேற்றத்திற்குரிய தகும் செயல்களைக் குறித்து ஒரு கட்டுரை வரைக.

2. தமிழ் இலக்கியங்களைக் கற்பதால் ஏற்படும் நன்மைகளைக் குறித்து உன் நண்பனுக்கு ஒரு கடிதம் வரைக.

3. பிசிராந்தையார் எடுத்துக்காட்டிய நாட்டுச் சிறப்பை விளக்கி வரைக.

III. 1. பிரித்து எழுதுக :—நற்சுவை, நற்றெழில், புறநானூறு, ஈரா யிரம், ஆன்றவிந்து, என்றுய்ந்து, கோலோச்சும்.

2. யான் + எனது—யானெனது; இன்னோர் + அன்ன—இன்னோ ரன்ன; பதட்டம் + இல்லாமல் — பதட்டமில்லாமல்—இவ்வாறு நிலை மொழி ஈற்றில் உள்ள மெய்யெழுத்து வருமொழி முதலில் உள்ள உயிர் எழுத்துடன் சேர்ந்து உயிர்மெய்யாகிச் சேர்கின்றன. 'உடல் மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே' என்பது இச்சேர்க்கைக்குரிய விதி யாகும்.

3. இன்பம், நாகரிகம், நற்பண்பு, இரப்போர், பகை, சிற்றினம், ஒழுக்கம், அறநெறி, முன்னேற்றம் —எதிர்ச் சொற்கள் கூறுக.

4. பிறழ்ந்து, அஞ்சும், எண்ணினர், வழுவி, பெய்து, பிறக்கிறது, நடமாடுவர், நிறையும், தேவைப்படுவாள்—எதிர்மறையாக்குக.

5. துணைவன், மூதறிஞர், பெண்டிர், விலங்குகள், இறைவி, தமி ழர், அரசன், ஆண்கள், பலர்—இவற்றைப் பால் மாற்றி எழுதுக.

# 6. உடலோம்பல்

(திரு. வி. கலியாணசுந்தரனார்)

[இவர், 'தமிழ்ப் பெரியார்-தமிழ்த்தென்றல்' என்று சிறப்பிக்கப் பெறும் பேரறிஞர். மனங்கவருமாறு சொற்பொழிவாற்ற இவர் வல்லவராயிருந்தார். அதுபோன்றே எழுதும் ஆற்றலும் பெற்றிருந்தார். இவர் உரைநடையும், செய்யுளுமாகப் பல நூல்கள் இயற்றியவர்.]

இளைஞர்கள் உடலோம்பல்மீது பெருங் கவலை செலுத்துதல் வேண்டும். இவ்வுலக இன்பத்தை நேரிய வழியில் நுகர்தற் பொருட்டே கடவுளால் அளிக்கப்பெற்ற உடைமை இவ்வுடல். இவ்வுடலை இளமையிலே வளப்படுத்திக்கொள்ளல் வேண்டும். இளமையில் உடலைக் காவாது கவலை ஈனமாகக் கிடத்தல், பின்னை இவ்வுலக வாழ்விழந்து துன்புறுதற்குக் கால் கொள்வதாகும். உடல் வளம் பெருத ஒருவன் எச்செல்வம் பெற்றிருந்தாலென்ன ? எப்பேறு பெற்றிருந்தாலென்ன ?

நல்லுடலுக்கு அறிகுறியென்னை ? அதன்கண் ஊரும் அழகேயாகும். அழகிலா உடல் நோயுடல் என்பதில் என்ன ஐயம் ? அவ்வழகுக் கடவுள் கோவில் கொள்ளும் அகவை எது ? இளமை இளமை என்று சொல்லவும் வேண்டுமோ ? இளமை அழகுக்குரியது. இக்கால இளைஞர்கள் முகத்தில் அழகு ஒழுகுகிறதா ? இளைஞர்களல்லவோ நாட்டின் செல்வம் ? அச்செல்வம் எந்நிலையிலிருக்கிறது ? அதை உன்ன உன்ன உள்ளங் குழைகிறது.

பொதுவாக நமது நாட்டு இளைஞர்களையும், சிறப்பாகப் பள்ளி மாணுக்கர்களையும், நோக்குழி நாட்டுச் செல்வத்தின் நிலை புலனாகும். விழுந்த கண்ணும், வளைந்த முதுகும், சரிந்த தோளும், உடைந்த மார்பும், தளர்ந்த நடையுமுடைய உடலில் அழகுக் கடவுள் எங்ஙனம் கோவில்கொள்ளும் ? அழகென்பது யாது ? அழகு என்பது நிறத்தில், மயிர் நீவலில், மூக்குக்கண்ணுடியில், கழுத்துச் சுருக்கில், பட்டுடையில், பிற அணியில் அமைந்திருப்பதன்று. மூளை, இதயம், நுரையீரல், மண்ணீரல், குண்டிக்காய்

முதலிய பேருறுப்புக்கள் செழிய நிலையில் நின்று, ஒழுங்குபெறக் கடனுற்றலால் உறும் நரம்புக் கட்டினின்றும் - தடைபடாக் குருதியோட்டத்தினின்றும் முகிழ்க்குந் தசையிடை யரும்புவது அழகாகும்.

இவ்வழகு அரும்பாதொழிவதற்கு மூலகாரணம் மலச் சிக்கலே யாகும். வியர்வை முதலிய அழுக்குகளும் வெளி வராது, ஆங்காங்கே தேங்கலும் மலச்சிக்கலின்பாற் பட்டதே. மலச்சிக்கலால் பிணியுறுகிறது. பிணியால் பேருறுப்புக்களின் இயக்கமும், நரம்புக்கட்டும், குருதியோட்டமுங் குலைகின்றன. இக்குலைவால் அழகு உறைதற்கு இடனில்லாமல் போகிறது. ஆகவே மலச்சிக்கல் உறுதவாறு உடலை ஓம்புதல் வேண்டும்.

மலச்சிக்கல் உறுதற்குக் காரணம் என்ன? காரணம் பலபடக் கூறலாம். சுருங்கச்சொல்லுமிடத்து இயற்கையோ டியைந்து வாழாமை, மீதூண், பொருந்தா உணவு, தீயொழுக்கம், செயற்கை முறைகட்கு இரையாதல், கடவுளிடத்து அன்பின்மை, உயிர்களிடத்து அன்பின்மை முதலியவற்றைச் சொல்லலாம்.

நல்லுடற் பேற்றிற்கெனப் பெருமுயற்சி செய்யவேண்டுவதில்லை. வைகறைத் துயிலெழப் பழகுதல் வேண்டும். எழுந்து காலைக்கடனை முடித்துக்கொண்டு வியர்வை சிந்த ஏதேனும் உடற்பயிற்சி செய்தல் வேண்டும்.

உடற்பயிற்சிகள் பல திறத்தன. அவரவர் உடல்நிலைக் கேற்ற வண்ணம் அவரவர் ஏதாயினும் ஒன்றைக் கொள்ளலாம். தண்டால், நீந்தல் முதலியன சிறப்பாகக் குறிக்கத்தக்கன. எல்லாருங் கொள்ளத் தக்கதும் எளியதுமாயிருப்பது ஒன்று. அஃது உலாவுதல். இதனல் நடையில் உடற்பயிற்சியும், காற்றிடை மூழ்கலும், ஞாயிற்றொளியில் தோய்தலும் நிகழ்ந்து விடுகின்றன. பின்னே நறுநீராடிக் கடவுளை நினைந் துருகி, உள்ளத்தை அன்புமயமாக்கிப் பொருந்திய உணவு கொள்ளவேண்டும்.

உணவு முறைகள் பெரிதும் கவனித்தற்பாலன. முதலாவது வேளை நாழியின்றிச் சாப்பிடுவதை நிறுத்தல் வேண்டும்.

பசித்தோற்றம் இல்லாதபோது எக்காரணம் பற்றியும் உணவு கொள்ளலாகாது.

மீதூண் கொள்வது அறியாமை. நோய்க்கும் அகால மரணத்திற்கும் அடிகோலுவது மீதூண் ஆகும். முன்னே உண்டது செரிப்பதற்குள் மேலே உண்டு உண்டு சுமை சுமத்திக் கொண்டிருந்தால் ஈரலுக்குச் சவலே ஏற்படும். பின்னே மற்றப் பேருறுப்புக்கட்குக் கேடு நிகழும். அதனுல் பிணியும் அகால மரணமும் நேரும்.

பொருந்தாவுணவுங் கூடாது. இப்பொழுது நமது நாட்டில் மக்களில் பலர் பொருந்தா உணவு உண்டு, பலதிற நோய்வாய்ப் பட்டு, அகால மரணத்துக்குட் படுகின்றனர். நமது தென்னுட்டார்க்கு ஜீவாதார உணவுப் பொருளாயிருப்பது அரிசி. அவ்வரிசி இயந்திரத்தால் நன்கு தீட்டப்படுகின்றது. தவிட்டுக் கொழியல் சீரணத்துக்கெனக் கடவுளால் அமைக்கப்படுவது. அது நீங்கிய அரிசி பொருந்திய உணவாகுமா? கொழியல் நீங்காத கைக்குற்றலரிசியைச் சமைத்துண்பது சிறப்பு. கைக்குற்றலாலுங் கொழியல் நீங்குதலாகாது என்பது கவனிக்கத்தக்கது. சமையல் மட்பாண்டங்களில் செய்வதே பொருத்தம்.

காய் கீரை முதலியவற்றை நாமே வீட்டுக் கொல்லேகளில் பயிரிட்டுக் கொள்வது நலன். ஞாயிற்றெளியிலுள்ள ஒருவிதச் சத்து, காய் கீரைகளிற் புகுந்து படிகிறது. அச்சத்து நீங்குதற்குள் அவைகளேச் சமைத்துச் சாப்பிடுதல் வேண்டும். இரண்டு நாள் மூன்று நாள் வண்டிகளில் அடிபட்டு வறண்டு சத்திழந்த காய், கீரைகளேச் சாப்பிடுவது வெறும் மரத் துகளேத் தின்பதையொக்கும். காய்கறிகளில் அளவுகடந்த புளி காரம் பெய்து சமைப்பது கூடாது. நமது தென்னுட்டார்க்குப் புளி காரப் பித்து என்று விடுமோ? அறிகிலேன்.

புலால் உணவுப்பித்து மற்றென்று. புலால் உணவில் உடல் உரம் உண்டு என்று சிலர் கருதுகிருர்கள். புலால் உணவில் அமிழ்ந்து கிடந்த மேல்நாட்டு அறிஞர் பலர் இப்பொழுது புலால் உணவின் புன்மை தெரிந்துவருகிருர்கள். புலால் உணவு பொருந்திய உணவின்பாற்பட்டதன்று என்று அன்னுர் ஆராய்ச்சி முறை

யுடன் பல நூல்கள் எழுதியிருக்கிறார்கள். நம் முன்னோர்கள் சீவகாருணியத்தை அடிப்படையாகக் கொண்டு புலாலுணவை மறுத்துக்கூறினார்கள். மேல்நாட்டு அறிஞர்கள், "புலால் உணவால் உடல் வளத்துக்கே கேடு உண்டு" என்பதை ஆராய்ச்சியால் நிறுவிக்காட்டி அவ்வுணவை மறுக்கிறார்கள். ஆதலால் உடல்நலன் விரும்புவோர் புலாலுண்ணாதிருப்பாராக!

காப்பி, டீ, கொக்கோ, ஓவல்டைன் முதலிய குடிகளையுந் தொலைத்தல் வேண்டும்; குளிர்மிகுந்த மேனாட்டறிஞரே அவை களை இப்பொழுது விலக்கி வருகிறார்கள். வெம்மை நாட்டில் வாழும் நமக்கு அக்குடிகள் எற்றுக்கு? நமது நாட்டில் என்புருக்கி நோயைப் பெருக்கிவருவன அக்குடிகளே யாகும். அப்பானங்கட்குப் பதிலாக நீர்மோர், இளநீர் முதலியன கொள்ளலாம்.

கள், சாராயம் முதலியவற்றின் கொடுமையை ஈண்டுக் குறிக்க வேண்டுவதில்லை. இப்பொல்லாக் குடிகளால் மக்களின் ஈரல் முதலிய உறுப்புக்கள் அரித்து அரித்து எரிக்கப்படுகின்றன. இவைகளை கனவிலும் மறந்துங் கருதலாகாது.

புது நாகரிகத்தால் வேறொரு கொடுமை சிறப்பாக இளைஞர் களிடைக் காட்டுத் தீப்போல் பரவி வருகிறது. அஃதென்னை? சுருட்டு, சிகரெட் முதலியன பிடித்தல். சிறுசிறு குழந்தைகளின் வாய்களும் புகை இயந்திரங்களாக மாறி விடுகின்றன. அவர்கள் தங்கள் நுரையீரலும் இதயமும் அப்புகை வெம்மையால் எரிக்கப் படுவதைத் தொடக்கத்தில் உணர்கிறார்களில்லை. நாளடைவில் இளைஞர்கள் அழகிழந்த என்புக் கூடுகளாகின்றார்கள். உடலுக்குக் கேடு விளைக்கத்தக்க வழக்க ஒழுக்கங்களில் இளைஞர்கட்குப் பற்றும் பிடிவாதமும் உண்டாதல் தவறு. அத்தீப் பயிற்சியுடைய இளைஞர்கள், மெல்ல மெல்ல அதை ஒழிப்பார்களாக!

நல்லொழுக்கம் உடலோம்பலுக்கு இன்றியமையாதது. மீதூண் கொள்ளாது பொருந்திய உணவு கொள்ளும் ஒருவன், ஒழுக்கங்காவா தொழிவானேல், பயன் விளையாது. நல்லுணவு

நல்லொழுக்கத்தின் பொருட்டே கொள்ளப்படுகிறது. ஒழுக்கம் உடல் நலனுக்கு உயிர்போன்றது. 'ஒழுக்கம் விழுப்பந்தரலால் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படு' மென்றார் நாயனார்.

நமது நாட்டின் சிலம்பப் பயிற்சியை உங்கட்கு நினைவூட்ட விரும்புகின்றேன். பண்டை நாளில் நமது நாட்டில் முனிவர்கள் உள்ளிட்ட பலரும் சிலம்பம் பயின்று வந்தனர். இப்பொழுது அதன் நிலை எவ்வாறிருக்கிறது? நகரங்களில் அதன் பெயரே மறைந்துவிட்டது. அது தத்தாரிகளின் ஆட்டத்துக்குரியதென் றுஞ் சில விடங்களில் கருதப்படுகின்றது. சிலம்பத்துறை ஒவ்வொன்றும் உடலோம்பலுக்குரியது. அஃதெங்ஙனம் ஒரு சிற்றினத்துக்கு மட்டும் உரியதாகும்? அது குறித்து ஈண்டுப் பலபடப் பேசாது, நமது நாட்டுச் சிலம்பப் பயிற்சியை உயிர்ப்பிக்க வேண்டுவது இளைஞர் கடமைகளுள் ஒன்று என்று சுருங்கக் கூறுகிறேன்.

## அருஞ்சொற்பொருள்

உடலோம்பல் - உடலைப் பேணுதல்; நுகர்தல் - துய்த்தல்; கால் கொள்ளல் - அடி கோலுதல்; அகவை - வயது; உன்ன - நினைக்க; நீவல் - சீவுதல்; முகிழ்த்தல் - தோன்றுதல்; இயைந்து - பொருந்தி; மீதூண் - மிகுதி உணவு; கொழியல் - தவிடு நீங்காத அரிசி; ஓர்மின் உணருங்கள்.

## பயிற்சி

I. விடை எழுதுக:

1. 'உடலோம்பலில் இளைஞர்கள் கவலை கொள்ள வேண்டும்' ஏன்?

2. அழகு குறித்துத் திரு. வி. க. அவர்கள் கூறுவதென்ன?

3. மலச்சிக்கல் எதனால் உண்டாகிறது? அதனால் ஏற்படும் தீமை யாது?

4. நல்லுடல் பெறுவதற்கு என்ன செய்தல் வேண்டும்?

5. 'உடற் பயிற்சிகள் பலதிறத்தன'— அவை யாவை?

6. மீதூண் கொள்வது கூடாது எனப்படுவதேன்?

7. பொருந்தா உணவு எது? அதனால் வரும் தீமை யாது?

8. பொருந்திய உணவு எது?

9. புலால் உணவு பற்றி மேனுட்டார்—கீழ்நாட்டார் கருதுபவை யாவை?

10. நாம் எவ்விதப் பானங்களை ஒழித்தல் வேண்டும்? ஏன்? நமக் கேற்ற பான வகை யாது?

II. 1. ஆசனப் பயிற்சியால் ஏற்படும் நன்மைகள் பற்றி ஒரு கட் டுரை எழுதுக.

2. உடல் உரம் தரும் உணவுகள் குறித்து உயிர்ச் சத்துக்களை வகைப்படுத்தி ஓர் அட்டவணையை வரைக.

III. 1. உடலோம்பல், நுகர்தற் பொருட்டு, இவ்வுலகம், இளைஞர்க ளல்லவா, பேருறுப்புக்கள், தசையிடையரும்புவது, மலச்சிக்கல், அரும் பாதொழிதல், நுரையீரல்—இவற்றைப் பிரித்துக் காட்டுக.

2. எ + பேறு—எப்பேறு. அ + செல்வம்—அச்செல்வம். இ + நிலை யில் – இந்நிலையில்— இவ்வாறு எகர வினு எழுத்தின் முன்னும், அ, இ, உ எனும் சுட்டு எழுத்துக்களின் முன்னும், வருமொழி முதலில் உயிரெழுத் தும் யகரமும் தவிர, மற்ற எழுத்துக்கள் வந்தால் அவை இரட்டிக்கும்.

"எகர வினுமுச் சுட்டின் முன்னர்
உயிரும் யகரமும் எய்தின் வவ்வும்
பிறவரின் அவையும்..." என்பது விதி.

# 7. திருவிழா

(திரு. நாவல பண்டித ந. மு. வேங்கடசாமி நாட்டார்)

[இவர், அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தின் தமிழ்த் துறைத் தலைவராயிருந்தவர்; கரந்தைப் புலவர் கல்லூரியின் தலைவராகப் பணியாற்றியவர். நூலாசிரியர்; உரையாசிரியர்; சிறந்த பேச்சாளருமாவர்.]

விழவு என்பது கொண்டாட்டம் அல்லது களியாட்டத்தைக் குறிக்கும் தமிழ்ச் சொல். இது சாறு என்னும் பெயராலும் வழங்கும். நக்கீரர் பாடிய திருமுருகாற்றுப் படையில் "ஊரூர் கொண்ட சீர்கெழு விழவினும்" என்றும், "சாறயர் களத்து வீறுபெறத் தோன்றி" என்றும் இரு சொல்லும் பயின்றிருத்தல் காண்க. மக்கள் யாவரும் இன்பத்தை விரும்புகின்றனரென்பது கண்கூடாய உண்மை. இவ்வுலகிலே மக்கள் இன்ப நுகர்ச்சியின் பொருட்டுச் செய்யும் கொண்டாட்டமெல்லாம் விழவு என்னும் பெயரால் வழங்குதற்குரியனவே. யாற்றிலே புதுப் புனல் வழிந்துழி ஆடவரும் மகளிரும் சென்று நீராடி இன்பந் துய்க்கும் விளையாட்டுக்கள் புதுப் புனல் விழவு எனக் கூறப் படும். இங்ஙனமே கடற்கரைக் கானல் விளையாட்டு, உண்டாட்டு ஆய விழாக்கள் மிக்கிருந்தவென்பது பழைய தமிழ் நூல்களினுள் அறியப்படுகின்றது. முன்பு காட்டிய "ஊரூர் கொண்ட சீர்கெழு விழவினும்" என்னும் தொடரே அக்காலத்து ஒவ்வோர் ஊரிலும் விழாக் கொண்டாடப்பெற்று வந்ததென்பதற்குச் சான்ருகும். அகப் பொருளிலே ஊர் துஞ்சாமை என்பதோர் துறையுளது. ஊரிலுள்ளாரெல்லாம் விழாக்கொண்டாடுதலால் இரவில் துயிலாதிருப்பர் என்பது அதனுற் பெறப்படுகின்றது. இங்ஙனம் நகரங்களிலும், ஊர்களிலும் விழாச் செய்தல் மிக்கிருந்த செய்தியானது அக்காலத்து மக்கள் செல்வத்திலும் இன்பத்திலும் சிறந்திருந்தனரென்பதைப் புலப்படுத்தாநிற்கும். செல்வமும், இன்பமும் நாட்டினை அழகு செய்வன என்பது,

"பிணியின்மை செல்வம் விளைவின்பம் ஏமம்
அணியென்ப நாட்டிற்கிவ் வைந்து"

என்று தெய்வப் புலவராலும் கூறப் பெற்றுள்ளது. பழைய புலவர்கள் 'விழவு மலி மூதூர்,' 'விழவு மேம்பட்ட பழவிறல்

மூதூர்' என்று இங்ஙனம் அக்காலத்துப் பதிகளைச் சிறப்பித்துக் கூறியிருப்பது விழா ஒன்றிலிருந்தே செல்வப் பெருக்கு முதலிய வற்றை அறிந்து கொள்ளலாகும் என்பதனைக் காட்டுகின்றது.

இனி, இத்தெய்வங்கட்குச் செய்யப்படும் இத்திருவிழாக்கள் தாமும் குறிஞ்சி, முல்லை முதலிய வெவ்வேறு நிலத்து மக்களால் வேறு வேறு பெயரினையுடைய கடவுளரைக் குறித்து வெவ்வேறு முறைமையாகச் செய்யப்படுவனவாகும். அவையெல்லாம் ஈண்டு விரித்தற்கு இடனின்று. இரண்டொரு திருவிழாக்கள் பண்டு நடந்த முறைமையை அறிந்து கொள்ளுதல், அதனோடு இப் பொழுது திருவிழா நிகழும் இயல்பினை ஒப்பிட்டுப் பார்த்தற்கும், சீர்திருத்தம் செய்வதற்கும் உதவியாயிருக்குமாதலின், அதுவே இங்குக் கூறக் கருதியதாகும்.

இறையனாரகப் பொருளுக்கு நக்கீரர் இயற்றிய உரையில் மதுரை ஆவணியவிட்டம், உறையூர்ப் பங்குனியுத்திரம், கருவூர் உள்ளி விழா—என மூன்று பெரிய திருவிழாக்கள் கூறப் பெற் றுள்ளன. அகநானூறு முதலியவற்றிலும் இத்திருவிழாக்கள் குறிக்கப்பட்டுள்ளன. ஆனால் இவை இவ்விவ்வாறு நடந்தன வென்று நன்கு அறிந்து கொள்வதற்கு ஆதரவுகள் கிடைக்க வில்லை. கார்த்திகைத் திங்களிலே திருக் கார்த்திகை நாளில் இர விலே விளக்குகளை நிரைநிரையாக வைத்து, மாலைகளால் அணி வித்துப் பலரும் கூடி மகிழ்வுடன் விழாவயர்வர் என்ற செய்தி அகநானூற்றினுள் நக்கீரர் பாட்டு ஒன்றினால் வெளியாகிறது. இவ்வாற்றால் ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளின் முன்பே தமிழகத்தில் இத்தகைய திருவிழாக்கள் நடைபெற்று வந்தன என்பது நாம் பெரிதும் பாராட்டுதற்கும் மகிழ்ச்சியடைதற்கும் உரிய செய்தியன்றோ ?

இனிப் பழைய நாளிலே காவிரிப்பூம்பட்டினத்தில் இந்திர னுக்கு விழாச் செய்த வரலாறு சிலப்பதிகாரம், மணிமேகலை என்னும் இருபெருங் காப்பியத்துள்ளும் விளக்கமாகக் கூறப் பெற்றுள்ளது. மணிமேகலை விழாவறை காதையால் அறியப் படும் செய்தி பின்வருவது :

காவிரிப்பூம்பட்டினத்திலிருந்த பல சமயவாதிகளும், சோதி டரும், அமைச்சர் முதலிய ஐம்பெருங் குழுக்களும், எண் பேரா

யத்தாரும், பிறரும் ஒருங்கு கூடியிருந்து, பண்டு அகத்திய முனிவர் கட்டளையால் தூங்கெயிலெறிந்த தொடித்தோட் செம்பியன் என்னும் சோழ மன்னனுயை இந்திரனது உடன்பாடு பெற்றுப் புகார் நகரிலே இருபத்தெட்டுநாள் நடத்தியதும், பின்னர் ஆண்டு தோறும் அங்ஙனமே நடத்தப் பெற்று வருவதுமாகிய இந்திர விழாவை நடத்தத் தவறினால் நிகழக்கூடிய தீமைகளையெல்லாம் நன்கு சூழ்ந்து விழாவினை நடத்துவதென்று உறுதி செய்து கொண்டு அதனை நகரத்தாருக்கு அறிவிக்கும்படி முரசறைவோனுக்குச் சொல்லினர். முரசடிக்கும் முதுகுடியிற் பிறந்தோனாகிய அவன், வச்சிரக் கோட்டத்தில் வைக்கப்பட்டிருந்த முரசினை யானையின் பிடரியிலேற்றி, முதற்கண் ஊரினை வாழ்த்தி, 'வானம் திங்கடோறும் மும்மழை பொழிக; மன்னவன் கோட்கள் நிலைதிரியாமைக்குக் காரணமாகிய செங்கோலினன் ஆகுக; அறிஞர்களே, இந்திர விழா நடக்குங் காலத்தில் எல்லாத் தேவரும் இங்கே எழுந்தருளுவர் என்பது பெரியாரின் துணிபாதலின் வீதி முதலியவற்றில் நிறை குடங்களும், பொற்பாலிகைகளும், பாவை விளக்குகளும் ஆகிய இவற்றைப் பரப்புங்கள்; குலைக்கமுகும், குலைவாழையும், வஞ்சியும், பூங்கொடியும், கரும்பும் ஆகிய இவற்றைக் கட்டுங்கள்; திண்ணைகளின்மேல் தூண்களில் முத்துமாலைகளைத் தொங்கக் கட்டுங்கள்; வீதிகளிலும் மன்றங்களிலும் பழமணலை மாற்றிப் புது மணலைப் பரப்புங்கள்; பலவகையான துகிற் கொடிகளையும் மாடங்களிலும் வாயில்களிலும் கட்டுங்கள்; கண்ணுதற் பெருமான் முதலாகச் சதுக்கப் பூதம் இறுதியாகவுள்ள தெய்வம் உறையும் கோவில்களில் அவ்வத் தெய்வங்கட்கேற்ப வெவ்வேறாகச் செய்யப்படும் கடன்களை அறிந்தோர் செய்யுங்கள்; அறவுரைகள் புரிதற்குரிய அறிஞர்களே, பந்தரிலும் அம்பலங்களிலும், சென்று விரிவுரை புரியுங்கள்; சமய வாதிகளே, பட்டி மண்டபத்தை அடைந்து முறைப்படி வாதம் புரியுங்கள்; யாவரும் யாவரிடத்தும் பகைமையும் வெகுளியும் கொள்ளாதிருங்கள்' என்று கூறி முரசறைந்து, 'பசியும் பிணியும் பகையும் நீங்கி, வசியும் வளனும் சுரக்க' என வாழ்த்தி இங்ஙனம் விழாவினைத் தெரிவித்தனன்.

இதிலிருந்து அவ்விழாவின் நோக்கம் எவ்வளவு உயர்ந்த தாகக் காணப்படுகிறது பாருங்கள்! ஒரு பெரிய திருவிழா நடத்துவதென்றால் நகரத்திலுள்ள பலவகை மாந்தர்களும் ஒருங்கு கூடியிருந்து ஆராய்ந்து முடிவு செய்வதென்ற வழக்கம் அக்காலத்து மக்களின் ஒற்றுமையையும் ஆளுந் திறத்தையும் நன்கு விளக்குகின்றதன்றோ? திருவிழா நடக்கும் ஒவ்வொரு நாளிலும் நகரத்தின் பல பக்கங்களிலும் அறவுரைக் கட்டுரைகளும் சமய வரலாற்று ஆராய்ச்சிகளும் நிகழுமென்பது திருவிழாவின் பயனை எவ்வளவு மிகுதிப்படுத்திக் காட்டுகின்றது! கல்வியும் சமய அறிவும் குறைந்துள்ள இக்காலத்தில், திருவிழாக்கள் நடைபெறும்பொழுது இத்தகைய செயல்கள் நிகழுமேல் எவ்வளவு பெரும் பயனுண்டாகும்! இக்காலத்தில் திருவிழாக்களை நடத்தி வைக்கும் அறநிலையத் தலைவர்களும், அறப் புரவலர்களும், பிறரும் இரண்டாயிரம் ஆண்டுகளின் முன்பு நம் முன்னோர் செய்து காட்டிய வழிகளை இனியேனும் பின்பற்றியொழுகுமாறு பெருமான் திருவருள் பாலிப்பானாக.

## அருஞ்சொற்பொருள்

வீறு - உள்ள உணர்ச்சிப்பெருக்கு; பயின்றிருத்தல் - வழங்கியிருத்தல்; கண்கூடாய - கண்ணுக்குத் தெரிந்த; புதுப்புனல் - புதுவெள்ளம்; உண்டாட்டு - விருந்துண்ணல்; துஞ்சாமை - துயிலாதிருத்தல்; ஏமம் - பாதுகாப்பு; விறல் - வலிமை; பதி - ஊர்; பண்டு - பழங்காலத்தில்; நிரைநிரை - வரிசை வரிசை; விழாவயர்வர் - விழாக் கொண்டாடுவர்; தூங்கெயில் - அசையும் கோட்டை; எறிந்த - அழித்த.

## பயிற்சி

I. விடை எழுதுக :—

1. விழவு என்பது என்ன?

2. அது தமிழ் நூல்களுள் எவ்வாறு வழங்கப்படுகிறது?

3. இவ்வழக்காற்றால் நாம் அறிவதென்ன?

4. கார்த்திகைத் திருவிழாவைப்பற்றி அகநானூற்றிலே நக்கீரர் யாது கூறுகின்றார்?

5. இதனால் அறியப்படும் செய்தி யாது?

6. காவிரிப்பூம்பட்டினத்து இந்திர விழாவைப்பற்றி ஒரு குறிப்புத் தருக.

7. முரசடிக்கும் முதுகுடிப் பிறந்தோன் இந்திர விழாவைப்பற்றிப் பொது மக்கட்குத் தெரிவித்ததென்ன ?

8. பண்டைக் காலத்தில் நிகழ்ந்த திருவிழாக்களின் நோக்கத்தை நன்கு விவரிக்க.

II. 1. தமிழ் நாட்டில் பண்டைக் காலத்தில் திருவிழா எவ்வாறு கொண்டாடப்பட்டது என்பதைப்பற்றி ஒரு கட்டுரை எழுதுக.

2. திருவிழாவால் மக்கள் அடைந்த பயன்களைப்பற்றி விளக்கி வரைக.

III. 1. களியாட்டம், சாறயர், வழிந்துழி, நீராடி, மிக்கிருந்த, துயிலா திருப்பர், விளைவின்பம், அணியென்ப, பிணியின்மை, இடனின்று, விழா வயர்வர், விழாவறை—பிரித்து எழுதுக.

2. மக்கள், ஆடவர், மகளிர், ஊரார், இன்பம், தெய்வம், கடவுளர், அமைச்சர், அவன், சொல்லினர்—இவை என்னென்ன பால்கள் எனக்கூறிப் பின் பால் மாற்றி வரைக.

3. வந்து+கொண்டு=வந்து கொண்டு. சென்று+பார்த்தான்= சென்று பார்த்தான். வயிறு+காய்ந்தது=வயிறு காய்ந்தது. மாடு+ பிடி=மாடு பிடி. மார்பு+குடைச்சல்=மார்பு குடைச்சல், அஃது+ பார்=அஃதுபார். இவை சேர்கையில் வல்லினம் மிகாது. அதாவது குற்றியல் உகரத் தொடர்களில் வன்றொடர்க்குற்றியலுகரத் தொடர் ஒன்றே புணர்கையில் வல்லினம் மிகும். மென்தொடர்க்குற்றியலுகரத் தொடர் அல்வழியில் மிகாது. மற்றக் குற்றியலுகரத் தொடர்கள் புணர்கையில் எவ்வகையானும் வல்லினம் மிகாது.

கன்னிமாரா பொது நூலகம் சென்னை-600 008.
146494.
TB
031(9)
N57

2C
22/1
RSA
1127

# PAINTAMIZH CHOLAI

(IV Form—Intensive Course)

*by*

Pulavar C. MARUDHAVANAN
AND
Pulavar C. ELANKOVAN

**LOTUS PUBLISHERS**
**2, Kondi Chetty Street, Madras-1**

*Copyright ]*

**[Price: As. 12** *or*
**75 nP.**